






# தமிழரசு

1.6.1994

ரூ.3







பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


பத்தாவது நிதிக் கமிஷன் கூட்டம்.................. 2

இடைத் தேர்தல் முடிவு கள்.................. 6

குடும்ப நலம் பேணுவோம்!
கவிதை.................. 9

மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க
ரகுநாத விஜய ரகுநாத
சேதுபதி.................. 10

நூல்நயம்.................. 12

வைகாசி மாதச் சாகுபடிகள்.................. 13

1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட
அரிய ஜேஷ்டா சிற்பம்
கண்டுபிடிப்பு.................. 15

வழிகாட்டும் பெரியார் மாவட்டம்.................. 17

செப்புத் திருமேனிகளின் அழிவும்
பாதுகாப்பும்.................. 19

ஆழ்வார்கள்.................. 24

கல்வி (கவிதை).................. 31

உலகை அச்சுறுத்தும் எய்ட்ஸ்.................. 33

சிலம்பாட்டம்.................. 39

பழ விற்பனையில்
முன்னேற்றம் காண.................. 41

குறளின் குரல்.................. 45

மூட்டு வீக்கமும் இதய பாதிப்பும்.................. 47


## இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (3)

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.


தமிழரசு
திருவள்ளுவராண்டு: 2025
வைகாசித் திங்கள்: 18

மலர்: 24 இதழ்: 23

1.6.1994

விலை ரூபாய் மூன்று

# மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின்

## மூன்றாண்டுச் சாதனை மலர்



- அரசின் ஆக்கப்பணிகளின் அரிய தொகுப்பாக—
- கண்ணைக் கவரும் வண்ண முகப்புடன் நம் எண்ணம் கவரும் எழில் மலராக மலர்கின்றது!

இது ஒரு,

முத்தான மலர்!
சத்தான படையல்!

## தமிழரசு

- 16.6.94 மற்றும் 1.7.94 இதழ்கள் இணைந்து வருகின்றன— இணையிலாச் சாதனை மலராக!

## தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க




அட்டை சொல்லும் கட்டுரை

## "தமிழ்நாட்டின் கடன் பாக்கியில், மத்திய அரசு 50 சதவீதத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும்!"

# பத்தாவது நிதிக் கமிஷன் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் தொடக்கவுரை

பத்தாவது நிதிக் கமிஷனின் கூட்டம் 30.5.94 அன்று தலைமைச் செயலகத்தில் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.45 மணி வரை நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடனும், மாநில அதிகாரிகளுடனும் கலந்து கொண்டார்கள். பத்தாவது நிதிக் கமிஷன் சார்பில், அதன் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களும், அதன் உறுப்பினர்கள் மற்றும் மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 10வது மாடியில் உள்ள புதிய மாநாட்டுக் கருத்தரங்கு கூட்டத்தில், பத்தாவது நிதிக் கமிஷன் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களை முதலில் வரவேற்றார். பின்னர் கூட்டம் துவங்கிய பின்பு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 20 நிமிடங்கள் வரை தனது தொடக்க உரையை ஆற்றினார். தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு தொடர்பான பலவேறு பிரச்சினைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அப்போது அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது;

திரு. கே.சி. பந்த் தலைமையிலான 10வது நிதிக்குழு, கடினமான சூழ்நிலையில் மத்திய மாநில நிதி உறவுகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில், மாநிலங்களுக்கு நிதி வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு மிக அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் ஒன்றாகும். மொத்த நிலப்பரப்பில் 4 சதவிகிதம்தான் தமிழ்நாட்டில் உள்ளது. இதில், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7 சதவிகிதம் மக்கள் வசிக்கிறார்கள். நகர்ப்புற மக்கள் தொகையைப் பொறுத்த மட்டில், நாட்டின் மற்ற மாநிலங்களுடன் சதவிகித அடிப்படையில் ஒப்பிடுகையில் தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது. இங்கு வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 9.52 சதவிகிதமாகும். இது நாட்டில் அதிகமான சதவிகிதம் கொண்ட மாநிலங்களில் ஒன்றாகும்.

1987-88-இல், மத்திய திட்டக் குழுவின் நிபுணர் குழு கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டில் 45.13 சதவிகிதம் மக்கள் ஏழைகள். மாநிலத்தின் நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. தொலை தூரங்களிலிருந்து வரவழைக்கப்படும் நிலக்கரி மற்றும் இரும்பை நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. வளர்ச்சிக்குச் சவால் விடும் இவ்வளவு இடர்ப்பாடுகளிடையும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் பெருமைப்படும் அளவுக்குச் சாதனை படைத்துள்ளோம்.

1981-91-ஆம் ஆண்டுகளில், கேரளத்துக்கு அடுத்தபடியாகத் தமிழகம் மக்கட்தொகையைக் கட்டுப்படுத்துவதில் சாதனை புரிந்துள்ளது. சமூகத் துறையில் எங்களது சாதனையை எல்லோரும் அறிவார்கள். 1991-92 மற்றும் 1993-94 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி, திட்டக்குழு ஒப்புதல் அளித்த தொகைக்கு மேல் தமிழ்நாடு அரசு திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்தது. ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டங்களில் தமிழக அரசு சமரசம் செய்து கொள்ளவில்லை.

நிர்ணயித்த அளவைவிட, பணவீக்கம் உயர்ந்ததால் ஒன்பதாவது நிதிக் கமிஷனின் பரிந்துரைகள் பயனற்றுப் போய் விட்டன. இதன் காரணமாக, மாநிலங்களின் நிதி நிலை பாதிக்கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக மாநிலங்களின் பொறுப்புகள் அதிகரித்துவிட்டன.

உற்பத்தி வரி வசூலில் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கு பல ஆண்டுகளாக அதிகரிக்கவில்லை. தற்போதுள்ள 45 சதவிகிதப் பங்கை 60 சதவிகிதமாக உயர்த்த வேண்டும். பற்றாக்குறை மாநிலங்களுக்கென்று கூடுதலாகப் பங்கீடு அளிப்பதை நிறுத்த வேண்டும். உற்பத்தி வரி வருமானத்தில் முதல் 2 ஆண்டுகளில் 52.5 சதவிகிதப் பங்கும், பின்னர் அடுத்த மூன்றாண்டுகளில் 60 சதவிகிதப் பங்கும் மாநிலத்திற்கு அளிக்க முன்வர வேண்டும்.

தொழில் நிறுவனங்களிடம் வசூலிக்கப்படும் வருமான வரியில் கார்ப்பரேஷன் டாக்ஸ் 20 சதவிகிதத்தை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று 10-வது நிதிக்குழு பரிந்துரை செய்யவேண்டும். ஒப்படை வரி வசூலிக்கும் உரிமையை உடனே வழங்க வேண்டும். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கூடுதல் கலால் வரியில் மாநில அரசுக்குப் பங்கு அளிக்க





வேண்டும்.

தமிழ்நாடு அதிகமாக வருவாய்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையைக் கட்டுப்படுத்த நாங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளோம். இதைச் சரிசெய்ய இன்னும் சற்று காலம் ஆகும். அதுவரை தமிழகத்திற்கு நிதியுதவி அளித்து உதவவேண்டும்.

மதுவிலக்கினால் ஏற்பட்டுள்ள நிதி இழப்பை நிதிக் கமிஷன் கணக்கில் கொள்ள வேண்டும். நிதி இழப்பில் குறைந்தபட்சம் 50 சதவிகிதத்தையாவது ஈடு செய்ய நிதிக் கமிஷன் சிபாரிசு செய்ய வேண்டும்.

பல்வேறு துறைகளில் அளிக்கப்பட்டுவரும் மானியங்களை நிறுத்துவது கடினம். மின்சார உற்பத்திக்காக நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து இரயில், கப்பல், பிறகு திரும்பவும் இரயில் மூலமாக நிலக்கரி கொண்டுவர வேண்டியுள்ளது. இதற்கான போக்குவரத்துச் செலவு அதிகமாக உள்ளது. இதற்கு மானியம் தருவதை மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இருந்தாலும் தமிழ்நாடு மானியத்தினை தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த மானியத்தினை மத்திய அரசு தொடர்ந்து வழங்க வேண்டும்.

தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டிலேயே சிறந்த சேவையைச் செய்து வருகிறது. குறைந்த கட்டணத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 1993 டிசம்பரில் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. ஆனால் 1994 பிப்ரவரியில் டீசல் விலை உயர்த்தப்பட்டதால் புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதைச் சரிசெய்ய சற்றுக் கூடுதல் காலமாகும். பொது மக்களுக்காக, மக்களின் நலனுக்காகச் செய்யப்படும், அத்தியாவசியப் பணியில் லாபத்தை எதிர்பார்ப்பது நல்லதல்ல.

மாநிலங்களின் நிர்வாகத்தை நவீனமயமாக்கிட, அதற்கான தேவையை நிதிக்குழு பரிசீலிக்க வேண்டும். பல்வேறு பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மொத்தம் ரூபாய் 3,348 கோடி தேவைப்படுகிறது. இதற்கான விபரங்களைத் தெளிவாக அளித்துள்ளோம்.

தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்த தமிழக அரசு சிறப்பு முயற்சிகள் எடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். இத்திட்டம் ரூ.427 கோடிக்கு வகுக்கப்பட்டுள்ளது. தற்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கடலோரப் பாதுகாப்பு, நெடுஞ்சாலை ரோந்து மற்றும் நெடுஞ்சாலைகளில் சோதனைச் சாவடி அமைத்தல் போன்ற பணிகளுக்காக மேற்கொண்டு ரூபாய் 70 கோடி தேவைப்படுகிறது. ஆகையால் காவல் துறையினை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.500 கோடி தேவைப்படுகிறது.

மேலும், காவல் துறையினரின் வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ.240 கோடி தேவைப்படுகிறது. பஞ்சாபிலும், காஷ்மீரிலும் உள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் முன்கூட்டியே தடுப்பு நடவடிக்கை எடுப்பது நல்லது என்று வலியுறுத்த விரும்புகிறேன். இத்திட்டங்களுக்கு விசேஷ நிதி உதவி வழங்கவேண்டும்.

தமிழ்நாடு தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு சென்னை மாநகர் கடினமான தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதிப்

பட்டது. இதனைச் சரிசெய்யும் வகையில் ஒரு முன்னேற்றத் திட்டத்தினை உருவாக்க வேண்டும். தொடர்ந்து கடல் கரைப் பகுதிகள் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்டதால், ரூ.2,500 கோடி நிதிகேட்டு உலக வங்கியின் உதவியை நாடினோம். ஆனால், ஆந்திர மராட்டியத்துக்கு உதவியளிக்கப்பட்டபோது, துரதிருஷ்டவசமாக, தமிழ கத்திற்குச் சிறப்பு உதவி அளிக்கப்படவில்லை. ஆகையால், மத்திய அரசின் நிதியுதவியுடன், தேசிய இயற்கைச் சீற்ற நிதி ஒன்றினை அமைக்க வேண்டும். இயற்கைச் சீற்றத் தினால் வெகுவாகப் பாதிக்கப் படும் நிலையில் இந்த நிதி சிறப்பு உதவியாக வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மத்திய அரசுக்குத் தரவேண்டிய தற்போதைய கடன் பாக்கியில் 50 சதவிகிதத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

பின்னர் திரு. கே.சி. பந்த் அவர்கள், பத்தாவது நிதிக் கமிஷன் Economic Adviser பல்வேறு விஷயங்கள் குறித்து விளக்கங்களை எடுத்துரைத்தார். பின்பு, பத்தாவது நிதிக் கமிஷன் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களுக்கு, தனது பதில்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறினார். அதன் பின்பு, நிதி ஒதுக்கீடு தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக் கப்பட்டது. பிற்பகல் 1.45 மணியளவில் இந்தக் கூட்டம் நிறைவு பெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்தாவது நிதிக் கமிஷன் தலைவர் திரு. கே.சி. பந்த், அதன் உறுப்பினர்கள் ஆகியோருக்கு, தமிழக அரசின் சார்பில், நினைவுப் பரிசுகளை வழங்கினார். அதேபோல், பத்தாவது நிதிக் கமிஷன் அலுவலர்களுக்கும் நினைவுப் பரிசுகளை வழங்கினார். அதே இடத்தில், அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பகல் விருந்து அளித்தார்.



தற்போது தமிழகத்தில் ஒரு மாபெரும் தார்மீகப் போரையே தொடங்கியுள்ளோம். அது, மது என்ற மாய அரக்கனைத் தமிழகத்தின் மண்ணைவிட்டு அடியோடு அப்புறப்படுத்தும் புனிதப்போர், இந்தப் போரில் முன்னணிப்படை வீரர்களாக நிற்பவர்கள் நமது சிறப்புமிக்க காவல் துறையினர். நாட்டின் நலன் காக்கவும், மக்களைப் பேரழிவிலிருந்து பாதுகாக்கவும் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புனிதப் போரில் நீங்கள் ஒவ்வொருவரும் கர்மவீரர்களாக முழுமனதோடு பங்கேற்றுச் செயல்பட்டு, இந்த அரசுக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தருவீர்கள் என்று நம்புகின்றேன். இதுவரை நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் கண்டு பூரிப்படைகின்றேன். இப்புனிதப் பணி தொடரட்டும். தமிழக ஏழை எளிய மக்கள் முழுமையாக இத்தீமையிலிருந்து விலகட்டும். இப்பணியினை நிறைவேற்றுவதற்கு உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், வசதிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதி அளிக்கின்றேன்.

இன்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையே கனத்த மனதுடன் நமது காவலர்கள் பணிபுரிகின்றார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களது வாழ்க்கையை வளமடையச் செய்து, அமைதியான மனதுடன் அவர்களது கடமைகளை ஆற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது, உள்துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் என்னுடைய கடமையாகும். நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை அரவணைத்துப் பாதுகாப்பது இந்த அரசின் கொள்கையுமாகும். அந்த அடிப்படையில், உங்களுக்கு என் இதயத்தில் ஓர் உயர்ந்த இடம் அளித்துள்ளேன். உங்களது உயர்விற்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டுள்ளேன். அவற்றை விரைவில் செயல்படுத்தவும் இருக்கின்றேன் என்று மட்டும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.**

# இடைத்தேர்தல் முடிவு விவரம்



## பெருந்துறைத் தொகுதி

| | | |
|---|---|---|
| வாக்குப் பதிவு நடைபெற்ற நாள் | : | 26.5.1994 |
| வாக்குகள் எண்ணப்பட்ட நாள் | : | 28.5.1994 |
| சட்டப்பேரவைத் தொகுதி-எண் | : | பெருந்துறை 119 |
| மொத்த வாக்குகள் எண்ணிக்கை | : | 1,69,417 |
| பதிவான வாக்குகள் | : | 1,22,318 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 1,20,443 |
| செல்லாத வாக்குகள் | : | 1,875 |

வெற்றி பெற்றவர்
திரு. பி. பெரியசாமி (அ.இ.அ.தி.மு.க.)

பெற்ற வாக்குகள் : 55,730

| வேட்பாளர் பெயர் | கட்சிவிவரம் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| திருவாளர்கள்... அந்தோணிசாமி, எம். | இந்திய குடியரசுக்கட்சி | 13 |
| ஆறுமுகம், என்.கே. | சுயேச்சை | 29 |
| இளங்காந்தி, இ.கே. | பா.ஜ.க. | 754 |
| கணேசன், கே. | சுயே. | 76 |
| கந்தசாமி கே. | சுயே. | 50 |
| கந்தசாமி, வி.எம். | சுயே. | 23,452 |
| கருத்தபாண்டியன், டி. | சுயே. | 51 |
| காந்தி, சி. | இ.தே.கா. | 12,371 |
| கீழ்நாமக்காரர் கிரிதாத்தி ஆனந்தர், ஜி. | சுயே. | 41 |
| சதாசிவம், எம்.எஸ். | சுயே. | 14 |
| சாமுவேல்ராஜ், ஜி. | சுயே. | 63 |
| சின்னதுரை, பி. | சுயே. | 88 |
| சின்னபொன்னு வாத்தியார், வி.எம். | சுயே. | 170 |
| சுப்பிரமணியம் வி.எம். | அ.ம.இ. | 1969 |
| செல்வகுமார் பிரபு, எல். | சுயே. | 276 |
| தாமு, ஏ. | சுயே. | 172 |
| துரைசாமி, ஓ.சி., | சுயே. | 267 |
| நல்லசாமி கவுண்டர், கே.எஸ். | சுயே. | 112 |
| நல்லப்பன். டி.கே. | சி.பி.ஐ. | 20,449 |
| நாகூர் மீரான் பீர் முகமது, யு. | சுயே. | 58 |
| நாச்சிமுத்து, சி. | பா.ம.க. | 1,895 |
| டாக்டர் பத்மராஜன், கே. | சுயே. | 58 |
| பழனிசாமி, ஓ.சி. | சுயே. | 78 |
| பழனிசாமி, ஆர். | சுயே. | 108 |
| பாலசுப்பிரமணியம், எஸ். | சுயே. | 505 |
| *பெரியசாமி, பி.* | *அ.இ. அ.தி.மு.க* | ***55,730*** |
| பெருமாள், ஏ. | சுயே. | 142 |
| மகேந்திரன், பி. | சுயே. | 188 |
| மணி, கே.எம். | சுயே. | 361 |
| முத்துசாமி, கே. | சுயே. | 26 |
| முனிராஜ், எம். | எம்.ஜி.ஆர்.மு.க. | 15 |
| ராமசாமி, என். | சுயே. | 28 |
| ராஜன், சி. | சுயே. | 446 |
| ராஜா, ஆர். | சுயே. | 35 |
| வரதராஜ், டி. | சுயே. | 17 |
| வீரப்ப கவுண்டர், வி.டி.ஆர்., | சுயே. | 77 |
| வெள்ளிங்கிரி, கே.ஏ., | சுயே. | 238 |
| ஜெயராஜ், கே.எம். | சுயே. | 21 |

# மயிலாப்பூர் தொகுதி

| | | |
|---|---|---|
| வாக்குப் பதிவு நடைபெற்ற நாள் | : | 26.5.1994 |
| வாக்குகள் எண்ணப்பட்ட நாள் | : | 28.5.1994 |
| சட்டப்பேரவைத் தொகுதி-எண் | : | மயிலாப்பூர் 13 |
| மொத்த வாக்குகள் எண்ணிக்கை | : | 1,88,193 |
| பதிவான வாக்குகள் | : | 1,05,955 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 1,04,947 |
| செல்லாத வாக்குகள் | : | 1,008 |

வெற்றி பெற்றவர்
திரு. வி. பாலசுப்பிரமணியன்
(அ.இ.அ.தி.மு.க.)

பெற்ற வாக்குகள் : 40,756

| வேட்பாளர் பெயர் | கட்சிவிவரம் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| திருவாளர்கள்... அநதோணி எட்வர்டு | சுயேச்சை | 18 |
| அப்பன் எம்.ஆர். | சுயே. | 1,766 |
| டாக்டர் அமான்கான் | சுயே. | 21 |
| அரிகிருஷ்ணன். பி. | சுயே. | 11 |
| அருள்மணி. எம் | சுயே. | 4 |
| ஆனந்தன். எஸ். | சுயே. | 4 |
| இரமேஷ் எம்.சி. | சுயே. | 40 |
| இராமஜெயம் என்.பி. | தி.மு.க. | 35,021 |
| இராயப்பன். எம். | சுயே. | 23 |
| இராஜகோபாலன். என். | சுயே. | 149 |
| இனாஸ். ஏ.கே. | சுயே. | 10 |
| இனியதயாளன். ஜி. | சுயே. | 23 |
| உமர்ஹதாப் கே.ஏ. | சுயே. | 12 |
| கனேஷ் கண்ணன் எம்.எஸ்., | சுயே. | 9 |
| கலையரசன் எம். | சுயே. | 20 |
| கிருஷ்ண மூர்த்தி எஸ்.பி., | சுயே. | 26 |
| கீழ்நாமக்காரர் கிரிதாத்தி ஆனந்தர் ஜி. | சுயே. | 42 |
| கீர்த்திவாசன் டி.வி. | சுயே. | 24 |
| குமரேசன்மணி கே. | சுயே. | 36 |
| குமார் டி.எஸ். | சுயே. | 3 |
| குமார் வி. | சுயே. | 17 |
| சக்திவேல் ஜி. | சுயே. | 7 |
| சந்திரன் டி. | சுயே. | 43 |
| சிவகுமார் பி. | சுயே. | 233 |
| சிவசங்கர் டி.ஜே. | சுயே. | 45 |
| சுந்தர்ராமன் எஸ். | சுயே. | 15 |
| சுந்தர்ராஜன் பி. | சுயே. | 910 |
| சுப்பிரமணி எஸ்.பி. | சுயே. | 13 |
| தூர்யமூர்த்தி ஆர்.என். | சுயே. | 9 |
| செல்வம் எம். | சுயே. | 6 |
| செல்வராஜ் எஸ். | பா.ம.க | 564 |
| ஞானவேலு ஆர். | சுயே. | 37 |
| தண்டபாணி எம். | சுயே. | 33 |
| தருமன்பத்தர் கே. | சுயே. | 24 |
| தாணு எஸ். | சுயே. | 10,471 |
| தியாகராஜன் வி. | சுயே. | 75 |
| தியாகராஜன் ஆர். | இ.தே.கா. | 12,436 |
| தீனன் ஐ. | சுயே. | 10 |
| நடராசன் எஸ். | சுயே. | 11 |
| நாகூர்மீரான் பீர்முகமது யு. | சுயே. | 15 |
| டாக்டர் நிர்மலா அருள் பிரகாஷ் | சுயே. | 119 |
| பங்காருசாமி கே. | சுயே. | 33 |
| டாக்டர் பத்மராஜன் கே. | சுயே. | 10 |
| பரமசிவம் பி. | சுயே. | 71 |
| பால்நாடார் பி. | சுயே. | 54 |
| *பாலசுப்பிரமணியன் வி.* | *அ.இ. அ.தி.மு.க.* | ***40,756*** |
| புனிதவேலு எம். | சுயே. | 13 |
| பெருமாள் ஏ. | சுயே. | 10 |
| மல்லிகாம்மாள் எம். | சுயே. | 12 |
| மழைமேனி பாண்டியன் எஸ். | சுயே. | 56 |
| மன்மதன் எம். | சுயே. | 29 |
| மனக்சந்த் நகார் | சுயே. | 11 |
| முருகேசன் யாதவ் ஆர். | சுயே. | 20 |
| ரகுபதி டி. | ஜனதா | 1,080 |
| மயிலை ரவி எஸ். | சுயே. | 158 |
| ராமலிங்கம் ஆர். | சுயே. | 24 |
| ராஜூ சி. | சுயே. | 18 |
| லோகநாதன் (எ) வையகத்தரசு ஆர். | சுயே. | 8 |
| வரததேசிகன் ஓ.ஏ., | சுயே. | 7 |
| வரதராஜ் டி. | சுயே. | 9 |
| வள்ளிவேலன் எஸ். | சுயே. | 15 |
| வாசு டி. | சுயே. | 111 |
| வின்சென்ட் ஜோஸ் வி. | சுயே. | 10 |
| வீரப்ப கவுண்டர் வி.டி.ஆர். | சுயே. | 8 |
| ஜார்ஜ் (எ) ஜார்ஜ்புஷ் | சுயே. | 29 |
| ஜகத்ஜோதி | சுயே. | 13 |
| ஜெயச்சந்திரநாயக்கர் டி. | சுயே. | 8 |
| ஹனீபா எம். | சுயே. | 19 |



# குடும்பநலம் பேணுவோம்

புலவர் சி. துரைசுவாமி.



பூத்துவரும் இளமையிலே புதுமையுறும் காதல்
புனிதமுற ஈன்றோர்கள் பொருத்தமுள்ள பருவம்
காத்திருந்து திருமணமே செய்திடுதல் குடும்பம்
காதலது தம்பதிகள் உள்ளமதில் மலர்ந்து
நேத்திரம்போல் மழலைகளை உலகிடையில் படைத்து
நெஞ்சமது மகிழ்ந்திடுதல் குடும்பநலம் ஆகும்;
மாத்திறமை உற்றிட கல்வி, கலை ஊட்டி
மாப்புகழை மக்கள்பெறல் இல்லறத்தின் சிறப்பாம்
மன்னர்களின் காலத்திலே உன்னதமாய் வாழ்ந்த
மகிமையிலே மாந்தரெல்லாம் வாழ்ந்திடுதல் அறிவே
வென்றிடுவர் படைக்களத்தே வீரமகன் போன்று
வேண்டுகின்ற வகையில் வெற்றி விடுத்திடுதல் வேண்டும்
பன்றியைப்போல் குட்டிகளைப் படைத்திடுதல் அருமை
கன்னியரும் காளையரும் காதல்முறை தழுவி
கற்புடனே குடும்பநலம் பேணிடுதல் உயர்வே
தூக்கணாங் குருவியைப்போல் கூடுகட்டி மாற்றார்
துன்பத்திற்குப் பலியாகா தூய்மையுடன் வாழ்தல்
நோக்கமது உயர்ந்தநிலை நுண்ணறிவு படைத்து
நூதனமாய் குடும்பநலம் பேணுதலே முறையாம்;
சாக்கடையில் உதித்துநெளி புழுக்களைப்போல் மனிதன்
சரித்திரத்தில் இடம்பெறுதல் பிறந்தும்பிற வாமை
பூக்களிலே மணமிகுந்த பூவினைப்போல் உலகம்
போற்றிடவே வாழ்ந்திடுதல் பொன்னேட்டின் புகழாம்.
ஆறுகுளம் வழிந்தோடும் நீரைப்பயன் கொள்ள
அணைபோட்டுத் தேக்கியதில் அழகுபயன் பெறல்போல்
கூறுகின்ற இல்லறத்தின் குடும்பநலம் ஓங்க
குடிகளெல்லாம் அரசாங்க கொள்கைபற்றல் வேண்டும்
மாறுபடா அடக்கத்துடன் மனிதஇனம் உயர்ந்த
மகத்துவத்தை எய்திடல் குடும்பநலத் திட்டம்
ஏறுகின்ற இமயமதில் உச்சியினை அடைந்த
இறவாத புகழனைத்தும் எய்தல்இல்வாழ், அழகே.

# மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி

- சிவ. இரவீந்திரன்



இந்தியச் சுதந்திரப் போராட்டப்பேரியக்கத்திற்கு முதன் முதலில் விடுதலை விதையினை ஊன்றி கண்ணீரும் செந்நீரும் விட்டு வளர்த்து இன்று மிகப் பெரு விருட்சமாக வளர்ந்தோங்க வழிவகுத்து அதற்கு மூலகாரண கர்த்தாவாக இருந்தவர்தான் முகவை மறவர் சீமையின் இறுதி மாமன்னர் ரிபெல் முத்துராம லிங்க சேதுபதியவர்கள் **(1762-1809).**

**1857**-ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்திற்கு எழுபது ஆண்டுகட்கு முன்பே ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்ட மறுத்த மாமன்னர் இவர்.

தமிழக அரசால் பேணிக் காக்கப்பட்டு வரும் அரிய ஆவணங்கள், மாவட்ட மான்யுவல்கள், இராணுவ ஆலோசனைத் தொகுப்புகளும் குறிப்பேடுகளும், வருவாய்த்துறை ஆலோசனைத் தொகுப்புக் கோப்புகள், இரகசிய ஆலோசனைத் தொகுப்புகள், பொதுத் தொடர்பு மற்றும் போர்டு ஆலோசனைத் தொகுப்புக்கள் இராணுவ நாட்டாட்சி கடிதத் தொகுப்புக்கள், மற்றும் வருவாய் அரசியல் சம்பந்தமான தீர்வேடுகள் ஆகியவற்றை மூன்றாண்டுகள் தீர்க்கமாக நுணுகி ஆராய்ந்து வரலாற்று ஆய்வாளர், முன்னாள் தாசில்தார் டாக்டர் எஸ்.எம். கமால் டி.லிட்., அவர்கள் 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்ற உண்மை வரலாற்று நூலினை அழகு மிளிர் தமிழில் யாத்து அளித்துள்ளார்.

மறவர் சீமை மன்னர்களின் கொடி வழிப் பட்டியலின்படி 16வது மன்னர்தான் இந்த ரிபெல் மத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியவர்கள். இவரே இராம நாதபுரம் முகவை மறவர் சீமையினை தன்னாட்சி செய்த இறுதி மாமன்னரும் ஆவார்.

வாணிகம் செய்ய வந்து வஞ்சக வலை விரித்த வெள்ளைப் பரங்கிக் கும்பினிக் கூட்டத்தை ஆணி வேரோடு பிடுங்கியெறிய வீரக் கங்கணம் பூண்டு வீறு கொண்டு எழுந்தவர்தான் ரிபெல் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர். இந்த உன்னத மகாபுருடன், வீரத்தியாகி மறவர் குல வேந்தர் திலகம் நயவஞ்சக பாதகர்களால் தம் வாழ்நாளில் பாதியை — 24 ஆண்டுகள் திருச்சி, சென்னை கோட்டை சிறைகளில் அரச போகத்தைத் துறந்து வெஞ்சிறை வாசத்தில கழித்து தம் இன்னுயிர் நீத்தார்.

அந்நியப் பிரிட்டிஷாரின் ஆதிக்க வெறியையும், அடக்கு முறைகளையும் கண்டு அஞ்சாமல் அவனுக்குத் துணை நின்ற ஆற்காட்டு நவாபின் ஆணவத்திற்கும் அடிபணியாமல் ஆங்கிலேயருக்கு முதன் முதலில் தென் தமிழகத்தில் கப்பம் கட்ட மறுத்து

**"பதினெட்டாம் நூற்றாண்டில், பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு, 24 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடிய 'ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி' நினைவாக விழா நடத்த - சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கைமீது நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து சட்டப் பேரவையில் உரையாற்றினார். அதனடிப்படையில் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

ஆங்கிலேயரின் ஒவ்வொரு கட்டளையையும் துச்சமென மதித்து, இலட்சியம் பண்ணாமல் பாம்பன் நீர் வழியிலேயே அவர்களுக்குப் படிப்பினையைப் புகட்டி, அந்நியப் பரங்கியருக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் பீரங்கித் தொழிற்சாலையினை இரகசியமாகத் தொடங்க ஆயத்தம் அனைத்தும் மேற்கொண்டவர் இம்மாமன்னர்.

தமது உடல், பொருள், ஆவி தன்னலம் அனைத்தும் நாட்டிற்குக் காணிக்கையாக அர்ப்பணித்து, விடுதலைப் போர் வேள்வியில் தன்னை விறகாக்கிக் கொண்டவர் தான் "வீரத்தியாக வேந்தர் திலகம் ரிபெல் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியவர்கள்".

இம்மாமன்னரின் ஆட்சிக் காலத்தில் நிலச் சீர்திருத்தம், நியாய உணர்வுடனும் பரந்த மனப்பான்மையுடனும் தமிழகத்திலேயே முதல் முதலாக மேல் நாட்டுக் கல்விக்கு வித்திட்டு பேராதரவு அளித்து முகவையில் 'சுவாரிட்ஸ்' பள்ளியைத் தொடங்கியதும், ஜவ்வாதுப் புலவர் மற்றும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து தமிழை வளர்த்த பெருமை, வடமொழி வித்தகர்கட்கும் வாழ்க்கைச் சுமையினை நீக்கிய பெருமை, ஏழை எளியோருக்கும், உடல் ஊன முற்றோருக்கும் ஊன்று கோலாக விளங்கிய பெருமை, இறை உணர்வுடன் ஆலயங்களும் அன்ன சத்திரங்களும், ஏற்படுத்தியது - இராமேஸ்வரம் கோயிலின் உலகப் புகழ் பெற்ற மூன்றாம் பிரகாரத்தை முழுமையுறக் கட்டி முடித்தது - மத வேறுபாடின்றி மானியங்கள் வழங்கியது - வாணிகத் துறையில் உள்நாட்டு, வெளி நாட்டு வாணிகம் குறிப்பாக கைத்தறி நெசவு, மஸ்லின், பட்டு போன்ற துணி வகைகளுக்கும் 18 ஆம் நூற்றாண்டில் கடற் பொருட்களுக்கும் அயல் நாட்டுச் சந்தையினை ஏற்படுத்திக் கொண்டது சுங்க வரித்துறையிலே பாம்பன் நீர் வழியில் வரிசைக் கிரம முறையினை உலகிற்கு வகுத்துக் கொடுத்ததாகக் கூறிக் கொள்ளும் வெள்ளைப் பரங்கியருக்கு 'வேலியே பயிரை மேயக் கூடாது', 'கற்றபின் நிற்க அதற்குத் தக' 'சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்' என்ற படிப்பினைகளையூட்டியது – முதல் முதலில் பெரியாறு அணைக்கு ஆய்வு மேற்கொண்டு அடித்தளமிட்டது போன்றவற்றை 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்ற நூலின் வாயிலாக படித்தறிகிறோம்.

---

**அந்நியர்கள் நம் மண்ணில், முதன் முதலில் காலெடுத்து வைத்துக்கட்டிய இக்கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.**

**விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும். இந்த விடுதலைதான் இந்தியாவை ஒரே நாடாக்க உதவியது; அடிமை இந்தியனைச் சுதந்திர மனிதனாக அரியாசனத்தில் அமர்த்தியது.**

**எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல் உடமைகளை ஈந்த பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகின்றேன்.**

**- புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.**






**'கன்னித்தமிழ் கவிதை பாடுவோம்'**

**ஆசிரியர்:** முனைவர் புரட்சிதாசன்

**வெளியீடு:** பாண்டியன் பாசறை
17, வடக்கு போக்கு சாலை
தியாகராயர்நகர்,
சென்னை600 017

பக்கம்194 விலை ரூ.40

தமிழ் ஆர்வலர்களுக்குப் புதுக்கவிதை மீதான காதல் மெலிந்து, மரபுக் கவிதை புனைகிற ஆவல் பலப்பட்டு வருகிற காலம் இது.

இந்நாளில், பலரும் யாப்பிலக்கணம் படித்து, அதன் நெருடல்களை உணரத் தவிப்பதுண்டு. அத்தகைய இன்னல் நீக்கி, கவிதை இலக்கணத்தை எளிமையும் இனிமையும் கொண்டதாகத் தாமே உருவாக்கி இந்த நூல் மூலம் படைத்துள்ளார் ஆசிரியர்.

ஓர் நூலாசிரியர் தாமே நூல் எழுதி, தாமே அதற்கான உரையும் எழுதி, அவற்றுக்குத் தேவையான மேற்கோள்களையும் எழுதி அண்மைக் காலத்தில் வெளிவரும் முதனூலாக இந்தக் 'கன்னித்தமிழ் கவிதை பாடுவோம்' நூல் திகழ்கிறது.

தமிழ் வளர்ச்சிக்கு, தமிழ் காக்கப் பாடுபடுவோர் வளர்ச்சிக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

– 'இந்திரன்'

**'சுற்றுப்புறச் சூழலில் மாசுபாடுகள்'**

**ஆசிரியர்:** கவியழகன்

**வெளியீடு:** கார்த்திக் பதிப்பகம்
36, A7, கோவிந்தன் சாலை
மேற்கு மாம்பலம்
சென்னை600 033

பக்கம்144 விலை ரூ.200

இன்று உலகம் திணறிக் கொண்டிருப்பது சுற்றுப்புறச் சூழல் மாசுபாடுகளால்தான். இதனையே கருவாகக் கொண்டு கதைகள் எழுதப்பட்டுள்ளன. காலத்திற்கு ஏற்ற, சுற்றுச் சூழலைப்பாதுகாக்க, தேவையான கதைகள்தாம் இவை.

எல்லா நிலை மாணவர்களும் படித்துப் பயன்பெறும்வகையில் எளிமையாக எழுதப்பட்டுள்ளது.

– குமாரசாமி

**'சுடர்விழிகள்'**

**ஆசிரியர்:** கவிஞர் இளமாறன்

**வெளியீடு:** மலர்க்கொடி பதிப்பகம்
ஜெ.43, பாரதிதாசன் சாலை
திருநகர், சென்னை600 083

பக்கம்128 விலை ரூ.15

இந்நூல் இளவேனில் தொடங்கிக் காலத்தின் குரல் வரையுள்ள பல கட்டி வெல்லக் கவிதைகளின் தொகுப்பு. பல மரபுக் கவிதைகள், சில சந்தக் கவிதைகள், எல்லாவற்றிலுமே இனிய எளிய சொல்லாட்சி.

சாதி, மதம், இனம், மொழி, நாடு கடந்து மனிதநேயச் சிறகுகளால் உலகை வலம்வர விரும்பும் நூலாசிரியரின் நோக்கம் கவிதைகளில் பளிச்சிடுகிறது.

"தினந்தோறும் சமுதாயச்
சாக்க டைக்குள்
திணறுகிற மனிதகுலம்
மீள்வ தற்கும்
தனதுநிலை உணராமல்
வாழ்க்கை யோரம்
தத்தளிப்போர் தெளிவுபெற
வைப்ப தற்கும்
கனலாகி என்கவிதை
கருத்தை வீசும்
காலத்தின் குரலாகி
நாளை பேசும்!"

என்றெழுதியிருக்கிறார் கவிஞர். அதேபோல், இயற்கையை, காதலை, சமுதாய இழிவுச் சாடலை, மொழிநலத்தை பொதுத் தொண்டின் மேன்மையை, பெண்கள் முன்னேற்றத்தை எழுச்சி மயமான தம் கை வண்ணத்திலெல்லாம் கடைபரப்பியிருக்கிறார் நூலாசிரியர். படித்துப் பயன்பெறலாம்.

– ராஜு

**'பட்டுப் பூச்சி வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி?**

**ஆசிரியர்:** மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

**வெளியீடு:** மணிமேகலைப் பிரசுரம்
த.பெ. எண்: 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராயநகர்,
சென்னை 600 026

விலை: ரூ.13 பக்கம்: 93

பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலை மேற்கொள்ள விரும்புவோர்க்குப் பயனுள்ள நூல்.

பட்டுப் பூச்சி வளர்த்தல், அதற்கு ஏற்படும் நோய்கள், அவற்றைப் போக்கும் மருந்துகள், இத் தொழிலுக்குக் கிடைக்கும் அரசின் உதவிகள், பட்டு நூல் தயாரிப்பு, இதற்கான உதவிகள் என பல விரிவான விளக்கங்கள் இந்நூலில் உள்ளன.

**'கந்த குமரன்'**

**ஆசிரியர்:** கோ. பாண்டியன்

**வெளியீடு:** உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டி தெரு
மண்ணடி, சென்னை1

பக்கம்136 விலை ரூ.16

சோழ அரசர்களின் ஆட்சிக் காலத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட கதை. இக்கதையில் வரும் மாந்தர்கள் பலர் கதை நடந்த காலத்தில் வாழ்ந்து மறைந்தவர்கள்தான் என்பது கதையின் இறுதியில் ஆதாரத்தோடு விளக்கப்பட்டிருக்கிறது.

சோழ நாட்டின் தலைநகர் சீரும், சிறப்புமாக எப்படி எழுகிறது என்பது (பக்கம் 87) ஆச்சரியமான பட்டியல்.

– குமார்

வளரும் வேளாண்மை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

# வைகாசி மாதச் சாகுபடிக் குறிப்புகள்

## நெல்

'வைகாசியில் வாய்கூடும் கோடை' என்பது உழவியல் பழமொழி. கோடையின் வெப்பம் உச்ச கட்டத்தை அடையும். அதேசமயம் தென்மேற்குப் பருவக்காற்றும், மழையும் ஆரம்ப கட்டத்தில் இருக்கும். வெப்பம், காற்று மற்றும் மழை ஆகியவற்றின் கூட்டுக் கலவையின் தட்பவெப்ப நிலையே குறுவைச் சாகுபடியின் அதிக மகசூலுக்குக் காரணமாகும்.

## குறுவைகார்பட்டத்திற்கேற்ற இரகங்கள்

மாநில அளவில், பொதுவாக இப்பட்டத்தில் ஆடுதுறை 36, ஆடுதுறை 37, அம்பை 16 பரிந்துரை மற்றும் அம்பை 18 போன்ற இரகங்கள் செய்யப்படுகின்றன. முன் குறுவைப் பட்டத்தில் ஐ.ஆர். 50 பரிந்துரை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், திருப்பதி சாரம், 1, டி.கே.எம். 9 மற்றும் ஐ.ஆர். 64 போன்ற இரகங்களையும் சாகுபடி செய்யலாம். கோவை, பெரியார் மாவட்டங்களில் கோ.37 இரகமும் சாகுபடி செய்யப்படுகிறது.

## குறுவை நாற்றங்கால் நிலம் பராமரிப்பு

நாற்றங்கால் பகுதி நீர் நிலைக்குச் சமீபமாக இருத்தல் வேண்டும். வண்டல் களி மணல் கலந்த இருமண்பாடு கொண்ட நிலம் மிகவும் நல்லது. ஒரு எக்டேருக்கு 20 சென்ட நிலம் தேவைப்படும். இந்த நிலப்பரப்பிற்குச் சுமார், நன்றாக மக்கிய தொழு உரம் கம்போஸ்ட் ஒரு டன் இட்டு இரண்டறக் கலக்க உழுதுவிட வேண்டும். பதமான ஈரத்தில் நாற்றங்கால் பகுதியை அவ்வப் பொழுது உழவு செய்து களையைக் கட்டுப்படுத்த வேண்டும். நாற்றங்கால் வயலின் வரப்புகளைச் சீராக அண்டை வெட்டி, எடுத்துக் கட்டி பூசி மெழுகிவிட வேண்டும். நாற்றங்கால் வயலில் நீரைக்கட்டி 23 நாட்கள் கழித்து சேற்று உழவு செய்ய வேண்டும். தொழு உரம் போடாத நிலையில், எருக்கலை, கொழிஞ்சி மற்றும் தண்டு முற்றாத, அடர்ந்த தழைகளைக் கொண்ட நெய்வேலிக் காட்டாமணி போன்ற தழை உரங்களை இட்டு மட்க்கி உழவேண்டும். சேற்றில் சுமார் 1015 நாட்கள் மக்கவிட்டால் தழை உரம் நன்றாக அழுகிவிடும்.

நாற்றங்காலைக் காயவிடாமல் சுமார் 2 செ.மீ. நீர் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். குறுவை நாற்றுக்களை 20-25வது நாளில் பறித்து நடவு செய்யும் சூழ்நிலையில் இருந்தால் 20 சென்ட் நாற்றங்காலுக்கு 40 கிலோ டி.ஏ.பி. உரத்தைக் கடைசி சேற்றுழவில் இடவேண்டும். அல்லது 16 கிலோ யூரியா மற்றும் 120 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். 25 நாட்கள் கழித்து நாற்றுபறிக்கும் சூழ்நிலை இருப்பின் இரசாயன உரத்தை அடி உரமாக இடாமல், நாற்றுப்பறிப்பதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு டி.ஏ.பி. உரத்தை மேலுரமாக இட வேண்டும். நாற்றங்கால் பரப்பில், எட்டடிக்கு ஒரு பட்டம் அமைத்துக் கொள்ள வேண்டும். வடிகால் வசதிக்கும், களை எடுப்பதற்கும் மற்றும் உரம் பூச்சி மருந்து இடுவதற்கும், இப்பட்ட அமைப்பு முறை எளிதாக இருக்கும். நாற்றங்கால் மேற்பரப்பு, மேடுபள்ளம் இல்லாமல் கண்ணாடி மேற்பரப்பு போல் சமமாக இருக்கவேண்டும். தண்ணீரும் சுமார் 23 செ.மீ அளவில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். முளைகட்டிய குறுவை விதை நெல் பரவுவதற்கு முன் மேற்கூறிய நாற்றங்கால் நிலப் பராமரிப்பு முறைகளைச் சீராகவும் முறையாகவும் கையாள வேண்டும்.

## பப்பாளி

சமீபகாலமாக, தமிழகத்தில் பரவலாகப் பயிரிடப்படும் பழப் பயிர் பப்பாளி, பப்பாளியில் நாற்றங்கால் இட தகுந்த தருணம் இது.

பப்பாளி விதைகளை விதைக்குமுன் விதை நேர்த்தி செய்வது அவசியம். பூஞ்சாள நோய்களிலிருந்து பாதுகாக்க, விதை

களை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கேப்டான் மருந்துடன் கலந்து நேர்த்தி செய்ய வேண்டும். விதைகளின் முளைப்புத் திறனை அதிகரிக்கவும், வீரிய நாற்றுகளைப் பெறவும், விதைகளை முதலில் சுமார் 12 மணி நேரம் நீரில் ஊறவைத்து, பின் 10 பிபிஎம் 1 கிராம் 100 லிட்டர் நீரில் ஜிப்ரலிக் அமிலத்தில் 2 மணி நேரம் ஊறவைத்து விதைக்க வேண்டும்.

நாற்றுக்களைப் பாலித்தீன் பைகளில் உற்பத்தி செய்ய, சம அளவு தொழு உரம், மணல், செம்மண் கலந்து பைகளில் நிரப்ப வேண்டும். ஒரு பைக்கு 5 விதைகள் வீதம் அரை சென்டிமீட்டர் ஆழத்தில் ஊன்ற வேண்டும். நிழற்பாங்கான இடத்தில் பைகளை அடுக்கி பராமரிக்க வேண்டும். பூவாளி கொண்டு நீர் ஊற்ற வேண்டும். விதை நட்டதிலிருந்து 50 நாட்களில் நாற்றுக்களை நடவு செய்யலாம்.

### வாழை

வாழைக்கு முதல் உரமிட ஏற்ற தருணம் இது. கன்று நட்ட 3வது மாதத்தில் இடவேண்டிய உர அளவு:

### நஞ்சை வாழை

கிராம்/மரம் ஒன்றிற்கு

| | தழை | மணி | சாம்பல் |
|---|---|---|---|
| நேந்திரன் இரகத்திற்கு | 03 | 51 | 50 |
| ரஸ்தாளிக்கு | 70 | 50 | 130 |
| பூவன், ரொபஸ்டா இரகங்களுக்கு | 50 | 50 | 130 |

### தோட்டக்கால் வாழை

| | | | |
|---|---|---|---|
| நேந்திரன் இரகத்திற்கு | 50 | 90 | 100 |
| மற்ற இரகங்களுக்கு | 30 | 35 | 110 |

கன்றிலிருந்து 45 செ.மீ. தூரத்தில் 10 செ.மீ. ஆழத்தில் கன்றைச் சுற்றிக் கிண்ணம் பறித்து உரமிட வேண்டும்.

### சாம்ந்தி நடவு செய்யும் முறை

நிலம் வளமான வடிகால் வசதியுள்ள மண். மார்ச் ஏப்ரல் பங்குனி மாதம் 3,4 முறை உழுது, ஏக்கருக்கு 20 டன் தொழு உரம் அல்லது குப்பை உரமிட வேண்டும். நடவு முறை முந்தைய பயிரின் வேர் செடிகளை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். பார்களில் நடுமுன் செடிகளின் வேர்களை செரசான் மருந்தில் 10 கிராம் மருந்தை 10 லிட்டர் நீரில் நனைத்து நடவும். இடைவெளி வரிசையில் 30 செ.மீ. செடிக்கு செடி 30 செ.மீ. ஏக்கருக்குத் தேவையான வேர் செடிகள் 44,000 நட்ட 20 நாட்கள் கழித்து பாடுவாசிகள் நடவு செய்யலாம்.

### முல்லை, மல்லிகை மலர்கள்

ஜாதிமல்லி, முல்லை, குண்டு மல்லி ஆகிய பூக்கள், சித்திரை



வைகாசி மாதங்களில் பூக்க ஆரம்பிக்கும். பூக்களை மலர்வதற்கு முன் காலை நேரத்தில் பறிக்க வேண்டும். வாசனை எண்ணெய் தயாரிப்பதற்கு மலர்ந்த பூக்களை காலை 9.00 மணிக்குள் எடுக்க வேண்டும்.




கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் தொடர்பானவை பற்றி ஆலோசனைகள் அல்லது அறிவுரைகள் பெற விரும்பினால் நேரிலோ அஞ்சல் வழியாகவோ கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தகவல் தொடர்பு நிலையம்**
**விரிவாக்கக் கல்வி இயக்ககம்**
**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**சென்னை – 600007.**

# 1,400 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரிய ஜேஷ்டா சிற்பம் கண்டுபிடிப்பு!

**வி**ழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், செஞ்சி வட்டம் ஒலக்கூரில் கி.பி. 6-7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரியதொரு ஜேஷ்டா சிற்பத்தைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருளாய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது.

தொல்பொருளாய்வுத் துறையின் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் மற்றும் பூண்டி அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. துளசிராமன், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் திரு. முத்து எத்திராசன் ஆகியோர் இப்பகுதியில் தொல்லியல் மேற்பரப்பாய்வு மேற்கொண்டபோது இவ்வரிய சிற்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

தமிழகத்தில் கொற்றவை வழிபாடும் ஜேஷ்டை வழிபாடும் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. கொற்றவை போர்க் கடவுளாகவும், ஜேஷ்டை நீர்க் கடவுளாகவும் வழிபடப்பட்டிருக்கின்றனர். சக்தியின் பண்டைய திருக்கோலங்களான இவை, காலப்போக்கில் மறைந்து விட்டன. பிற்காலத்தே தோன்றிய சப்தமாதர் வழிபாட்டினால் ஜேஷ்டை வழிபாடும், காளி வழிபாட்டினால் கொற்றவை வழிபாடும் அருகி மறைந்து விட்டன.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை ஜேஷ்டையை 'முதியள்' என்றும், முருகனின் அறுபடை வீட்டைப் பற்றி விரிவாக விளக்கிடும் திருமுருகாற்றுப்படை 'பழையோள்' என்றும் குறிப்பிடுகின்றன. கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஐடில பராந்தக நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னனுடைய திருப்பரங்குன்றக் கல்வெட்டு, திருப்பரங்குன்றத்தில் நக்கன் கொற்றி என்பவள் எடுப்பித்த துர்க்கை மற்றும் ஜேஷ்டை கோயில்களைப் பற்றித் தெரிவிக்கிறது. இன்றும் அந்த ஜேஷ்டை சிற்பம் இக்கோயிலில் உள்ளது. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் இராஜசிம்மன் காஞ்சியில் எடுப்பித்த கைலாசநாதர் கோயிலில், அபயவரத முத்திரை காட்டி, அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கும் மிக அழகிய ஜேஷ்டை சிற்பம் உள்ளது. அடுத்து செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள வேலஞ்சேரி என்ற ஊரில் கண்டறியப்பட்ட தொகுதிச் சிற்பங்களுள் ஜேஷ்டையின் சிற்பமும் உள்ளது. இத்தொகுதிச் சிற்பங்களின் காலம் கி.பி. 6-7ஆம் நூற்றாண்டாகும்.



இலக்குமியின் (ஸ்ரீதேவி) தமக்கையான ஜேஷ்டை அலக்குமி (துர்தேவதை) என்று கருதப்படுகிறது. இத்தெய்வம் திருக்குறளில் 'தவ்வை' என்றும் 'மாமுகடி' என்றும் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கக் கூடிய ஜேஷ்டை பற்றிய மிகப்பழமையான இலக்கியக் குறிப்பு இதுதான்.

தற்போது மேல் ஒலக்கூரில் கிடைத்துள்ள சிற்பம் பல வகையிலும் முக்கியத்துவமும், சிறப்பும் பெறுகின்றது.

பொதுவாக ஜேஷ்டையின் அருகில் காணப்படும் அவள் மகன் குளிகனுடைய முகம் நந்தி முகமாகக் காட்டப்பட்டிருக்கும். அது போலன்றி இச்சிற்பத்தில் குளிகனுடைய முகம் மனித முகமாகக் காட்டப்பட்டுள்ளது.

# நார்த் தொழில் மூலம் அந்நியச் செலாவணி



தேங்காய் நார்த் தொழில் தற்போது ஏற்றுமதியின் மூலம் புதிய வள ஆதாரத்தை நோக்கி சென்று கொண்டுள்ளது. உலக நார் வாத்தகத்தில் இந்தியாவின் பங்கு 30 சதவீதமாகும். ஏற்றுமதி, ரூபாயிலும், மதிப்பிலும் அதிகரித்துள்ளது. 1990-91-இல் ரூ.48 கோடியாக இருந்த நார் ஏற்றுமதி 1991-92-இல் ரூ.74 கோடியாகவும், 1992-93-இல் ரூ.96 கோடியாகவும் அதிகரித்தது. எட்டாவது திட்டகால இறுதியில் ஏற்றுமதி ரூ.100 கோடியை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரியமாக நடந்துவரும் இக்குடிசைத் தொழிலில் சுமார் 5.5 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர், இவர்களில் பெரும்பாலோர் பகுதி நேரத் தொழிலாக இதை எடுத்துக் கொண்டுள்ளனர். கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரா, கோவா, ஒரிசா, அசாம், அந்தமான் நிக்கோபார், இலட்சத்தீவுகள் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலயூனியன் பிரதேசங்களில் இத்தொழில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இந்தியா, வெள்ளை மற்றும் பழுப்பு நிற இழைகளை உற்பத்தி செய்கிறது. இதில் வெள்ளை இழைகளுக்கே வாங்குபவர்கள் முன்னுரிமை அளிக்கின்றனர். பழுப்பு நிற இழை, இயந்திரம் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. பழுப்பு நிற இழைத் துறையின் வளர்ச்சி கடந்த சில காலமாக அதிகரித்து வந்துள்ளது. தேங்காய் பயிரிடும் பரப்பும் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

தேங்காய் சிரட்டையை அதிக அளவில் பயன்படுத்துவதற்கு எட்டாவது திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது.

புதிய யூனிட்டுகளை அமைப்பதற்கும், தற்போது உள்ள யூனிட்டுகளைப் புதுப்பிக்கவும் அரசு நிதியுதவியை அளித்து வருகிறது. அதிக லாபம் பெற கூட்டுறவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1991-92-இல் கேரளா, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள யூனிட்டுகளுக்கு ரூ.22.56 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

நார் உற்பத்தியைப் பன்முகப்படுத்தவும், குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவும் தீவிர ஆராய்ச்சியினை களவூர் மற்றும் பெங்களூரில் உள்ள ஆராய்ச்சி மையங்கள் மேற்கொண்டுள்ளன.

மதிப்பு கூட்டிய நார்ப் பொருட்களின் உற்பத்திக்கு ஆறு பயிற்சி நிலையங்கள் பயிற்சி அளித்து வருகின்றன. சிறு உற்பத்தியாளர்களுக்கு நார் வாரியம் பொது வசதி மையங்கள் மூலம் தொழில்நுட்ப உதவியை அளிக்கிறது. மாதிரி நார் கிராமத் திட்டம், தறி வழங்கும் திட்டம் ஆகிய ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தினையும் அரசு மேற்கொண்டுள்ளது.

-பத்திரிகைத் தகவல் அலுவலகம்

---

முதற் சிறப்பு. அடுத்து ஜேஷ்டையின் வலதுபுறம் சிறிய அளவில் குளிகனின் உருவம் காட்டப்படும். மாறாக இங்கு அவனுடைய உருவம் இடப்புறத்தில், குறிப்பாக உருவில் தாய்ச் சிற்பத்திற்குச் சமமான அளவில் செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அது போன்றே வலப்புறத்தில் காட்டப்படவேண்டிய ஜேஷ்டையின் மகள் மாந்தி இடப்புறத்தில் தாயின் தோள் மீது சாய்ந்து கொண்டுள்ளது போன்று காட்டப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. ஜேஷ்டையின் தோள்களுக்கு மேல் காக்கைக் கொடியும், துடைப்பமும் காட்டப்பட்டுள்ளன. ஜேஷ்டை காலைத் தொங்கவிட்ட நிலையிலன்றிக் கால்களை மடித்து லலிதாசனம் போன்று வைத்துள்ளது இச்சிற்பத்தில் அடுத்துக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். காதுகளில் குண்டலமும், கழுத்தணியும் அணிந்து, பருத்த தனங்களுடனும், பெருத்த வயிற்றுடனும் இச்சிற்பம் காணப்படுகிறது. வலக்கை வலது தொடையின் அருகில் தொங்கவிட்டும், இடக்கை இடது தொடையின் மீது வைத்துள்ள நிலையிலும் காணப்படுகின்றன. மாந்தன் தன் கையில் கதையைப் பிடித்தவாறு கால்களை மடக்கி அமர்ந்துள்ளான். ஒரு மீட்டர் உயரமும் ஒன்றரை மீட்டர் அகலமும் உடைய பலகைக் கல்லில் இச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

## ஊரகச் சுகாதாரத் திட்டம்:

# வழிகாட்டும் பெரியார் மாவட்டம்

பண்டித ஜவகர்லால் நேரு ஒருமுறை இப்படியாகக் கருத்து தெரிவித்தார்: "கழிவறையைப் பயன்படுத்தும் வசதி இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் எப்போது கிடைக்கிறதோ, அன்றுதான் நமது நாடு முன்னேற்றத்தின் உச்ச கட்டத்தை அடைந்ததாக நான் கருதுவேன்"


இந்தக் கருத்தை வளர்ச்சிக்கு அளவுகோலாக் கொண்டால், தமிழ்நாட்டிலுள்ள பெரியார் மாவட்டத்தை நாட்டில் உள்ள மிக முன்னேறிய பகுதிகளில் ஒன்றென எளிதாகக் கூறிவிடலாம்./ஏனென்றால், இந்த மாவட்டத்தின் ஊரகப் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளில் சுமார் 40 ஆயிரம் கழிவறைகள் கட்டப்பட்டிருப்பதோடு இவை அனைத்தும் உபயோகத்திலும் இருக்கின்றன.

1988-89இல் ஐ.நா.வில் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் பெரியார் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட தீவிரச் சுகாதாரத் திட்டமே இந்த மகத்தான முன்னேற்றத்திற்குக் காரணமாகும். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்குக்காரணமாக இருந்த பல்வேறு விஷயங்கள், நாடு முழுவதும் உள்ளவர்கள் பார்த்து, கற்றுக்கொள்ளக்கூடிய நல்ல மாதிரியாகத் திகழ்கின்றன.

கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள், திறந்த வெளியில் மலம் கழிப்பதால், தண்ணீரும் காற்றும் தூய்மைக்கேடுற்று, அதன் விளைவாக அப்பகுதி மக்கள் காலரா, வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை போன்ற பல்வேறு நோய்களால் தாக்கப்படுவது யாவரும் அறிந்த ஒன்று. மனிதக் கழிவைப் பாதுகாப்பான முறையில் அகற்றினால்தான் நமது கிராம மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியும். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரை, தீவிரச் சுகாதாரத் திட்டம் தொடங்கப்பட்ட சமயத்தில் கிராமப்பகுதிகளில் இருந்த சுமார் மூன்றரை இலட்சம் வீடுகளில் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே கழிவறை வசதி இருந்தது. மற்றவர்கள் திறந்தவெளியில்தான் மலம் கழித்து வந்தனர். இவர்களுக்குக் கழிவறை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 35,000 வீடுகளில் கழிவறைகளைக் கட்டுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் 1,000 கழிவறைகளையும், சத்துணவு மையங்களில் 625 கழிவறைகளையும் கட்ட முடிவெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்யக்கூடிய கழிவறைகளை ஒவ்வொரு வீட்டிலும் கட்ட வேண்டியதன் அவசியம் பற்றி கிராம மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக ஒரு தீவிர இயக்கம் தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை கட்டுவதென்றால் அதற்கு நிறைய இடம் தேவைப்படும் என்றும், தினமும் ஏகப்பட்ட தண்ணீர் செலவிட வேண்டுமென்றும் கிராம மக்கள் நினைத்ததோடு இத்தகைய கழிவறைகளில் துர்நாற்றம் வீசுமென்றும், இவற்றைக் கட்ட மிகுந்த செலவு பிடிக்குமென்றும் தவறாகக் கருதிக்



உபதேசங்களில் எறும்பு செய்யும் உபதேசமே மிகச் சிறந்தது என்பேன். காரணம், அது உழைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்வது இல்லை.

-பெஞ்சமின் பிராங்க்ளின்

கொண்டிருந்தனர். அவர்களது ஐயங்களைப் போக்குவதற்காக நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் ஊராட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும், பத்திரிகைகளின் உதவியையும் மாவட்ட நிர்வாகம் நாடியது. தண்ணீரைப் பயன்படுத்தும் கழிவறைகள் வாயிலாக மனிதக் கழிவை வெளியேற்ற வேண்டியதன் அவசியம் பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பதில் ஊர் நல ஊழியர்கள், சமூகத் தொண்டர்கள், மகளிர் மற்றும் இளைஞர் மன்ற உறுப்பினர்களும் பயனுள்ள வகையில் தொண்டாற்றினர். இவர்கள் வீடு வீடாகச் சென்று கழிவறைகள் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தனர். புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இந்த இயக்கத்தில் பங்கேற்ற தொண்டர்களுக்காகப் பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை இருக்க வேண்டியதன் அவசியத்தை, கிராம மக்கள் உணர்ந்துகொண்டவுடன் அவற்றைக் கட்டிக்கொடுக்கும் பணி துவங்கியது. இலவசமாகக் கட்டிக்கொடுத்தால், அவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. ஆகவே, தண்ணீரைப் பயன்படுத்தும் கழிவறைகளை ஒவ்வொரு வீட்டிலும் 800 ரூபாய் செலவில் அமைக்க மாவட்ட நிர்வாகம் தொடங்கியபோது, வீட்டுக்காரர்கள் 160 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. மீதித் தொகையை, மத்தியமாநில அரசுகளும், யூனிசெப் நிறுவனமும் வழங்குகின்றன. சில ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தக் கழிவறைகளின் வடிவமைப்பில் சில மாற்றங்களைச் செய்ததால், கட்டுமான செலவு 1,600 ரூபாயாக அதிகரித்தது. வருங்காலத்தில் இவற்றின் கட்டுமானச் செலவு 2,300 ரூபாயாக இருக்கும். எளிய முறையிலான இந்தக் கழிவறைகளைக் கட்டுவதற்கு உள்ளூர் கட்டடத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தொடக்கத்தில் தலைவர்களும், புதுமை விரும்பிகளும்தான் தங்கள் வீடுகளில் இத்தகைய கழிவறைகளைக் கட்டிக்கொள்ள முன்வந்தனர். இக்கழிவறைகள் நன்கு இயங்குவதைகண்ட எல்லாத் தரப்பு கிராம மக்களும் தத்தம் வீட்டிலும் இவற்றைக் கட்டிக்கொடுக்குமாறு அரசாங்கத்தை அணுகினர். பெரியார் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் தீவிர சுகாதாரத் திட்டத்தின் ஓர் பகுதியாக, கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களிலும், குறைந்த செலவிலான கழிவறைகள் கட்டப்படுகின்றன. யூனிசெப் நிறுவனம் உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றோடு பள்ளிக்கூடங்களில் பெற்றோர்ஆசிரியர் சங்கங்களும் இவற்றுக்கான செலவைப் பகிர்ந்துகொள்கின்றன. இதுவரை இந்த வட்டத்தில் 740க்கும் மேற்பட்ட கழிவறைகள் கிராமப்புறப் பள்ளிக்கூடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. மனிதக் கழிவை மனிதனே தோளில் சுமந்து செல்லும் கேவலமான பழக்கத்தை ஒழிக்க தீவிரச் சுகாதாரத் திட்டம் பெரிய அளவில் உதவியிருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். பெரியார் மாவட்டக் கிராமப்புறங்களில் தண்ணீரைப் பயன்படுத்தும் கழிவறைகளை தத்தம் வீடுகளில் கட்டிக்கொள்ளுமாறு கிராம மக்களுக்கு எடுத்துரைத்த இயக்கத்தின்போது, மனிதக் கழிவை மனிதனே சுமந்து செல்லும் பணி எவ்வளவு இழிவானது என்பதும், அதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளும் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இப்போது இம்மாவட்டத்தில் உள்ள 61 நகரப் பஞ்சாயத்துக்களிலும் மனிதக் கழிவை மனிதனே அகற்றும் இழிவான பழக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டதாக அம்மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன் கூறுகிறார். மாவட்டத்தின் ஊராட்சிகளிலும் இந்தப் பழக்கம் இப்போது அறவே இல்லை.

மொடக்குறிச்சி வட்டம் சுவாமிநாதபுரம் கிராமத்தில் உள்ள 64 ஆதிதிராவிடர் இல்லங்கள் அனைத்திலும் தீவிரச் சுகாதாரத் திட்டத்தின்கீழ் கழிவறைகள் கட்டப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். பெரியார் மாவட்டத்தில் தீவிரச் சுகாதாரத் திட்டத்தின் வெற்றியை நேரில் கண்டு அறிவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வளர்ச்சித் துறை அதிகாரிகளும், யூனிசெப், ஸ்வீடன் நாட்டு ஸிடா அமைப்பு ஆகியவற்றின் அதிகாரிகளும் வந்து போகின்றனர். இந்தச் சுகாதாரத் திட்டம் இந்தியாவில் மட்டுமன்றி வளரும் நாடுகள் அனைத்திலும் செயல்படுத்துவதற்கு ஏற்ற நல்ல முன்மாதிரியாகும் என்று அவர்கள் பாராட்டுகின்றனர்.

# செப்புத் திருமேனிகளின் அழிவும் பாதுகாப்பும்

**டாக்டர் வே. ஜெயராஜ்**
**காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியகம்**
**சென்னை**

**செ**ப்புத் தொழில்நுட்பங்கள் இரும்புக்காலத்திற்கு முன்னரே சமீப கிழக்கு நாடுகளில் சுமார் கி.மு.3000 ஆண்டுவாக்கில் உருவாகியுள்ளன. மொகஞ்சோதாரோவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 'நடனமாது'வின் வெங்கலச் சிற்பத்திலிருந்து இந்தியாவிலும் சிற்ப வார்ப்பு முறை கி.மு.2500க்கு முன்னரே நடைமுறையில் இருந்துள்ளது தெரிகிறது.

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் புதை குழியில் கிடைத்த 'பெண் தெய்வ' வெங்கலச் சிற்பம் கி.மு. ஏழாம் நூற்றாண்ண்டில் வெங்கலச் சிற்ப வார்ப்பு முறை வழக்கில் இருந்ததை நிரூபிக்கிறது. பெரியார் மாவட்டம் கொடுமணலில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத் துறை நடத்திய அகழாய்வில் கிடைத்த மணிக்கற்கள் பதிக்கப்பட்ட வெங்கலப் புலி உருவம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொழில் நுட்பத்தைத் தெரிவிக்கிறது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள அமராவதி புத்தரின் பஞ்சலோகத் திருமேனி கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தது. பல்லவர் காலத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை சிற்பங்களின் வார்ப்பு முறை சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும் மிகக் குறைந்த அளவிலே இருந்தாலும் கூட, அக்காலத் தொழில் நுட்பத்தை விளக்கும் கருவிகளாக அவை நிலவுகின்றன. அதனைத் தொடர்ந்து பாண்டியர் காலத்திலும் இத்தொழில்நுட்பம் நிலவி இருந்தாலும் மிகக் குறைவான செப்புத் திருமேனிகளே உள்ளன. ஆனால் சோழர் காலத்தில்தான் கி.பி. 9 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை இக்கலை உன்னத நிலை அடைந்தது.! இன்று புதையலாகக் கிடைக்கும் பஞ்சலோகச் சிற்பங்களும் பணிமுற்றுப் பெறாத சிற்பங்களும் சோழர்களின் கலைமாட்சியை விளம்புவதோடல்லாமல் செயல்முறையினையும் விளக்குகின்றன. பிற்காலத்தில் விஜயநகர மன்னர்கள் இக்கலையில் நாட்டமுடையவர்களாக இருந்தாலும், இக்காலச் செப்புத் திருமேனிகளின் மாட்சி சோழர்கால மாட்சியுடன் ஒப்பிடத்தக்கவை அல்ல.

சென்னை அருங்காட்சியகத்திலுள்ள ஆயிரக்கணக்கான செப்புத் திருமேனிகள் இந்தியப் புதையல் சட்டத்தின் கீழ் பெறப்பட்டதாகும். பெரும்பாலானவை தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தென் ஆர்க்காடு, ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். இத்திருமேனிகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்து அவை கெட்டி வார்ப்பு முறையில் செய்யப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பாரம்பரிய வார்ப்பு முறை இன்றும் கூட தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலை போன்ற இடங்களில் நிலவி வருகிறது. தமிழகத்தில் இன்றும் நிலவி வரும் இவ்வார்ப்பு முறை யாவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த வார்ப்பு முறையாகும்.

**பஞ்சலோகம்**

பொதுவாக 'வெங்கலம்' என்பது செம்பும் 75- 80 சதவிகிதம் வெள்ளீயமும் 25 -20 சதவிகிதம் கலந்த ஒரு உலோகக் கலவை ஆகும். பண்டைய செப்புத் திருமேனிகள் செம்பு, வெள்ளீயம், காரீயம்; வெள்ளி, தங்கம் ஆகிய ஐந்து உலோகங்கள் கலந்த 'பஞ்சலோகக்' கலவையில் செய்யப்பட்டதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் இக்கட்டுரை ஆசிரியர் ஆய்வு செய்துள்ள நூற்றுக்கணக்கான இவ்விதச் சிற்பங்களில் செம்பு, வெள்ளீயம், காரியம், துத்தநாகம், இரும்பு ஆகியவைதான் கலந்துள்ளன. தங்கம், வெள்ளி மிகமிகக் குறைந்த அளவில் 0.1 சதவிகிதத்துக்கு கீழ் உள்ளன. இது சிற்பங்களின் புனித தன்மைக்காகவே கலக்கப்பட்டதாக இருக்கலாம். சில சிற்பங்களில் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது ஆனால் அவை பொன் சிற்பங்கள் அல்ல.

தென்னிந்திய செப்புத் திருமேனி



**வெங்கல நோயினால் பாதிக்கப்பட்ட தேவி சிற்பம்**

படுத்தப்பட்டது. கி.பி. முதலாம் நூற்றாண்டில் கூட வெற்றிட வார்ப்பு முறையில் செப்புத் திருமேனிகள் வார்க்கப்பட்டுள்ளன.

### கட்டி வார்ப்பு முறை

மெழுகு உருவத்தைப் பயன் படுத்தி மெழுகு இருந்த இடத்தில் உலோகக் கலவை நிரப்பும்படியாக மெழுகை உருக்கி வெளியேற்றி சிற்பம் செய்வதாலும் வெற்றிடம் ஏதுமின்றி கட்டியான உருவம் கிடைப்பதாலும் இம்முறை 'கட்டி வார்ப்பு முறை' என்று அழைக் கப்படுகிறது. இம்முறையில் தேவை யான உருவம் மெழுகினால் செய்யப் பட்டு அதற்கு மேல் 'புற்றுமண்' ணாலான மெல்லிய பூச்சு பூசி உலரவைத்து மறுபடியும் தேவையான அளவு மண் மெழுகு உருவத்தின் மீது பூசப்படும். இவ்வுருவம் நிழலில் மட்டும் உலர்த்தப்படுகிறது. நன்கு உலர்ந்த பின் சுமார் 80 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் மெழுகு உருக்கப்பட்டு அகற்றப்படும். இப்போது கிடைப்பது கழிமண் வார்ப்பு ஆகும்.

இவ்வார்ப்பு உலோக உருக்குக் கலவை ஊற்றுவதற்கான வாய் வெளியே தெரியும் வண்ணம் புதைக்கப்படும். கைகள் மற்றும் அதிக வேலைப்பாடுடைய பகுதியில் உலோக உருக்குக் கலவை நன்கு சேரும் வண்ணம் இணைப்புக் குழாய்களும் செய்யப்பட்டிருக்கும். இப்போது உருகிய உலோகக் கலவை சிறிது சிறிதாக ஊற்றப்படும். வார்ப்பு முழுவதும் நிறைந்ததும் இயற்கை யாகவே குளிரவைக்கப்படும்.

இக்கட்டுரை ஆசிரியரால் பழங் கால சிற்பங்களின் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டபோது அவை கழிமண் வார்ப்புகளில் மிகமிக மெதுவாக குளிரவைக்கப்பட்டது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நன்கு குளிர்ந்த பின் வார்ப்பு வெளியே எடுக் கப்பட்டு கழிமண் பகுதி உடைக் கப்பட்டு சிற்பம் வெளிக்கொணரப் படும். ஒரே வார்ப்பில் செய்ய முடியாதவை தனியாகச் செய்து ஒட்ட வைக்கப்படும். இவ்விதமாகப் பெறப் பட்ட சிற்பம் சிற்பக் கலைஞரால் உளி, அரம் போன்ற கருவிகளால் வெட்டியும் தேய்த்தும் கலை வேலைப்பாடுகள் செய்யப்பட்டு



கட்டி வார்ப்பு முறையில் வார்ப்பிலிருந்து எடுக்கப்பட்ட சோழர்கால நடராஜர் சிற்பம்

களில் செம்பு அதிகமாக உள்ளதால அவற்றைச் செப்புத் திருமேனிகள்' என்று அழைக்கப்படுகின்றன. வெள்ளீயம் இவ்உலோகக் கலவைக்குக் கடினத்தன்மையும் செதுக்குவதற்கேற்றத் தன்மையும் கிடைப்பதற்காகவே செம்புடன் சேர்க் கப்பட்டுள்ளது. காரியம் இவ்வுலோக உருக்குக் கலவையை வார்ப்பில் ஊற்றும்போது நன்கு வழிந்தோடு வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. இரும்பு, துத்தநாகம் போன்ற பிற உலோகங்கள் உலோகக் கலவை யிலுள்ள அழுக்குகளாகும். அக்காலத் தில் திட்டவட்டமான அளவில் உலோகங்களை இக்காலத் தொழிற் சாலைகளில் செய்வது போல சேர்த்து சிற்பங்கள் செய்யவில்லை. ஏனெனில், ஒரே இடத்தில் புதைய லாகக் கிடைத்த சிற்பங்களின் உலோக விகிதத்தில் மாற்றங்கள் உள்ளன. ஒரே சிற்பத்தின் பல பகுதிகளில் ஒரே விகிதாச்சாரத்தில் உலோகங்கள் இல்லை. எனினும், செப்புத் திருமேனிகளில் காணப்படும் உலோகங்களின் அளவினைக் கொண்டு உலோகங்களை வகைப் படுத்தலாம்.

பெருங் கூட்டுப் பொருட்கள் 2 சதவிகிதத்திற்கு மேல் செம்பு, வெள்ளீயம், காரியம், துத்தநாகம்.

சிறுங் கூட்டுப் பொருட்கள் 0.1 சதவிகிதம் முதல் 2 சதவிகிதம் வரை இரும்பு, நிக்கல், ஆர்சனிக், ஆண்டிமணி.

அடையாள உலோகங்கள் 0.1 சதவிகிதத்திற்குக் கீழ் பிஸ்மத், காட்மியம், வெள்ளி, தங்கம்.

### சிற்ப வார்ப்பு முறைகள்.

கட்டி வார்ப்பு முறை (மெழுகு இழத்தல் முறை,) 'வெற்றிட வார்ப்பு முறை' என்ற இரண்டு முறைகளில் சிற்பங்கள் பண்டைத் தமிழகத்தில் வார்க்கப்பட்டன. எனினும் முதல் முறையே பெருமளவில் செயல்

பின்னர் கடற்கரை மணல் கொண்டு தேய்த்து மெருகேற்றப்படும். இம் முறையில் ஒரு வார்ப்பு கொண்டு ஒரே ஒரு உருவம் தான் செய்ய இயலும். எனவே, எல்லாவிதத்திலும் ஒற்றுமையான இரண்டு சிற்பங்களை உருவாக்கவே முடியாது. சோழர் காலச் சிற்பங்கள் அனைத்தும் இம்முறையில் செய்யப்பட்டவை யாகவே உள்ளன.

## வெற்றிட வார்ப்பு முறை

உட்பக்கம் வெற்றிடமாகவோ அல்லது வேறு பொருட்களாலும் நிரப்பப்பட்டு மேற்பகுதி மட்டும் வெங்கலத்தால் வார்ப்பதால் இம் முறை 'வெற்றிட வார்ப்பு ம்றை' எனப்படும். இம்முறையில் செய்யப் படும் சிற்பங்கள் கட்டி வார்ப்பு முறையில் செய்யப்படும் சிற்பங்களைக் காட்டிலும் எடை குறைவாக இருக்கும். இவ்வித வார்ப்பு முறையில் செய்யப்பட்ட உருவங்கள் மிகக் குறைவே. முதலில் களிமண்ணால் வேண்டிய உருவம் செய்யப்படும். பின்னர் மெழுகினை கயிறு போன்று திரித்து அவ் வுருவத்தின் மீது இடைவெளியின்றி சுறறப்படும். மெழுகுக் கயிறு மண் உருவத்தின் மீது இடைவெளியின்றித் தேய்த்துப் பரப்பப்படும். வேலைப் பாடுகள் மெழுகு கொண்டே உருவாக்கப்படும்.

உருக்கிய உலோகக் கலவை உருவத்தின் எல்லாப் பகுதியையும் அடைவதற்கு எளிதாக இருக்க மெழுகினால் இணைப்புகள் உருவாக் கப்படும். இந்த இணைப்புகள் உள்ளிட்ட அனைத்து மெழுகுப் பகுதியின் மேலும் மெல்லிய புற்றுமண் கலவை பூசப்படும். நிழலில் உலர்த்தப்பட்ட பின்னர், இந்த வார்ப்பு சூடாக்கப்பட்டு மெழுகு வெளியேற்றப்படும். இவ்வார்ப்பு பூமியினுள் புதைக்கப்பட்டு உருகிய உலோகக் கலவை ஊற்றப்பட்டு இயற்கையாகக் குளிர வைக்கப்படும். பின்னர் தேவையற்ற இணைப்புப் பகுதிகள் போன்ற உலோகப் பகுதிகள் அகற்றப்பட்டு உலோகக் கலைஞரால் உளி, அரம் போன்ற வற்றால் வேலைப்பாடுகள் அமைக் கப்பட்டு கடல் மண்ணால் மெருகேற்றப்படும். இம்முறையிலும் ஒரு வார்ப்பிலிருந்து ஒரு சிற்பம் மட்டுமே உருவாக்க முடியும். சோழர் காலத்தில் குத்துவிளக்குகள் இம் முறையில் ஒரே வார்ப்பாகச் செய்யப் பட்டன. களிமண்ணுக்குப் பதிலாக இரும்புக் கம்பிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

## சிலை திருடுவோரிடமிருந்து பாதுகாக்க

இந்தியப் புதையல் சட்டம், 1878 மற்றும் அரும்பொருட்கள் ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டம், 1947 ஆகியவை இவ்வித விலைமதிப்பற்ற கலைச் செல்வங்களைப் பாதுகாக்க இந்திய மைய அரசால் இயற்றப்பட்ட சட்டங் களாகும். இச்சட்டங்கள் கலைக் கூடங்கள் அருங்காட்சியகங்கள் ஆகிய இடங்களில் சிற்பங்களைப் பாதுகாக்க உதவிபுரிகின்றன. தமிழகக் கோயில்களிலுள்ள வெங்கலச் சிற்பங் களைத் திருட்டுகளிலிருந்து பாது காக்க தமிழ்நாடு அரசு சிலைப் பாதுகாப்பு மையங்களை உருவாக்கி பாதுகாக்க நடவடிக்கை எடுத்து கோயில்களில் தகுந்த பாதுகாப்பு மையங்களை உருவாக்கி பாதுகாக்க நடவடிக்கை எடுத்து கோயில்களில் தகுந்த பாதுகாப்பு இல்லாமலும் வழிபாட்டில் இல்லாமலும் உள்ள சிற்பங்களைப் பாதுகாத்து வருகிறது.

**வெற்றிட வார்ப்பு முறையில் செய்யப்பட்ட நாகப்பட்டினம் புத்தர் சிற்பம்**



இம்மையம் திருவாரூரில் உள்ளது. இம்மையத்தில் சுமார் 1300 சிற்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு மையங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மனம்** ஒருவனுடைய மனம் தூய்மையாய் இல்லாவிட்டால், பணமோ, குணமோ, வலிமையோ, வனப்போ, அவனுக்குப் பயன்படாது.

-அரிஸ்டாடில்

### இந்தியப் புதைபொருள் சட்டம், 1878

பூமிக்குள்ளிருந்து கிடைக்கும் பத்து ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள அரும்பொருட்களைக் கண்டெடுப்பவர், அவை பற்றிய தகவலை தன்னால் முடிந்த வரை உடனடியாக அந்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கு எழுத்து மூலம் கீழ்க்கண்ட குறிப்புகளுடன் தெரிவிக்க வேண்டும்.

அ. அரும்பொருட்களின் தன்மை, தோராய மதிப்பு

ஆ. அரும்பொருட்கள் கிடைத்த இடம்

இ. அரும்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட நாள் உடனடியாக அரும்பொருட்கள் சமீபத்திலுள்ள கருவூலத்திலோ அல்லது மாவட்ட ஆட்சியர் அரும்பொருட்களின் பாதுகாப்புக்குத் தகுதியானது என்று கருதும் இடத்திலோ அவற்றைப் பாதுகாக்கவேண்டும். விசாரணைக்குப் பின்பு அருங்காட்சியகங்களின் இயக்குநரின் உதவியுடன் அதன் மதிப்பினை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து அருங்காட்சியகத்தில் பாதுகாக்கக் கொடுக்கப்படும்.

அருங்காட்சியகத்தில் பாதுகாக்கத் தகுதியற்றது என்று அருங்காட்சியகங்களின் இயக்குநர் கருதினால் தஞ்சாவூர் கலைக்கூடம் அல்லது பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் அருங்காட்சியகங்களின் இயக்குநரால் தொடர்பு கொள்ளப்பட்டு அவரது பரிந்துரையின்படி மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்படும். அரும்பொருளைக் கண்டுபிடித்த வருக்கும் நிலச் சொந்தகாரருக்கும் ஈட்டுத் தொகை அரும்பொருளின் மதிப்புடன் 20 சதவிகிதம் சேர்த்து கண்டெடுத்தவருக்கு 60 சதவிகிதமும், நிலச் சொந்தக்காரருக்கு 40 சதவிகிதமும் வழங்கப்படும். உரிமை கோரப்படாத அரும்பொருட்களும் நீதித்துறையால் கைப்பற்றப்பட்ட உரிமைகோரப்படாத அரும்பொருட்களும் அருங்காட்சியகத் துறைக்கு வழங்கப்பட்டு பாதுகாக்கப் படுகின்றன.

### அரும்பொருட்கள் (ஏற்றுமதிக் கட்டுப்பாடு) சட்டம், 1947

அரும்பொருட்களை ஏற்றுமதி செய்வதில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர இந்திய மைய அரசு அரும்பொருட்கள் ஏற்றுமதிக் கட்டுப்பாடு சட்டம், 1947-ஐக் கொண்டு வந்தது. இச்சட்டப்படி நாணயம், சிற்பம், சுவடிகள், கல்வெட்டு, மற்றும் பிற கலைப்பொருட்கள், கலை வேலைப்பாடுகள், பழங்காலத்திலுள்ள அரசியல், நடைமுறை, ஆடைகள், வழிபாடு, இலக்கியம், கைத்தொழில், கலை, அறிவியல் விளக்கும் சகல பொருட்கள், நூற்றாண்டுக்கு மேற்பட்ட எப்பொருளையும் அரும்பொருளாகக் கருதி மைய அரசு அரசிதழில் வெளிவரும் பொருட்கள், ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய முடியாது. ஒவ்வொரு மாநிலத்திலும் நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்ட எவ்விதக் கலைப் பொருளையும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுக் குழுவின் ஒப்புதல் பெற்ற பின்னரே வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய இயலும்.

தனியார் தங்களது சொத்து என்று கருதும் நூற்றாண்டுக்கு மேற்பட்ட செப்புத் திருமேனிகளை உரிய புகைப்படங்களுடன் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பல்வேறு சட்டங்கள் இருப்பினும் நமது கலைச் செல்வங்களைப் பல்வேறு முறைகளில் நாம் இழந்து வருகிறோம்.

### சிலைத் திருட்டுத் தடுப்பு

செப்புத் திருமேனிகள் கோயில்களிலிருந்து திருடப்பட்டு சிதைவைத் தடுக்க தமிழ்நாடு அரசு காவல்துறைக் கண்காணிப்பாளர் சிற்பப் பிரிவு ஒருவரை நியமித்து செப்புத் திருமேனிகள் திருட்டைத் தவிர்த்து வருகிறது. பத்தூர் நடராஜர் என்ற செப்புத் திருமேனி திருடப்பட்டு, பம்பாய்க்கும் தொடர்ந்து அமெரிக்கா தேசத்திற்கும் பின்னர் இங்கிலாந்து தேசத்திற்கும் சட்ட விரோதமாகக் கடத்தப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடியதன் விளைவாகத் திரும்பவும் பத்தூர் நடராஜர் செப்புத் திருமேனியை நாம் பெற்றுள்ளது நமக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

### சிற்பங்களைச் சிதைத்தல்

தமிழ்நாட்டில் பழங்காலச் செப்புத் திருமேனிகளில் தங்கம் பெருமளவில் கலந்துள்ளது என்ற கருத்தே பெரும்பாலும் செப்புத் திருமேனிகள் திருடப்பட்டு சில பகுதிகள் உடைக்கப்படுவதற்குக் காரணமாகும். திருடப்பட்ட சிற்பத்தின் சில பகுதிகள் உடைக்கப்பட்டு, தங்கம் இருக்கிறதா என்று சோதிக்கப்பட்டு தங்கம் இல்லை யென்றால் அவை திருடியவர்களால் தூக்கி எறியப்படுகின்றன. இப்படிப் பட்ட சிற்பங்களும் பெருமளவில் காவல்துறையினரால் கைப்பற்றப் பட்டு அருங்காட்சியகங்களில் அடைக்கலம் புகுகின்றன.

### பழங்காலச் செப்புத் திருமேனிகளின் போலிகள்

வெளிநாடுகளில் தமிழகப் பழங்காலச் செப்புத் திருமேனிகளுக்கு மோகம் இருப்பதால் பழங்காலச் செப்புத் திருமேனிகள் போன்று போலிச் செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டு அவை பூமியில் புதைக்கப்பட்டோ அல்லது வேதிய முறையிலோ பழமையானவையாக மாற்றப்பட்டு அதிக விலையில் விற்கப்படுகின்றன. சில வேளைகளில் வல்லுநர்கள் கூட ஏமாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விதச் சூழ்நிலைகளில் வேதியப் பாதுகாப்பு வல்லுநர்கள் உதவக்கூடும். ஒரு சிற்பத்தை ஆதாரமாகக் கொண்டு வடிக்கப்பட்ட புதிய சிற்பம் ஆதாரச் சிற்பத்தை விட சிறியதாகவே இருக்கும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டு பூமிக்கு அடியில் கிடைத்த செப்புத் திருமேனிகள்

பெரும்பாலும் பசுங்களிப்பு பூசப்பட்டதுபோல் பார்ப்பதற்கு நேர்த்தியாக இருக்கும். இதனை 'இளம் பசுங்களிப்பு' (பேட்டினா) என்று வல்லுநர்கள் அழைப்பர். இது செப்புத் திருமேனி நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பூமியில் புதையுண்டதால் உருவாகிய காரத்தன்மையுடைய கார்பனேட் ஆகும். இதனை செயற்கையாக உருவாக்குவது கடினம். அதனை வல்லுநர்கள் எளிதில் இனங்கண்டுகொள்ள முடியும்.

### அறிவியல் நடவடிக்கைகள்

செப்புத் திருமேனிகளை இனங்கண்டுகொள்ள பல்வேறு அறிவியல் முறைகள் உள்ளன. பல்வேறு கோணங்களில் புகைப்படமெடுத்து அளவுகள், எடை ஆகியவற்றுடன் அருங்காட்சியகங்களில் செப்புத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு முறைகளில் பாதிப்பு ஏதுமின்றி உலோகப் பகுதிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, கலந்துள்ள உலோகங்களின் அளவுகள் பதிவு செய்யப்படுகின்றன. ஒருவேளை செப்புத் திருமேனி திருடப்பட்டு புதிய சிற்பமாக வடிக்கப்படுமாயின் சிற்பத்தின் குறிப்பிட்ட இடத்தில் கிடைக்கப்பட்ட உலோகங்களின் கலப்பு விகிதம் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பத்தில் மாறுபடுமாயின் அது போலியை உறுதிப்படுத்தும். உலோக உட்புறக் கூறுகளை வெளிப்படுத்தும் முறைகளும் உதவக்கூடும். மனிதனுக்கு மனிதன் கைரேகைகளில் வித்தியாசம் காண்பது போல உலோகங்களின் உறைநிலைகளில் சிற்பங்களின் உட்பகுதி வித்தியாசப்படும். இவை ஆதாரச் சிற்பத்திலிருந்து போலி சிற்பத்தைக் காட்டிவிடும். 'ஹாலோ கிராமி' என்று சொல்லக்கூடிய எக்ஸ்ரே ஒளிப்படமுறையும் போலிகளை இனங்கண்டு கொள்ள உதவும்.

சென்னை அரசு அருங்காட்சியக வேதிப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம் :


*1851*-இல் உருவாக்கப்பட்ட சென்னை அருங்காட்சியகத்தில் அதிக அளவில் புதையலாகக் கிடைத்த செப்புத் திருமேனிகளைப் பாதுகாக்க அங்கு *1930*-இல் வேதியப் பாதுகாப்பு ஆய்வகம் ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வாய்வகம் தொடக்கத்திலிருந்தே பாதுகாப்புப் பணியோடு ஆராய்ச்சிப் பணிகள் செய்து வருகிறது. இந்த ஆய்வகம் செப்புத் திருமேனிகளைப் பாதுகாப்பதுடன் எவ்வாறு போலிகளை இனங்கண்டுகொள்வது, எம்முறையில் அவை செய்யப்பட்டன போன்றவற்றை ஆராய்ச்சி வழிகண்டறிந்து ஆயிரக்கணக்கான செப்புத் திருமேனிகளைப் பாதுகாத்து வருகின்றன.

தமிழ்நாட்டில் பாரம்பரிய செப்புத் திருமேனிகளின் வார்ப்பு முறை அழியாமல் இருக்க அருங்காட்சியகங்கள் அவற்றைப் பேணிக்காக்கின்றன. அது மட்டுமின்றி, பல்வேறு அரசுத்துறைகள் கலைஞர்கள் இனங்கண்டு வார்ப்புக் கலை அழியாமல் பாதுகாக்க ஊக்கமளித்து அம்முறையில் செய்யப்பட்ட செப்புத் திருமேனிகளை வாங்கி அவர்களுக்கு வாழ்வளிக்கின்றன. தஞ்சை மாவட்டம் சுவாமிமலையில் பல்வேறு பாரம்பரிய வார்ப்புக் கலைஞர்கள் இன்றும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்கள் செப்புத் திருமேனிகளின் வழியாகச் சிறப்புமிக்க நமது பாரம்பரிய மேன்மைகளை விளக்கி நிற்கின்றன. பழம்பெருமை படைத்த செப்புத் திருமேனிகளை இளம் தலைமுறையினர்க்கு எவ்விதத்திலும் அழியாமல் காக்க உதவிடுவோம்.

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஊஞ்சலில்
உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல;
புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது
போன்றது.

-காண்டேகர்





**புகை உயிருக்குப் பகை. புகையின் மூலப் பொருள் புகையிலை. புகையிலைப் பழக்கத்தினால் இந்தியாவில் தினமும் சுமார் 2,000 பேர் இறக்கின்றனர். ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 10 இலட்சம் பேர் இதனால் இறக்கின்றனர். உலகில் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் புகையிலைப் பழக்கத்தினால் மரணமடைகின்றனர். 2020-ஆம் ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியாக உயரும்.**

**இந்தியாவில் 15 வயதுக்கு மேற்பட்ட 14.2 கோடி ஆண்களும், 7.2 கோடி பெண்களும் புகையிலைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.**

**புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மொத்த ஆண்களில் பாதிப் பேரும், பெண்களில் ஐந்தில் ஒரு பங்கினரும், புகையிலைப் பழக்கம் உடையவர்கள். 2000-மாவது ஆண்டில், புகையிலைப் பழக்கத்தினால் 2.4 இலட்சம் பேருக்குப் புற்றுநோய் ஏற்படும்.**

**90 சதவிகிதத் தொண்டைப் புற்றுநோய் புகையிலைப் பழக்கத்தினால்தான் உண்டாகிறது. நெஞ்சுவலி ஏற்படக் காரணமாக அமைவது புகையிலைப் பழக்கம். நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட 57 இலட்சம் பேர்களில் 26 இலட்சம் பேருக்குப் புகையிலைப் பழக்கத்தினால் இந்த நோய் ஏற்படுகிறது.**

**புகையிலைத் தொழிலினால் 30 முதல் 40 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, ரூ.1078 கோடி வருவாயும் கிடைக்கிறது. ஆனால், புகையிலைப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை குணமாக்க ரூ.2,394 கோடி தேவைப்படுகிறது. வரவு எட்டணா செலவு பத்தணா என்பது போலல்லவா இது இருக்கிறது!**



# ஆழ்வார்கள்

பேராசிரியர்
டாக்டர்
ந. சுப்புரெட்டியார்

*1995 ஜனவரி எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.*

எம்பெருமானுடைய திருக்கண்களாகிய அமுத வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பவர் என்னும் காரணத்தினால் 'ஆழ்வார்கள்' என்ற திருநாமம் பெற்றனர். இந்த ஆழ்வார்கள் பதின்மர். இதனால் பதின்மர் செந்தமிழ், என்ற திவ்விய கவிப்பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்களின் திருவாக்கும் எழுந்தது. இப்பதின்மர்: பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசைபிரான், நம்மாழ்வார், குலசேகப் பெருமாள், பட்டர்பிரான் பெரியாழ்வார், தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், கலியன், திருமங்கையாழ்வார் என்பர். நம்மாழ்வார் திருவடிகளான மதுர கவிகளையும் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான கோதையையும் சேர்த்து 'ஆழ்வார்கள்' பன்னிருவர் என்று கூறுவதும் உண்டு.

## முதலாழ்வார்கள் மூவர்

### 1. பொய்கையாழ்வார்

இவர் காஞ்சி சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதியின் வடபுறத்திலுள்ள பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரை மலரில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் திருவவதரித்தார். இவருடைய பெருமையைக் கண்ட அனைவரும் இவரைத் தேவிற் சிறந்த திருமாலின் பாஞ்சசன்னியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக' அறுதியிட்டனர். பொய்கையில் அவதரித்தது காரணமாகப் 'பொய்கையாழ்வார்' என்ற திருநாமம் பெற்றார்.

### 2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரம் என வழங்கும் திருக்கடல் மல்லையில் குருக்கத்திப் பந்தரில் ஒரு குருக்கத்தி மலரில் ஐப்பசித் திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். வடமொழியில் '(பூ சத்தாயாம்)' என்ற தாது வடிவாகப் பிறந்தது 'பூதம்' என்ற சொல். இது சத்தைப் பெற்றது என்று பொருள்படும். எம்பெருமானின் திருக்குணங்களை அனுபவித்தே சத்தைப் பெற்றார் என்னும் காரணம் பற்றியே பூதத்தாழ்வார் என்ற திரு நாமத்தால் வழங்கப்பெற்றார். இவரை திருமாலின் கௌமோதகா என்ற கதையின் அம்சமாகக் கருதுவர் வைணவப் பெருமக்கள்.

### 3. பேயாழ்வார்

சென்னை திருவல்லிக்கேணி என்னும் திவ்விய தேசத்திற்குத் தெற்கிலுள்ள மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் திருக்கிணற்றில் உண்டானதொரு செவ்வல்லி மலரில், ஐப்பசித் திங்கள் சதய நட்சத்திரத்தில் திருமாலின் நந்தகம் என்ற வாளின் கூறாக அவதரித்தார். இவர் ஒப்புயர்வற்ற பகவத் பத்தியையுடையவராய், பார்ப்பவர்கள் கண்ணில் இவர் பேய்ப்பிடித்தவர் என்னும்படி நெஞ்சழிந்து கண் கழன்று அழுதும் சிரித்தும் தொழுதும் எழுந்தாடியும் மகிழ்ந்து பாடியும் அலறியுமே பொழுது போக்கிக் கொண்டிருந்தமையால் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றவர்.

இந்த மூவரும் பார்ப்பனர் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை.

இம்மூவருக்கும் வைகுந்த நாதனின் திருவாணையால் சேனை முதலியார் தனித்தனியே பஞ்ச சமஸ்காரம் செய்து வைத்துத் திருமந்திரப் பொருளையும் உபதேசித்ததாக வரலாறு. ஒருநாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள் இராமல் ஓடித்திரியும் யோகியர்களாய் இருந்த இவர்கள், தம்மிலும் ஒருவரையொருவர் அறியாமல் தனித் தனியே சஞ்சாரம் செய்து கொண்டிருந்தவர்கள். இவர்கள் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் முகமாக உலகத்தை உய்விக்க என்ற திருவுள்ளங்கொண்ட எம்பெருமான், இவர்களைத் திருக்கோவலூரில் மிருகண்டு என்பாரின் திருமாளிகையில் உள்ள இடைகழியில் சந்திக்க வைத்து அவர்களை நெருக்கிக் காட்சி நல்கினான். அப்பொழுதுதான் திவ்வியப்பிரபந்தம் பிறந்தது. மூவரும் அருளிச் செய்தவை முதல் மூன்று திருவந்தாதிகள்.

திருக்கோவலூர் நிகழ்ச்சிக்குப் பிறகு இவர்கள் மூவரும் திருக்



1. பொய்கையாழ்வார்

கோவலூர் ஆயனாரைத் தொழுது விடை பெற்றுக் காண்டு நெடுங்காலம் திருப்பதிகள் தோறும் சென்று மங்களாசாசனம் செய்து யோக பலத்தால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்திருந்து வையகத்தை வாழ்வித்தனர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. ஆனால் இவருக்குப் பின்னர்த் தோன்றிய ஆழ்வார்களுள் ஒருவராவது இவர்களைச் சந்தித்ததாகச் சான்றுகள் இல்லை.

### 4. திருமழிசையாழ்வார்

பார்க்கவர் என்ற முனிவருக்கும் தேவமாது கனகாங்கிக்கும் திருமழிசையில் சுதர்சனம் என்ற திருவாழியின் அம்சமாகத் தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் பிறந்தவர். பிரப்பந் தொழில்புரியும் திருவாளன், அவன் துணைவி பங்கயச்செல்வி இவர்களால் வளர்க்கப் பெற்றவர். இளமையில் தம் தந்தையின் குலத்தொழிலான கூடை முடைதல் போன்ற தொழிலில் ஈடுபட்டிருந்தார். தக்க வயது வந்ததும் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு எத்தனையோ நாடுகளிலும் சஞ்சாரம் செய்து ஒரு சித்தராகின்றார். எல்லாப் பொருளுக்கும் தலைமையான பரத்துவம் எது என்பது பற்றி ஆராய்ந்தார். உலகாயதம் பௌத்தம், சமணம் முதலிய அவைதிக சமயங்களுள்ளும், மாயாவாதம், சைவம் முதலான வைதிக சமயங்களிலும் ஒவ்வொன்றிலும் தனித்தனியே புகுந்து ஆராய்ந்து அவற்றிற்குரிய சாத்திர நூல்களைக் கற்றுத் தெளிந்து அவற்றிலுள்ள குறைபாடுகளைக் கண்டார். புதிய சமயத்திற்கு மாறிக்கொண்டே வந்தார். பேயாழ்வாரின் தொடர்பினால் வைணவ சமயத்திற்கு மாறினார். அவரால் பக்திசாரர் என்ற புதிய திருநாமமும் சூட்டப் பெறுகின்றார். திருக்குடந்தையில் தம் இறுதி நாட்களைக் கழித்து 1 திருச்சந்த விருத்தம் 2 நான்முகன் திருவந்தாதி என்ற இரு பிரபந்தங்களை அருளிச் செய்கின்றார். இத்திருப்பதியிலேயே பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து திருநாட்டுக்கு எழுந்தருளினார். பின் வந்த ஆழ்வார்கள் இவரைச் சந்தித்தமைக்குச் சான்றுகள் இல்லை.

### 5. நம்மாழ்வார்

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநகரி எனப்படும் திருக்குருகூரில் வைகாசி விசாகத்தில் பகவானது அம்சமும், கௌத்துவத்தின் அம்சமும் சேனை முதலியார் (விஸ்வக்சேனர்) அம்சமும் கூடிய ஒரு திருக்குமாரர் அவதரிக்கின்றார். தந்தையார் காரியார், தாயார் உடைய நங்கையார், திருக்குறுங்குடி நம்பியின் திருவருளால் அவதரித்ததாகச் சொல்வர். குழந்தை பிறந்த நாள் தொட்டு அழுதரற்றதல், பால்பருகல் முதலான மக்கள் இயல்பு ஒன்றுமின்றியும் வாட்டம் சிறிதும் இல்லாதும் பரிபூரணராக இருந்தது. உலகிலுள்ள ஏனைய குழந்தைகளின் இயல்புக்கு மாறாக இருந்தமையால் பெற்றோர் சூட்டிய பெயர் மாறன் என்பது. வகுளாபரணர், சடகோபர், பராங்குசர் என்ற வேறு திருநாமங்களும் உண்டு.

பெற்றோர் குழந்தையைத் திருக்குருகூரில் உள்ள திருக்கோவிலுக்கு எடுத்துச் சென்று பொலிந்து நின்ற பெருமானைச் சேவிக்கச் செய்தனர். பிறகு அக்குழந்தை அத்திருக்கோவிலிலுள்ள புளியமரத்தடியில் சென்று அமர்ந்தது. ஆழ்வாராகிய குழந்தை எழுந்தருளியிருந்த காரணத்தால் அந்தப் புளியமரத்தைத் திருப் புளியாழ்வார் என்று வழங்கலாயினர். இவரை ஆதிசேடன் அம்சமாகக் கருதுவர் வைணவப் பெருமக்கள். பெற்றோர்களும் திருப்புளியாழ்வார் அடியிலேயே குழந்தையைக் கிடத்தி வளர்த்து ஓம்பி வரலாயினர். குழந்தையும் பதினாறாண்டு வரையில் கண்விழித்துப் பார்த்தல், பேசுதல் முதலிய செயல்கள் ஒன்றுமின்றி இறைவனையே நினைத்தவண்ணம் அமர்ந்திருந்தது. பரமபதநாதன் நியமனப்படி சேனை முதலியார் தனிமையில் எழுந்தருளி இவருக்குத் திருவிலச்சினை செய்து எல்லாவித மந்திரார்த்தங்களையும் உபதேசித்தருளினார். திருமாலின், திருவவதாரம் என்று கருதும் அளவுக்கு வீறுபாடுடைய இந்த ஆழ்வார், பல காரணங்களால் ஆழ்வார்களின் தலைவராகக் கருதப்பெற்றவர்.

இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் 1. திருவிருத்தம், 2. திருவாசிரியம், 3. பெரிய திருவந்தாதி, 4



2. பூதத்தாழ்வார்

திருவாய்மொழி என்ற நான்கு. இவர் 35 திருநட்சத்திரம் வாழ்ந்திருந்து திருநாடு அலங்கரித்தனர்.

### 6. மதுரகவியாழ்வார்

திருக் குருகூருக்கு இரண்டுகல் தொலை விலுள்ள திருக்கோளூர் என்ற திவ்விய தேசத்தில் நம்மாழ்வார் அவதரித்த சில ஆண்டுகட்கு முன்னதாக அவதரித்தவர் மதுரகவிகள். பிறந்தநாள் சித்திரைத் திங்கள் சித்திரை நட்சத்திரம். பார்ப்பனக் குலத்தவர். வடமொழி தென்மொழி நூல்களையும், சாத்திரங்களையும் கற்றுத்துறைபோய வித்தகர். வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொண்ட இவர், அயோத்தி முதலிய தலங்களைச் சேவித்துக் கொண்டு பரிசுத்த பூமியாகிய அயோத்தியில் சில காலம் வாழ்ந்துவரலாயினர்.

அக்காலத்தில் ஒருநாள் இரவில் இவர் திருக்கோளூர் எம்பெருமானைத் தென்திசை நோக்கித் தொழுதார். அத்திசையில் ஒரு திவ்வியமான பேரொளியைக் கண்டு வியப்புற்றார். பல நாட்கள் நடந்து திருக்குருகூரை அடைந்தார். அவ்வூரை அடைந்ததும் அந்த ஒளி காணப்பெறவில்லை. ஊர்மக்கள் மூலம் திருப்புளியாழ்வாரின் அடியில் எழுந்தருளியிருந்த சடகோபரை அறிந்து, அவரையே தன் ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டு அவர் மூலம் தத்துவம், இதம், புருஷோத்தம் ஆகியவற்றின் இயல்புகளையெல்லாம் அறிந்து தெளிந்தார்.



3. பேயாழ்வார்

பகவத் பக்தியினும் பாகவத பக்தியே சிறந்தது என்ற உண்மையைக் கடைப்பிடித்துத் தம் ஞானாசிரியர் விஷயமாகக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற பிரபந்தத்தை அருளினார். தம் ஞானாசிரியர் திருநாடு அலங்கரித்த பின்னரும் இவர் குருகூரிலே இருந்துகொண்டு தம் ஆசிரியர் பெருமைகளை வெளியிட்டுக் கொண்டும் சில காலம் எழுந்தருளியிருந்து பின்பு சிந்தையும் மொழியும் செல்லா நிலைத்தான பேரின்பப்பெருவீட்டை அடைந்தவர்.

### 7. குலசேகராழ்வார்

கேரள மாநிலத்தில் கோழிக்கோடு என்ற இராஜதானியில் திருவஞ்சிக் களம் என்ற ஊரில் அரச வம்சத்தில் திருவவதரித்தார். தந்தையார் திட விருதன் என்னும் அரசன், தாயார் அரசமாதேவி நாதநாயகி. பிறந்தநாள் மாசித்திங்கள் புனர்பூச நட்சத் திரத்திரம். இவரை திருமாலின் திருமார்பிலுள்ள கௌத்துவ மணியின் அவதாரமாகக் கொள்வர். இவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் 'குலசேகரன்' என்பது. திடவிருதனுக்குப் பிறகு குலசேகரன் பல்லாண்டுகள் நல்லாட்சி செய்து நற்புகழ் பெற்றார். இவருக்கு ஆசைக்கு ஒரு மகளும், ஆஸ்திக்கு ஒரு மகனும் என்ற பழமொழிப்படி இளை என்ற மகளும், திடவிரதன் என்ற மகனும் பிறந்தனர்.

முழுமுதல் கடவுள் யார் என்ற விசாரத்தில் ஈடுபட்டார் குலசேகரன். கமலக்கண்ணனின் திருவருளால் நாராயணனே முழுமுதற் கடவுள் என்ற உண்மை அவரது ஞானக் கண்ணுக்குப் புலனாயிற்று. தெளிவாகவும் விளக்கம் அடைந்தது. திருமாலின் விபவாவதாரங்களில்



4. திருமழிசையாழ்வார்

இராமகிருஷ்ணாவதாரங்களிடத்தும் அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம், திருவேங்கடம், திருவத்துவச்சோடு ஆகிய திவ்விய தேசத்து எம்பெருமானின்களிடத்தும் பக்திப் பெருங்காதல் கொண்டிருந்தார். இராமனிடத்தில் ஈடுபாட்டினால் அவன் பெயராகிய 'பெருமாள்' இவர் பெயருடன் சேர்ந்து 'குலசேகரப்பெருமாள்' என்ற திருநாமத்துடன் வழங்கப் பெற்றார். இவருடைய அருளிச் செயல் 'பெருமாள் திருமொழி' என்பது. இவர் 67 ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்து பரமபதம் அடைந்தவர்.

### 8. பெரியாழ்வார்

தென்தமிழ்நாட்டில் காமராசர் மாவட்டத்தில் சிரிவில்லிபுத்தூரில் ஒரு திவ்விய தேசம். இந்தத் திருத்தலத்தில் பார்ப்பனர் மரபில் வேயர் குலத்தில் அவதரித்தவர், பெரியாழ்வார். தந்தையார் முகுந்த பட்டர். தாயார் பதுமவள்ளி அம்மை. பிறந்த திருநட்சத்திரம் ஆனி-சுவாதி. இவர் தந்தையார் இவருக்கு இட்ட பிள்ளைத் திருநாமம் விஷ்ணு சித்தர். இவரைக் கருடாம்சமாக அவதரித்தவர் என்று வைணவ உலகம் கருதும். நந்தவன கைங்கரியத்தை மேற்கொண்டு



5. நம்மாழ்வார்

பலவிதமான பூமாலைகள் தொடுத்து அத்திருத்தலத்து எம்பெருமான் வடபத்திரசாயிக்கு (ஆலிலைப் பள்ளியானுக்கு)ச் சாத்தி மகிழ்வார். பாண்டியன் அரசவையில் பரத்துவ நிர்ணயம் செய்து பொற்கிழி பெற்ற பெருமை இவருக்கு உண்டு. பாண்டிய மன்னன் இவருக்குப் பட்டர்பிரான் என்ற விருதை அளித்துப் பாராட்டு கின்றான். பட்டத்து யானையின்மீது ஏற்றி பவனி வரச் செய்கிறான். மகனுடைய விழாவைக் காணவரும் பெற்றோர் போல பரமபதநாதன் பெரிய திருவாழி திருச்சடங்குடன் பிராட்டியார் சமேதராய் ஆகாயத்தில் காட்சி அளிக் கின்றான். "எம்பெருமானின் சேர்த்தி யழகு (லாவண்யம்) இருள்தருமா இவ்வுலகில் வந்து நிற்கின்றதே, பாவிகளின் கண்ணெச்சில் பட்டு எம்பெருமானுக்கு என்ன தீங்கு நேரிடுமோ?" என்று அஞ்சியவர் போல் யானைக்கழுத்தின் மேல் கிடக்கும் மணியையே கைத்தாள மாகக்கொண்டு பாடத் தொடங்கு கின்றார். பாடி முடிக்கின்றார். இப்பிரபந்தம் மதுரை கூடலழகர் விஷயமாக ஏற்பட்டதாகப் பெரியோர் பணிப்பர். இவர் பாடியருளிய பாசுரங்கள் யாவும் 'பெரியாழ்வார் திருமொழி' என்ற பெயரில் முதலாயிரத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவர் எண்பத்தைந்து திருநட்சத்திரங்கள் வாழ்ந்ததாக, குரு பரம்பரைகளால் அறிய முடிகின்றது. இவர் பரமபதித்தது சிரிவில்லிப் புத்தூரில்.

## 9. ஆண்டாள்

இவள் பிறப்பு வினோதமானது. பெரியாழ்வார் திருத்துழாய் பாத்தி யமைத்தற்பொருட்டுக் களைக்கொட்டு கொண்டு நந்தவனத்தைக் கொத்துகையில் கொத்திய நிலத்தடியில் சீதேவி-பூதேவியின் அம்ச மாக ஒரு பெண் மகவு கிடைத்தது. கிடைத்த நாள் ஆடிமாதம் பூர நட்சத் திரம். மக்கட்பேறு வாய்க்கப்பெறாத ஆழ்வாருக்கு இக்குழந்தை 'இறைவன் அருளிய செல்வமாகத்' தோன்றியது. இவரும் இவருடைய மனைவி விரஜையும் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். கோதை என்பது இவர்கள் குழந்தைக்கு இட்ட பிள்ளைத்திருநாமம். குழந்தையின் விளையாட்டு விருப்பம், இலட்சியம், எல்லாம் பக்திமயமாகவே இருந்தன. கோதைக்கு ஆழ்வாரே கல்வி கற்றுத்தந்தார். இவருக்குக் கவிதை பாடும் ஆற்றலும் இருந்தது. கற்பனைக் கண்ணும் வாய்க்கப்பெற்றவளாக இருந்தாள்.

யுவதியாக வளர்ந்த பிறகு, கோதையின் காதல் பக்திக் காதலாக வளர்ந்தது.

'கோல்தேடி ஓடும்
கொழுந்ததே போன்றதே
மால்தேடி ஓடும் மனம்'

என்ற நம்மாழ்வாரின் அநுபவம் இவளுக்கு ஏற்பட்டு விட்டது. புருடோத்தமனான வேணு கோபால்தான் தான் படரவேண்டிய கொள்கொம்பு என்பதை உணர்ந்தாள். வடபத்திர சாயிக்குத் தன் தந்தையார் தொடுத்த மாலைகளைத் தான் அணிந்து பார்த்துக் கொள்வதால், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற திரு நாமமும் பெற்றாள்.

இவள் திருவரங்கப் பெருமானை மணந்ததாக வரலாறு. பெரிய பெருமானின் முன்மண்டபத்தில் இவளை நிறுத்திப் பெருமானைச் சேவிக்கச் செய்தனர். இவளும் அரவப் படுக்கையின் மீதேறி பெரிய பெருமாளின் திருமேனியில் கலந்து, அவரை என்றும் பிரியாதிருக்கும் நிலையை அடைந்தாள்.

இவள் அருளிய பிரபந்தங்கள் 1 திருப்பாவை 2 நாச்சியார் திருமொழி என்ற இரண்டு. இவை முத லாயிரத்தில் பெரியாழ்வார் திரு மொழியை அடுத்து இடம் பெற்றுள்ளன.

## 10. திருப்பாணாழ்வார்

இவர் சோழவளநாட்டில் திரு வரங்கத்திற்கு அருகில் காவிரியின் தென் கரையிலுள்ள உறையூரில் பாணர் குலத்தில் திருவவதரித்தவர். இவரைத் திருமாலின் ஸ்ரீவத்ச அம்சமாகக் கொள்வர், வைணவப் பெருமக்கள். பிறந்தநாள் கார்த்திகை மாதம் உரோகிணி நட்சத்திரம். இவரை வேதாந்த தேசிகர் 'பான் பெருமாள்' என்று சிறப்பித்துப் பேசுவர்.

இவர் பிறப்பே விநோதமானது. இவரைப் பெற்றெடுத்த தாய் தகப்பன் யாவரெனத் தெரிந்து கொள்ள இயலவில்லை. ஓர் அந்தணப் பெருமகன் கழனியிலே நெற் பயிர்க்கதிர்களுக்கிடையே கண் டெடுத்த குழந்தையே பாண்பெருமாள்.



6. குலசேகராழ்வார்



7. பெரியாழ்வார்

இக்குழந்தையை அவ்வூரில் பாணர் குலத்தில் பிறந்தான் ஒருவன் கண்டு, தன் நல்வினைப் பயன் என மகிழ்ந்து, இல்லத்திற்கு எடுத்துச் சென்று ஆவின்பால் போன்ற சத்துவகுண உணவையே கொடுத்து வளர்த்து வந்தான். வளர்ப்புத்தந்தை இவருக்கு என்ன பெயர் இட்டான் என்பது கூட அறியக்கூடவில்லை. அரங்கன் புகழை யாழ் கொண்டு பாடுவதையே பொழுது போக்காகக் கொண்டிருந்தமையால், அக்காலத்து மக்கள் 'பாணன்' என்றே இவரை வழங்கி வந்தனர்.

அக்காலச் சமூக நிலைப்படி, இவர் மனம் தாழ்வுணர்ச்சியால் பீடிக்கப் பெற்றிருந்தது. அரங்கன் திருக் கோயிலில் அடியிடுவதற்கு இவர் மனம் துணியவில்லை. ஆகவே காவிரியின் தென் கரையிலிருந்த வண்ணம் யாழும் கையுமாக நின்றுகொண்டு நம்பெருமானைத் திசை நோக்கித் தொழுவதை அன்றாட வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அரங்கனுக்குக் கைங்கரியம் செய்து வைத்த லோக சாரங்க மாமுனிவர் தமக்கு இறைவன் கனவில் தெரிவித்த வண்ணம் பாணரைத் தம் திருத்தோளில் ஏற்றிக் கொண்டு அரங்கன் சந்நிதியை அடைந்தார். இதனால் இவருக்கு 'முனிவாகனர்' என்ற திருப்பெயரும் வழங்கலாயிற்று. முனிவாகனர் அரங்கனது, திருமேனியை அடிமுதல் முடிவரை கண்குளிர சேவித்தார். அத்திருமேனியில் ஆழங்கால் பட்டு அதன் அழகை அனுபவித்து அந்த அனுபவத்திற்குப் போக்கு வீடாகப் பத்துப்பாசுரங்கள் கொண்ட 'அமல னாதிபிரான்' என்ற திவ்வியப் பிர பந்தத்தை அருளிச் செய்தார். இந்தப் பிரபந்தம் முதலாயிரத்தில் சேர்க்கப் பெற்றுள்ளது பத்துப்பாசுரங்களையும் பாடிப் பரவி உவப்போடு நிற்கையில் பெரியபெருமாளும் அவரை அங்கீ கரிக்க அவரும் அனைவரும் காண அப்பிரானது திருவடிகளில் மறைந்து இரும்புண்ட நீராயினார். இவர் இப்பூவுலகில் வாழ்ந்திருந்த காலம் ஐம்பது திருநட்சத்திரம் என்பர்.

## 11. தொண்டரடிப் பொடிகள்

சோழ நாட்டில் திருப்புள்ளம் பூதங்குடி என்னும் திவ்விய தேசத்திற்கு அருகில் சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவில் உள்ள திரு மண்டங்குடியில் அவதரித்தவர். பிறந்தநாள் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரம். இவரைத் திருமாலின் வைஜயந்தி என்னும் வனமாலையின் அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். தந்தையார் வேதவி சாரதர் என்ற முன்குடுமிப் பார்ப்பனர். தாயார் பெயர் அறியக்கூடவில்லை. இவருக்குத் தந்தையார் இட்ட பெயர் விப்ரநாராயணர் என்பது. தந்தை யாரிடமே கல்வி கற்றார். வேதசாத்திரங்களிலும் பயிற்சி பெற் றார். சேனை முதலியார் வைகுண்டத் தினின்றும் எழுந்தருளி அவருக்குப் பஞ்சசம்ஸ்காரம் செய்தார்.

திருஅரங்கம் சென்று அரங்க நாதனுக்கு மலர்த்தொண்டு புரிந்து வந்தார். இவர் அமைத்த நந்தவனம் இன்றும் உள்ளது. எப்படியோ தேவதேவி என்ற விலைமாதின் வலையில் சிக்கினார். பின்னர் பொருளில்லாத ஆழ்வாரை அவள் கைவிட்டாள். எம்பெருமான் மனித வடிவம்கொண்டு விப்ரநாராயண ருக்குத் தெரியாமல் ஒரு பொன் வட்டிலை விப்ரநாராயணர் தந்ததாகச் சொல்லி தேவதேவியிடம் சேர்த்தார். அடுத்தநாள் சந்நிதியிலுள்ள பொன் வட்டில் மறைந்த செய்தி எங்கும் பரவியது. தேவ தேவியின் வீட்டிலிருப்ப தாக வேலைக்காரி மூலம் அறிந்த அரச காவலர்கள் விப்ரநாராயணர் சிறையிலிடப் பெற்றார். கனவில் உண்மையை அறிந்த அரசன் நாராயணரை விடுவித்தான். பின்னர் இறைத் தொண்டில் மூழ்கி 'தொண டரடிப் பொடிகள்' என்ற திருநாமம் பெற்றார்.

இவர் அருளிச்செய்த பிரபந் தங்கள் 1 திருமாலை 2 திருப்பள்ளி எழுச்சி என்ற இரண்டு. இவை முதலாயிரத்தில் சேர்க்கப் பெற்றுள் ளன.

## 12. திருமங்கையாழ்வார்

சோழவள நாட்டில் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்குறையலூரில் கள்ளர் மரபில் அவதரித்தார். அவதரித்த நாள் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம். இவரைத் திருமாலின் சாரிங்கம் என்ற வில்லின் அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். பிறந்த குழந்தை நீலநிறமாக இருந்தமையால் நீலன் என்ற பெயரால் வழங்கப் பெற்றார். பெற்றோர் இட்ட பிள்ளைத்திருநாமம் கலியன் என்பது. தந்தையார் சோழ



8. ஆண்டாள்



**9.** தொண்டரடிப் பொடியாழ்வார்



**10.** திருப்பாணாழ்வார்



**11.** திருமங்கையாழ்வார்



**12.** மதுரகவியாழ்வார்

வேந்தனின் தானைத்தலைவர். இதனால் பிறந்த குடிக்கேற்ப இளமையிலேயே ஆயுதப்பயிற்சி பெற்று அதில் நன்கு தேர்ச்சி அடைந்தார்.

தந்தையாருக்குப் பிறகு ஆலநாட்டின் தலைவராகவும் சோழ மன்னனின் சேனைத் தலைவராகவும் விளங்கினார். அரச விரோதிகளுடன் திறமையாகப் போரிட்டு வாகை சூடியதால் 'பரகாலன்' என்ற புகழ்ப்பெயரும்வந்தடைந்தது. இவரது திறமையை நன்கு அறிந்த சோழமன்னன் அவரைத் திருமங்கை நாட்டுக்குச் சிற்றரசராக்கினான். தன் ஆட்சியில் இவர் அமைத்துக்கொண்ட அமைச்சரவையில் நீர்மேல் நடப்பான். நிழலில் ஒதுங்குவான். தார் ஊதுவான், தோலாவழக்கன் என்ற நால்வர் இருந்தார்.

'அண்ணன் கோயில்' என வழங்கும் திருவள்ளக்குளம் என்னும் திருப்பதியில் மருத்துவர் ஒருவர் மகளாகிய 'குமுதவல்லி'யை மணக்க விரும்பி அவர்போட்ட 1. திருவிலச்சினையையும், பன்னிரு திருமண்காப்பும் உடையவராக வேண்டும். 2. நாடோறும் ஓராண்டுக் காலம் 1008 திருமாலடியாருக்கு அமுது செய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தமும் பிரசாதமும் உண்ணல் என்ற இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேற்றி அவளைத் திருமணம் செய்துகொண்டார். ததியாராதனைத் திட்டத்தில் திறைப் பொருளும் கரைந்தது. அரசன் தந்திரமாக இவரைப் பிடித்து சிறையிலடைத்தான். காஞ்சி வரதராசர் திருவருளால் வேகவதியாற்றங்கரையில் கிடைத்த நிதியால் திறை செலுத்தி எஞ்சிய பொருளைத் ததியாராதனைக்கு வைத்துக் கொண்டார். அரசன் இவர் பெருமையை அறிந்த பல மரியாதை களைச் செய்தான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரும் ததியாராதனை தொடர்ந்தது. மீண்டும் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டது. தம் அமைச்சர்களுடன் மாறுவேடம் பூண்டு, கொள்ளையடித்து, பொருள் திரட்டி தொண்டை நடத்தி வந்தார். ஒருநாள் வயலாளி மணவாளன் ஓர் அந்தணன் கோலம் பூண்டு, தன் மனைவியுடன் பல அணிகளையும் தரித்துக்கொண்டு தன்னையே வழிபறிக்குமாறு செய் தான். மங்கை மன்னன் அவனை வழிமறித்து அவர்களை வழிப்பறி செய்தார். திருமந்திரத்தைப் பெற்றார். அந்தணன் அணிந்திருந்த மோதிரத் தையும் தம் பல்லால் கடித்து வாங்கினார். (சரணாகதி ஆகிவிட்டது) இவற்றால் மன்னனிடம் தத்துவ ஞானச்சுடர் பொங்கி எழுந்தது. திருமங்கையாழ்வாராகிவிடுகின்றனர். தம்முடைய மகிழ்ச்சிப் பெருக்கு கவிதைகளாக மலர்கின்றது. முதல் கவி 'வாடினேன் வாடி' என்பது. தொடர்ந்து இப்பதிகத்தை முற்றுவிக் கின்றார்.

பின்னர் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். திருமந்திரம் பிறந்த பத்ரி முதல் வடக்கு திருக்குறுங்குடி தெற்கு வரையில், 86 தலங்களைச் சேவிக்கின்றார். அந்தந்த எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்கின்றார். இவர்தம் அருளிச் செயல்கள் 1 பெரிய திருமொழி 2 திருக்குறுந்தாண்டகம் 3 திருநெடுந் தாண்டகம் 4 திருவெருக்கூற்றிருக்கை 5 சிறிய திருமடல் 6 பெரிய திருமடல் என்பவையாகும்.

திருமங்கையாழ்வார் மிகவும் ஈடுபாடு கொண்ட எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பி. இப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்குறுங் குடியில்தான் ஆழ்வார் தம் துணைவி குமுதவல்லியுடன் எழுந்தருளு கின்றார்.

இங்ஙனம் ஆழ்வார்களின் வரலாறுகள் சுருக்கமாக எழுதப் பெற்றன. வரலாற்று முறை மேற்கொள்ளப்பெறவில்லை. விரி வான முழு விவரங்களை வேண்டுவோர் 1 சடகோபன் செந்தமிழ், 2. பரகாலன் பைந்தமிழ், 3. விடகு சித்தன் விரித்த பைந்தமிழ், 4. ஆழ்வார்களின் ஆவி அமுது என்ற இந்த ஆசிரியரின் நான்கு நூல்களில் கண்டு தெளியலாம்.


**தமிழரசு** (அரசு ஏடு)

**உங்கள் வீடு தேடி வர வேண்டுமா? உடனே சந்தாதாரராகச் சேருங்கள்!**

ஆண்டுச் சந்தா: (தமிழ்) ... ரூ. 72
ஆங்கிலப் பதிப்பு ... ரூ. 36

**தமிழரசில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!**

உள்ளே முழுப் பக்கம் ... ரூ.2000
உள்ளே அரைப் பக்கம் ... ரூ.1000

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

# கல்வி



**கவிஞர் முருகுவண்ணன்**



அறிவினைக் கூட்டித் தரும்! கல்வி
அன்பைப் பெருக்கித் தரும்!
அறத்தை வகுத்துச் சொல்லும்! தன்
நலம் கழித்து அருளைத் தரும்!
ஆற்றல் மிகுத்ததுவாம்! நல்ல
அறிவியல் பல்கலையாம்
ஆற்றலில் கல்வியைப் போல் – உலகில்
ஆற்றல்வே றில்லையென்பார்!
இரக்க மனம் வளர்க்கும் கல்வி
ஈகையைச் செய்ய வைக்கும்!
உரம் மிக்க உள்ளம் தரும்! கல்வி
உழைத்திட ஊக்கம் தரும்
'எண்', 'எழுத்' தென்பதுவாம்! கல்வி
இரு கண்ணைப் போன்றதுவாம்!
எண்ணமும் சொல் செயலும் ஒன்றாய்
இருப்பதும் கல்வியாம்
ஏற்றம் தருவதுவாம்! என்றும்
நம்துணை யாவதுவாம்!
ஏற்கும் நமை உலகம் கல்வி,
கற்றோராய் நாம் இருந்தால்!
ஐயம் அகற்றிடுவோம் கல்வி
அனைவர்க்கும் வாய்ப்பதுவாம்!
செய்யுள் நிறைந்ததுவாம்! கல்வி
செல்வக்களஞ்சியமாம்!
ஒருமையின் கற்பதுவாம்! கல்வி
ஓதி யுணர்வதுவாம்!
அருட்செல்வம் கல்வியேதான்! ஔவியம்
அற்றதும் அதொன்றுதான்.











சிறு சேமிப்பு-உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# இந்திரா விகாஸ் பத்திரம்

## சிறப்பு அம்சங்கள்

- ★ 5½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது
- ★ 18.18% சாதாரண வட்டி.
- ★ பத்திரங்கள் ரூ.200/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/- மதிப்புக்களில் பாதி விலைக்குக் கிடைக்கின்றன.
- ★ விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.
- ★ தனி நபரும், நிறுவனங்களும் முதலீடு செய்யலாம்.
- ★ ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவது எளிது.
- ★ முதலீட்டுக்கு உச்ச வரம்பு இல்லை.
- ★ பத்திரங்களின் எழுத்துக்கள் அழிந்துவிட்டாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ நகல் பத்திரம் வழங்கப்படும்.
- ★ பரிசாகவும் அளிக்கலாம்.

*சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்*

மேலும் விபரங்களுக்கு:

*ஆணையர்,*
*சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3, தொலைபேசி: 584440.*
*மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,*
*92, அண்ணா சாலை, சென்னை-2., தொலைபேசி: 849962*
*மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,*
*அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.*

## இயக்குநர், சிறு சேமிப்புத் துறை

*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை சென்னை - 600 006. தொலைபேசி: 8251784/8251685.*

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/[illegible]/DIS/94

# உலகை அச்சுறுத்தும் எய்ட்ஸ்

**டாக்டர் அ. மதனகோபால்**
தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையம், சென்னை.

### இவரைப் பற்றி...



திருச்சி மாவட்டம் மணப்பாறையில் பிறந்த இவர், குக்கிராமங்களில் தாமே விரும்பி, மருத்துவ அலுவலராகப் பணிபுரிந்தவர். 1977 முதல் 1983 வரை தஞ்சை மாவட்ட மருத்துவர்கள் சங்கச் செயலாளராகச் செயல்பட்டவர்.

'கிராமத்தில் டாக்டர்கள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி அனைவராலும் பாராட்டப்பட்டவர். உலக அபாயங்களைப் பற்றி அறிந்து, தம் பங்கிற்கு ஏதாவது செய்ய 'வேண்டும் என்கிற கருத்தில் 'சுற்றுச்சூழல் அபாய நிலை' என்ற நூலை எழுதியவர்.

தற்போது உலகை உலுக்கி வரும் நோய்களில், 'எய்ட்ஸ்' தலைமையிடம் வகிக்கின்றது. அந்த நோய் குறித்தும் அதைத் தடுப்பது பற்றியும் எழுதிய ஆய்வுக் கட்டுரையே இது. 'எய்ட்ஸ் தி டெர்மினேட்டர்' என்ற ஆங்கிலக் கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார் இவர்.

## எய்ட்ஸ் என்றால் என்ன ?

எய்ட்ஸ் நோய் உலகெங்கும் வேகமாய் பரவி வருகிறது. இந்நோய் இல்லாத நாடே இல்லை எனலாம். நாட்டுக்கு நாடு பலவிதக் காரணங்களால் இந்நோய் தொற்றுகிறது. உடலின் எதிர்ப்புச் சக்தி தரும் ஒருவகை வெள்ளை அணுக்களை ஏமாற்றி – எச்ஐவி வைரஸ் அதே போல் இரசாயன அமைப்பைப் பெற்று – இரத்தத்தில் சென்று, பிறகு அந்த எதிர்ப்புச் சக்தி தரும் செல்களை விரைவில் அழித்து வெற்றிக் கொடி நாட்டும். இதனால் நோய் பீடிக்கப்பட்டவர், தனது நோய்த் தடுப்பு சக்தியை முழுவதும் இழந்து விடுவர். திறந்த வீட்டில் திருடன் நுழைவது போல் பல்வேறு நோய்கள் எளிதில் தாக்கிட இறந்துபடும் சோகம் சூழும்.

ஆரம்ப நாட்களில் அமெரிக்காவின் புகழ்மிக்க நடிகரும் தலை சிறந்த நடிகை எலிஸபெத் டெய்லரின் கணவருமான "மார்லன் பிராண்டோ" அவர்கள் இந்நோயால் இறந்ததால் பெரும்பீதி ஏற்பட்டது. இறந்தவரின் உடலைக் கூடத் தொடமாட்டார்கள். அவர்கள் உடை மற்றும் உபயோகப்படுத்திய பொருட்களையெல்லாம் எரித்தும் புதைத்தும் வந்தனர். எரித்தால்கூட கிருமிகள் சாகவில்லை என்றும் கொசு, மூட்டைப்பூச்சி கடித்தாலும் மற்றவர்களுக்குப் பரப்பும் என்ற தவறான கருத்து நிலவியது. மருத்துவமனைகளில் சேர்ப்பதற்கும் சிகிச்சையளிக்கவும் அஞ்சினார்கள். ஏன்! மறுத்தே வந்தனர். வீட்டிலும் வெளியிலும் கருணையின்றி ஒதுக்கப்பட்டனர். இப்படி எச்.ஐ.வி.1, எச்.ஐ.வி.2 என அமெரிக்க, பிரஞ்சு விஞ்ஞானிகள் இந்த எய்ட்ஸ் நோய் வைரஸ் கிருமிகளைக் கண்டுபிடித்தனர்.

ஆப்பிரிக்காவின் ஒருவகை பச்சைக் குரங்கிலிருந்து மனிதர்களுக்குப் பரவியது என்றும் அமெரிக்காவின் 'ஹிப்டுகள்' ஓரினச் சேர்க்கை, முறையற்ற செக்ஸ் பழக்கமுடையவர்கள் வாயிலாக மற்றவர்களுக்குப் பரவியது எனவும் கருதப்பட்டது. 1981இல் தான் நோய் தெரியும்படி உணரப்பட்டது. இந்தியாவில் 1985இல் 65 நோயாளிகளே இருந்தனர். 1991 இல் 102 ஆகி 1992 செப்டம்பரில் 258 ஆக ஆனது. தற்போது 520 நோயாளிகள் உள்ளனர்.

இந்த வைரஸ் மனிதனை மூன்று வகையில் பாதிக்கிறது :

1. இரத்தத்தில் கலந்திருக்கும், ஆனால், நோயின் அறிகுறிகள் இருக்காது. நோயிடைக் காயமான 6 மாதத்திலிருந்து ஐந்தாண்டுக்குள் நோயைத்தரும்.

2. இரத்ததில் கலந்த உடன் நோய் ஏற்படுத்தி விரைவில் ஆளைக் கொன்றுவிடும்.

3. செயல்தான் மிகவும் ஆபத்தானது. அதாவது இரத்தத்தில் கலந்திருக்கும் ஆனால், பாதிக்கப்பட்டவருக்கு நோய் வராது. பிறகு மற்றவர்களுக்குப் பரப்பும் தன்மையான நோய் பரப்பும் களமாக 'Carrier' இருந்து மறைமுகமாக



எண்ணற்றவர்களுக்கு நோயைப் பரப்பி பெரும் மனித இழப்பை ஏற்படுத்துகிறது.

தற்போது பலவகை ஆராய்ச்சிகள் வெற்றிதரும் சிகிச்சை என அறிவிப்புகள் இன்னும் நம்பிக்கையளிக்காத நிலையில்தான் உள்ளது. தடுப்பூசி கண்டுபிடிப்பது அரிதாக உள்ளது. மருந்துகள் சக்தி வாய்ந்திருந்தால் வேறுவகையில் தன் அமைப்பை மாற்றி எச்.டி.வி.3 என்றபடி வீரிய வகையாக உற்பத்தியாகிறது. எனவே, தடுப்பதைத் தவிர வேறு வழியில்லை எனும் நிலை உலகம் முழுவதும் நிலவுகிறது. இந்நோய் மனித இனத்தை உடனே பெரும் அளவில் கொன்றுவிடும் எனும் உண்மையைப் புரிந்து தன் பணியென அனைவரும் செயல்பட்டால் எந்தச் சிரமமுமின்றி இந்நோயைச் சுலபமாக உலகை விட்டே விரட்டலாம்.

இந்திய அளவில் கடைபிடிக்க வேண்டிய தடுப்பு முறைகள் :

அதிக ஆபத்துமிக்கவர்களான High-Risk விலைமாதர்களை எதிர்கால நலம் வேண்டி வேறு வழியில் வாழ்க்கையமைக்க அனைத்தும் செய்து அரசு உதவவேண்டும். இரத்தப் பரிசோதனை செய்து, நோய் தென்பட்டால் அவர்களை இறுதிவரை கவனித்து தனியாக வைத்து உதவவேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை எல்லாம் அழைத்து நிலைமைகளை எதிர்கால நன்மையின் அவசியத்தை அறிவித்து அவர்களுக்கும் நிவாரண உதவிகள் செய்து சீர்படுத்த வேண்டும். பணத்தாசை பிடித்து தவறு செய்யும் யாராக இருந்தாலும் தண்டிக்க வேண்டும். இடைப்பட்ட காலத்தில் தொடர்பு கொள்ள வரும் ஆண்களைக் கட்டாயமாக 'நிரோத்' உறை அணியும்படி கல்வியறிவு புகட்டி அணிந்திட முன்வரும்படிச் செய்திடல்வேண்டும். இப்பணிக்கு மிகமிக முன்னுரிமையளித்து இலஞ்சம் பெறும் எவரும் விட்டுவைக்கப்படக் கூடாது. மனிதர்களைக் கொல்லும் நோயைத் தடுப்பது நாகரிகமான செயல் என்று மனதிலேயே அனைவரும் எண்ண வேண்டும். இதில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் கொலைபாதகச் செயல் செய்பவர் என வெட்கித் தலை குனியும்படி தண்டனையளிக்க வேண்டும். இந்தப் பிரிவினர்களை நன்றாகக் கல்வியறிவு புகட்டி ஒத்துழைக்கும்படி செய்துவிட்டால் அதிக அளவு நோய் வராமல் தடுத்து விடலாம். மற்ற காரணங்களால் நோய் வருவது குறைவான விழுக்காடே. சில சமூகப் பிரிவினரிடம் கட்டுப்பாடற்ற உறவு நிலவுவதால் அவர்களுக்கும் கல்வியறிவு புகட்டி 'நிரோத்' உறை அணிவதை ஏற்கும்படி செய்யவேண்டும். அனைவரும் ஒத்த கருத்தோடு முயற்சித்தால் இதற்காக ஆகும் செலவு குறையும். இன்னுயிர் இழப்புகளும் குறையும்.

வறுமையும் ஒழுக்கமற்ற பழக்கமுமே இந்நிலைக்குக் காரணம். இந்தத் தொழில் நடக்கும் பகுதிகளில் தன்னார்வச் சேவையாளர்கள் சிறப்பாகத் தங்கள் தடுப்புக் கல்விப் பணியைச் செய்வது சாலச் சிறந்தது. இந்தப்பணியைப் போர்க்கால அடிப்படையில் அனைத்துச் சார்பினரும் செய்திட முன்வர வேண்டும். காவல்துறையினரும் உண்மையாக நாட்டின் பேராபத்தைக் கருதி மற்ற பணிகளில் காட்டும் தொய்வைக் காட்டாமல் நேர்மையை ஒரு அத்தியாவசியக் கடமையாக இந்தப் பணிக்கு உதவினால் கண்டிப்பாக மற்ற நாடுகளுக்கு இந்தியா ஒரு முன் மாதிரியாக விளங்கும்.

இரண்டாவது நிலை தடுப்பு வகை, உடலில் குத்தப்படும் ஊசிமூலம் பரவுவதைத் தடுக்கும் பணியேயாகும். சாதாரணமாக காது குத்துதல், மூக்கு குத்துதல், பச்சைக் குத்திக்கொள்ளுதல் போன்ற செய்ல்களைக் கூடத் தகுந்த பாதுகாப்பு முறைகளை அனுசரிக்கக் கற்றுத்தர வேண்டும். ஒருமுறை உபயோகித்த இவற்றை நீக்கிவிடலாம் அல்லது கொதிக்கும் வெப்பநிலையில் கிருமிநாசினி செய்ய வேண்டும். தலையில் மொட்டையடிக்கும் போதும் இரத்தக் கசிவு ஏற்படுவதால் உபயோகித்து எறிந்துவிடும் பிளேடுகளை உபயோகப்படுத்துதல் பலன் தரும். மற்றும் மருத்துவமனைகளில் உபயோகித்து கழித்துவிடும் ஊசிகளையே 'Disposable Syringe and Needles' உபயோகிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். பல் மருத்துவர்களும் இந்த முறையை

அனுசரிப்பது அவசியம். புள்ளிவிவரப்படி இந்த வகையினர் மூலம் நோய் பவவுவது எளிதாக ஏற்படுகின்றது. இன்றைய மருத்துவ முன்னேற்றத்தில் உறுப்புகள் மாற்று அறுவைச் சிகிச்சை, செயற்கை இனவிருத்திக்கு விந்து அளிப்பவர்கள், முதலானோர்களாலும் எய்ட்ஸ் பரவும் வாய்ப்புள்ளது. இந்த வகையினர் இரத்தம், உறுப்புகள், விந்துகளையும் சோதனை செய்த பிறகே உபயோகப்படுத்த வேண்டும். எனவே, மருத்துவத்துறையினரின் தலையாய பணியாக இதைக் கடைப்பிடித்தால் இந்நோய் வருவதை எளிதில் தடுத்து விடலாம்.

மூன்றாவது முக்கியமானதும், கட்டாயமாகச் சரிப்படுத்த வேண்டிய ஒரு குறைபாடு உள்ள செயல் இரத்த வங்கிகளின் செயல்பாடே. தற்போது இந்தியாவில் செக்ஸ் முறைகேடுகளால் வரும் எய்ட்ஸ்க்கு அடுத்த காரணம் இரத்தம் செலுத்தும் நடவடிக்கையால் தான் எனத் தெரியவருகிறது. அதற்குக் காரணம் இரத்த வங்கிகள் எய்ட்ஸ் சோதனைக்கு உண்மையான முக்கியத்துவம் கொடுக்காததும், தேவையான சோதனை உபகரணங்கள் இன்மையும் ஆகும். அரசாங்கமும் தவறு நடப்பதை கடுமையான குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுக்காதிருப்பது. பணம் சம்பாதிக்கும் இந்த இரத்த வங்கி உரிமையாளர்கள் மனிதக் கொடுமையை நீக்கும் பணியில் நேர்மையாக இருக்கவேண்டும் என்ற மனநிலை இல்லாது இருப்பதும் ஒருவகைக் குற்றமே! இந்தக் குறைபாட்டைக் கண்டிப்பாக நீக்க வேண்டும். இரத்தம் கொடுப்பதற்கு உறவினர்களே முன்வந்தால் இந்த வகையில் நோய் பரவுவது குறையும்.

இங்கிலாந்து நாட்டில் ஹீமோப்பிலியா எனும் ஒருவகை பிறவி இரத்தக் கசிவு குறைபாடு நோய்க்கு பேக்டர் VIII எனும் இரத்த அணுப்பொருளை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து செலுத்தியதால் அநேகம் பேர் எய்ட்ஸ் நோய் ஏற்க வேண்டிய நிலை வந்தது என்று 'மடில் செக்ஸ்' மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ரிச்சாடு டெட்டர் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளிலிருந்து இரத்தமோ




இரத்தப் பொருளோ பெறக்கூடாது என்று சட்டம் செய்யவேண்டும். வெளிநாட்டிலிருந்து நம்நாட்டிற்கு வருபவர்களை 'எய்ட்ஸ்' நோயற்றவர் என்ற சான்றிதழ் பெற்றுவர விசா சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்.

நான்காவதும் இறுதியான காரணமுமான தடுப்புப் பணி, போதை மருந்துக்கு அடிமையானவர்கள் நரம்பில் போட்டுக் கொள்ளும் ஊசியால் நோய் பரவுகிறது என்பதைப் பொறுத்தது. போதை மருந்து கடத்துபவர்களையும், விற்பவர்களையும் முழு முயற்சி எடுத்து தடுத்துவிட்டால் மற்றவை சரியாகிவிடும்.

இந்தப் பணியில் எவர் தலையிட்டாலும் அதிகத் தண்டனைபெறும்படி கடுமையான சட்டமியற்ற வேண்டும். போதை மருந்து உபயோகிப்பவர்களை போதை நீக்க சிகிச்சை நிலையங்கள் அதிக அளவில் அமைத்து 'எய்ட்ஸ்' நீக்கப் பணிக்கான நிதியை வைத்து இலவசமாகச் சிகிச்சையளிக்க வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் போதை மருந்தின் ஆபத்தை இளைஞர்களுக்கு அறிவித்துக்கொண்டே இருக்க வேண்டும். மேலை நாடுகளின் செக்ஸ் முறைகேடுகளை 'புளூபிலிம்' மூலம் நம் நாட்டில் உள்ளவர்கள் பார்ப்பதால் அதே போன்ற முறைகேடுகளை அனுசரித்து நோய்க்குள்ளாக நேரிடுகிறார்கள். இதையும் கல்வியறிவு புகட்டித் தடுக்கவேண்டும்.

இந்திய அளவில் இந்தக் காரணங்களால்தான் இந் நோய் பரவிடும் வாய்ப்புள்ளது.

## எய்ட்ஸ் பெருகி வரும் நிலை

இரண்டாயிரமாவது ஆண்டில் இந்தியாவில் உலகில் உள்ள 'எய்ட்ஸ்' நோயாளிகளில் 25 சதவிகித நோயாளிகள் இருப்பார்கள் எனக் கணித்துள்ளனர். அதாவது 15 மில்லியன் எச்.ஐ.வி. கிருமிகள் இரத்தத்தில் காணப்படுபவர்கள் இருப்பார்கள் என்கிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம், அதிக மக்கட்பெருக்கம், சுகாதாரமற்ற சூழ்நிலைகளும், நடவடிக்கையும், வெப்ப நோய்களான காசநோய், டைபாய்டு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் உண்டாவதாலும் என்கிறார்கள்.

உலகமுழுவதும் இரண்டாயிரமாவது ஆண்டில் 110 மில்லியன் நபர்கள் இரத்தத்தில் இந்நோய்க் கிருமிகளின்ஊடுருவலுக்கு ஆளாகி இருப்பார்கள் என்றும்,

மேலும் 10 மில்லியன் குழந்தைகளின் இரத்தத்திலும் கிருமிகள் இருக்கும் என்று உலகின் தொற்றுநோயியல் அறிவியலாளர்கள் 30 பேர்கள் அறிவித்துள்ளார்கள்.

இவர்களில் எத்தனைப்பேர் நோய் பெறுவார்கள், பரப்பும் களமாக இருப்பார்கள் என்று கூறவில்லை. அதாவது நோய் பரவும் தன்மை பன்மடங்காகும் என்பது தெரிய வருகிறது. அதற்குள் ஏதாவது நோய் தீர்க்கும் முறை கண்டுபிடித்தால் தப்பலாம்.

இந்த வைரஸ்கள் வெளியில் 10 நிமிடத்திற்கு மேல் உயிர் வாழாது. பிளீச்சிங் பவுடர் தெளித்துவைத்தால் கூட இக்கிருமிகள் இறந்துவிடும். கை,கால்களை சோப்புபோட்டு கழுவினாலும் சிறிது தடுப்பு உண்டாகும்.

இறுதியாக இந்நோய் தடுக்கும் பணியினை ஒவ்வொரு இந்தியனும் நாகரிகச் சமூகத்தை அமைக்கும்பணி நாம் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் நம் சந்ததியினர் இந்நோய்க்கு ஆளாகாதிருக்கவும் அதனால், இறப்புகள் ஏற்படாது தடுக்கவும் இப்போதிருந்தே செயல்பட வேண்டும். இல்லையேல் உலகளவில் இறப்புகளின் காரணத்திற்கு 'எய்ட்ஸ்' தான் முதலிடம் வகிக்கும். இலட்சோப இலட்ச சாவுகளுக்கு இயற்கையளிக்கும் தண்டனை போல் அமைந்துவிடும். இப்போதே நாம் விழித்துக்கொள்வது நல்லதல்லவா ? தற்போது 250 நபருக்கு ஒருவர் உலகளவில் நோயாளியாக உள்ளனர்.

## செயற்கை இரத்தம் வருகிறது !

தற்போது செயற்கை இரத்தம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சிகாகோ நகரில் உள்ள 'நார்த் பீல்டு லெபாரட்டரிஸ்' நிறுவனமும், சுவீடன் நாட்டு நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து இந்த செயற்கை இரத்த உற்பத்தியைச் செய்திட ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தச் செயற்கை இரத்தமானது அனைத்துப் பிரிவு இரத்தவகையினருக்கும் எவ்வித ஆபத்துமின்றி செலுத்த இயலும் எனக் கூறுகின்றனர்.

இந்தக் கண்டுபிடிப்பால் மருத்துவத் துறைக்கு மாபெரும் பெருமை கிட்டப்போகிறது. காரணம், இரத்தம் செலுத்தினால்தான் பிழைக்கமுடியும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு அதேவகையில் ஏற்கக்கூடிய இரத்தம் கிடைப்பது சில நேரங்களில் இல்லாமல் போய் உயிருக்கே ஆபத்தான நிலை ஏற்படுகிறது. சரியாக ஏற்புடையதா என்ற சோதனை செய்யாமல் போவதாலும், ஆபத்து விளைகிறது. மற்றும் தற்போதைய உலக அபாய நோயான எய்ட்ஸ் பரப்புவதற்கும் இரத்தம் செலுத்துவது ஒரு காரணமாக உள்ளது. இவையெல்லாம் இதனால் நீங்கிட வாய்ப்புள்ளது. இந்த இரத்தம் உற்பத்தி செய்யப்பட்டு உலக நாடுகள் அனைத்தும் பயன்படுத்திக்கொள்ளும் காலத்திற்குள் இந்நோய் அதிகம்பேரைப் பாதித்துவிடும் என்ற அச்சம் உள்ளது.

## நோய்த் தடுப்பு வேக்ஸின் ஆராய்ச்சிகள்

எய்ட்ஸ் வைரஸ் பல்வேறு நாடுகளிலும் சிறுசிறு மாற்றங்களுடன் இருப்பதால் அவற்றை அந்நாட்டு பெயருடன் வகைப்படுத்துகின்றனர். இந்திய வகை சி Indian Strain C, American Strain V பிரேசில் வகை என பலவகை வைரஸ்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

நோய்த் தடுப்பு மருந்து ஆராய்ச்சிகளும் மிகமிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது. பிரான்ஸ் நாட்டின் டாக்டர் ஜீன்கிளாடு செர்மான் (Dr. Jean Claud Cherman) என்பவர் ஓர் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர். அவர் கூறுவதெல்லாம் எய்ட்ஸ் வைரஸ் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பது மிகவும் சிரமமாக உள்ளது. ஒருவகை வைரஸை வைத்து தடுப்பு மருந்து உற்பத்தி செய்வது வீண் வேலை. ஏழுவகைகளுக்கு மேல் உள்ள அளவில் வைரஸ்களை தேர்ந்தெடுத்து அவற்றை வளர் பெருக்கம் செய்து தயாரிக்க முயற்சித்து வருகிறோம் என்கிறார்.

இந்தக் கிருமிகளை 1988-இல் பிரித்துக் காட்டிய டாக்டர் ஜீன் கிளாடு செர்மான் (Dr. Jean Glaud Cherman) டாக்டர பர்ரே சின்னௌஸி (Dr. Barre Slnioussi) மற்றும் டாக்டர லுக் மண்டேக்னிர் (Dr. Luc Montagnier) ஆகியோர்கள் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு உவமானம் வைத்துக் கூறும்போது பத்தாண்டுகளுக்கு முன்பு இந்த எச்.ஐ.வி. வைரஸ் வியாதி ஒரு சைக்கிள் போல் இருந்ததாகவும் இன்று அதுவே ஒரு கார் போலப் பெரிதாக உள்ளது என்கிறார்கள். ஏழுவகைப் பிரிவுகளாகத் தனித்தன்மை கொண்டுள்ளதாம். மனித சக்தியை எதிர்ப்பதில் அந்த கிருமிகள் மாபெரும் சக்தியாக விளங்குகிறது. அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் தொழில் நுட்பக் கூடத்தின் தலைவர் பேட்ரிக் லியோனார்டு (Patric Leonard) கூறுகின்ற அறிவுரை மிகமிக ஏற்புடையதாக உள்ளது. அவ்வாறு செயல்படுவது மிக்க அவசியமும் அவசரமுமானது. தடுப்பு மருந்துகள் வரை காத்திருக்காது விரைவில் குறைந்த செலவில் இரத்த சோதனை முறைகளைக் கண்டுபிடிக்க ஆவன செய்வதும் நல்ல கல்வி, கலந்துரையாடல் மூலம் நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார்.

தற்போது மேலை நாடுகளில் எய்ட்ஸ் வைரஸ் வெள்ளை அணுக்களின் குரோமோசோம்களைத் தாக்கு முன்பு உள்ள நிலையில் அதன் பெருக்கத்தைத் தடுத்து நிறுத்தும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை 1. (AZT) ஏ.இஸட்.டி. எனும் அஸிடோ தைமிடின், 2. டைடீ ஆக்ஸிஇனோஸின் (Dideoxyinosine) 3.

**எய்ட்ஸ்**

*உலகில் கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் எய்ட்ஸ் தாக்குதலுக்கு ஆளாகி உள்ளனர். இவர்களில் 10 இலட்சம் பேர் சிறாரும், 30 இலட்சம் மகளிரும் அடங்குவர். அடுத்த நூற்றாண்டு ஆரம்பத்தில் 12 கோடி மக்கள் உலகெங்கும் எய்ட்ஸ் தாக்குதலுக்கு ஆளாகக் கூடும் என்பது அதிர்ச்சியூட்டும் தகவலாகும்.*

பைரிடினோன் (Phyridinone) ஏ.இஸ்ட்.டி. என்னும் மருந்து ஒரு நபருக்கு ஓர் ஆண்டுக்கு பதினைந்தாயிரம் முதல் பதினெட்டாயிரம் டாலர்கள் செலவு பிடிப்பதாகும்.

இதற்காகப்பெரியம்மை வைரஸ், போலியோ வைரஸ் போன்ற வகைகளையும் ஈடுபடுத்தி முயற்சித்து வருகின்றார்களாம். நோய்த்தடுப்பு வேக்ஸின் என்றும் (Prophylactic) Vaccine இருவகை வேக்ஸின்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. உலகச் சுகாதார நிறுவனமும் தாய்லாந்து ஜி.பி.120, உகாண்டா ஜி.பி.41 (Thailand gp 120, Uganda gp 41) என்ற நோய்க் குறைப்பு வேக்ஸின்களைச் சோதனை செய்து வருகிறது என்று எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவின் இயக்குநர் டாக்டர் கே.பி. சர்மா (Dr. K.B. Sharma) கூறுகிறார்.

## நோய் குறைக்கும் மருந்துகள்

இவை மட்டுமல்லாமல், நோய் மேலும் பரவாது தடுக்கும் மருந்துகளும் வளர்ந்த நாடுகளில் விற்கப் பட்டுவருகின்றன. நம் இந்திய மருத்துவத்திலும் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்துகள் உள்ளன என்று கூறிவருகிறார்கள். அதற்கான ஆராய்ச்சிகளும், விலங்குகள் மற்றும் மனிதர்களின் உடலில் பரிட்சார்த்த மாக சோதனை செய்கிறார்கள். சென்னை மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சி அறிஞர் டாக்டர் எஸ்.பி. தியாகராஜன் என்பவரும் சென்னை மருத்துவக் கல்லூரி நுண்ணுயிரியல் (Microbiology) துறைப் பேராசிரியரும் துறைத் தலைவருமான டாக்டர் திருமதி சுனிதா சாலமன் என்பவரும் இப்பணிகளை ஆற்றி வருகிறார்கள். இதற்கென லண்டனில் செயிண்ட் தாமஸ் மருத்துவமனையில் தங்கி 12 நோயாளிகளுக்கு நம் நாட்டு மூலிகை மருந்துகளின் உபயோகம் பற்றி சோதனை செய்யும் பணியை டாக்டர் சுனிதா அவர்கள் ஏற்றுள்ளார்கள். தற்போது இந்தியாவில் 13 வகை மூலிகைச் செடிகள் எய்ட்ஸ் வைரஸ் கிருமிகளைத் தடுக்கும் குணம் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதுதவிர சீனாவில் மூலிகை யிலிருந்து ஜி.எல்.க்யூ 223 (GLQ 223) என்ற மருந்து உபயோகப்படுத்து வதாகக் கூறுகின்றனர். இந்தியாவின் ஆயுர்வேத திரிகுணதேவ் (Ayurved Thriguna Dev) என்பவர் தங்கம் மற்றும் வைரப்பொடிகளை வைத்து 1. ஹீரக் ரசாயனா (Hirak Rasayana) 2. சர்வேஷ்வர் பார்பட்டி (Sarveshvar Parpati) என்ற மருந்துகளால் குணப்படுத்த இயலும் என்கிறார். மரபியல் நுட்பமுறைப்படி செயற்கை சி.டி.4 என்ற மருந்து விலங்குகளுக்குச் சோதனை செய்ததில் வெற்றிகரமாக உள்ளது எனக் கண்டுள்ளனர். திருமதி சித்ரா சோமன் என்ற கேரளப் பெண் கணவனால் எய்ட்ஸ் பீடிக்கப்பட்டு திருவனந்தபுரத்தில் நான்கு பாட்டில் ஆயுர்வேதக் கலவை மருந்தை நாற்பத்தைந்து நாட்கள் சாப்பிட்டு இரத்தத்திலேயே இல்லாமல் போய் விட்டது என்கிறார்.

> ஆண்டுதோறும் டிசம்பர் 1ம் தேதி உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்தியாவில் 15 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்களில் 70 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

## பம்பாய் ஒரு பாவ நகரம்!

இந்தியாவில் இந்நோய் பரவிட சிகரமான இடமாக உள்ளது பம்பாய் மாநகரமே! இதனால் இதை ஒரு 'பாவ நகரம்' என்றே பெயரிட்டுள்ளனர். ஏன் தெரியுமா? உலகின் எய்ட்ஸ் நோயாளிகளாக 15 நிமிடத்திற்கு 400 பேர்கள் வருகிறார்கள். இதில் ஒருவர் பம்பாயிலிருந்து வருகிறார். மேலும் பம்பாய் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை வெளிநோயாளி பிரிவில் 996 பேர்களில் 6 பேர் எய்ட்ஸ் நோயாளிகளென்றும் மருத்துவ வெளிநோயாளிப் பிரிவில் 2406 பேர்களில் 28 பேர் எய்ட்ஸ் நோயாளிகளென்றும் பம்பாய் நகரில் உள்ள எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி நிலைய திட்ட இயக்குநர் டாக்டர் கோர்ஹெட் பாவ்ரி எச்சரிக்கை செய்து கூறுகிறார். சிகப்பு விளக்குப் பகுதியில் மட்டும் மணிக்கு 3,4 நபர்கள் இந்நோய்க்கு ஆளா கிறார்கள் என்று வருந்திக் கூறுகிறார்.

## ஆற்றவேண்டிய அவசரப்பணி

அரசியல் தலைவர்களுள் அறிஞர் களும், சமூகத்தொண்டு நிறுவனர் களும் தொழில் அதிபர்களும் மருத்துவத்துறை நிபுணர்களும் வேறு பணிகளைச் சிறிது குறைத்துக் கொண்டு நாட்டின் பல்வேறு சிவப்பு விளக்குப் பகுதிகளில் வசிப்ப வர்களுக்கு இந்தத் தொழிலை விட்டு வேறு தொழில் செய்வதற்கு முதலில் வழிவகைகளைச் செய்து தந்துவிட்டு அவர்களுக்குப் பிறகு நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வு பற்றி கலந்துரையாடல் செய்து தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்க வேண்டும். அவர்களோடு போராட வேண்டும். அவர்கள் மனம் மாறும்படி நல்லவை செய்து அன்புடன் ஆதரித்து பொருளாதார உதவி முன்னுரிமை அளித்து அரசுப்பணியில் வேலை கொடுத்து பல்வேறு நாடுகளின் உதவி பெற்று அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் உதவி செய்யவேண்டும். நடத்துபவர்கள், நடுத்தரகர்கள், ஈடுபட்டிருக்கும் பெண்கள், ஆண்கள் அனைவரும் நன்கு பராமரிக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் அனைத்து நகரங் களிலும் உள்ள விலைமாதர்கள் உறைவிடங்களில் முதலில் இப் பணியை இந்த நாட்டு மக்களை அநியாயமாக நல்ல நாட்டு வருமானத்திற்கு உதவிடும் வயதில் உள்ள இளைஞர் சமுதாயத்தை வீணே இழந்துவிடாமல் இருக்க உதவும் பணியென்று அறிவுப்பூர்வமாகச் சிந்தித்து ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் நல்லோர்கள் செயல்பட வேண்டும். கட்சிப் பூசல்கள், மதச் சண்டைகள், பதவிப் போட்டிகள் பல்வேறு வளர்ச்சித் திட்டங் களையெல்லாம் நீக்கி வைத்துவிட்டு, முழு நேரமும் மும்முரமாக ஈடு பட்டால்தான் இந்தியா பிழைக்கும், நாம் மற்றவர்களுக்கு முன்னுதாரண மாகத் திகழ வேண்டுமானால், இந்தப் பணியை தகுதியானால், விரும்பு பவர்கள், வேறு மாநிலத்தவர்கள் அனைவரையும் வரவழைத்து காலை முதல் இரவு வரை வீடுவீடாக தெருத்தெருவாக ஊர் முழுவதும் அவர்களின் செயல்பாடு இருந்தால் தான் உடலுறவுத் தொழிலில் உள்ளவர்கள் அதன் ஆபத்தை

உணருவார்கள். இல்லாவிடில் இறக்கும் வரை 'பணம்' சம்பாதிக்க விரும்புவார்களே தவிர, மற்றவர்களின் அறிவுரைகளை முற்றும் ஏற்க மாட்டார்கள்.

## உலகின் பேராபத்துக்கள்

உலக அபாயங்களில் முதலாவ தான அணுப்போரை ஓரளவு கட்டுப்படுத்தி விட்டான் மனிதன். இரண்டாவதான சுற்றுச்சூழல் அபாயத்தை அறியத் தொடங்கி அதையும் ஓரளவு மாற்றி வருகிறான். மனிதனின் குணமான இயற்கையை ஆட்சி செய்யும் நிலை தற்கொலைக்குச் சமம் என அறிந்துள்ளான். இவை இரண்டும் பலம் வாய்ந்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அணுப்போர் கருவிகளை வடிவமைத்திருக்கலாம். தான் செய்வதால் ஒன்றும் கேடுவிளையாது என்று எண்ணி சுற்றுச் சூழலைக் கெடுத்தவன் தற்போது திருந்தி வருகிறான். எய்ட்ஸ் பற்றி அவ்வாறு கருதமுடியவில்லை. மனிதனின் திமிர்பிடித்த இயற்கைக்கு ஒவ்வாத ஒழுக்கமற்ற உடலுறவுப் பழக்கத்தால் தேவையற்ற போதை மருந்து பழக்கத்தால் இப்படியொரு உலக மனித குலத்துக்கே ஆபத்தைத் தரக்கூடிய வைரஸ் கிருமிகளை அவன் எவ்வளவு முயன்றும் அடக்க முடியாத, இதுவரை மருத்துவ உலகம் கண்டிராத சாதனைக் கிருமியின் பழிவாங்கும் செயலைப்பற்றிய கதை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான நிலையத்தின் ( AIIMS ) பேராசிரியர் ஏ.என்.மால்வியாவின் கற்பனைக் கதை.

மனிதனின் முரட்டுத்தனத்தைத் தாளாது அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணி எச்.ஐ.வி. வைரஸ் இறைவனிடம் சென்றதாம். இறைவா நீங்கள் உருவாக்கிய இந்த அழகிய உலகைப் பல வகைகளில் மனிதன் அழித்து வருகிறான் என்றது. தனது அபிமானமான படைப்பேயாயினும் இந்த வைரஸ் கூற்றுக்குச் செவி சாய்த்து– ஆம், அவர்கள் என்னை மதிக்கவில்லையென்றாலும் உனக்கெப்படி நான் உதவ முடியும்? என்றார் இறைவன். அதற்கு எய்ட்ஸ் வைரஸ் நான் ஒரு சிறந்த திட்டம் வகுத்துள்ளேன். அதன்படி உலகில் உள்ள மனிதர்கள் அனைவரின் உடலிலும் புகுந்து நன்கு பெருகி அவர்களின் எதிர்ப்பு தரும் செல்களையெல்லாம் அழித்து விடுவது என்றாலும் அதில் ஒரு முட்டுக்கட்டை உள்ளது அதுதான் மனிதனின் அபரிமிதமான அறிவு. அதைவைத்து அவன் என்னைத் தடுத்து கொன்றுவிடுவான் என்றது வைரஸ். கடவுளோ சிரித்துக் கொண்டே முட்டாள் வைரஸே இதற்காகவா அஞ்சுகிறாய், மனிதனிடம் உள்ள மூன்று குறைபாடுகள் உனக்குத் தெரியாதா? இரத்தம், செக்ஸ், இறப்பு முதலியவற்றால் நீ எளிதில் வெல்வாய் என்றதும் எச்.ஐ.வி. வைரஸ் காலந்தாழ்த்தாது பணியைத் தொடர்ந்தது. மனிதன் இரத்தத்தை விற்று உடலுறவை விலைக்கு வாங்கி இறப்பை ஏற்றான். போதை ஊசி மருந்துகளாலும் அவனை மகிழ்வித்து எய்ட்ஸ் வைரஸ் தன் வஞ்சத்தைத் தீர்த்தது. மற்ற நாடுகளைக் காட்டிலும் வளரும் நாடுகளில் இந்த எய்ட்ஸ் வைரஸ்க்கு வெள்ளித்தட்டில் வரவேற்பு கிடைத்ததாம் என்று இயற்கை, மனிதன் செய்யும் பாவத்திற்கு மரண தண்டனையளிக்கிறதென்கிறார் டாக்டர் மால்வியா.

> உண்மை
>
> உண்மையே உள்ளத் தூய்மையை
> உண்டாக்கும்; உள்ளத் தூய்மையே
> ஒழுக்கத்தின் உயிர் நாடி.
> -மகாவீரர்

## இரத்தத் தேவை மிகமிக அதிகம்

இரத்தம் செலத்துவதால் நோய் பரவுவதற்குக் காரணம் குறைந்த செலவில் சுலபமாக அறியக்கூடிய சோதனை முறைகள் இந்தியாவில் இல்லை. சிறப்பு முறையில் சோதனை செய்ய வேண்டிய எலிசா Elisa மற்றும் வெஸ்ட்டர்ன் பிளாட் (Western Blot) சோதனைகள் தான் உள்ளது. இவற்றுக்கு ரூ.110 மற்றும் ரூ.700 ஒவ்வொரு சோதனைக்கும் முறையே செலவாகிறது. தற்போது பம்பாயில் ஆர்.டி.டி. (Rapid Test Device) எனும் எய்ட்ஸ் கிருமி கண்டறியும் மலிவு வகைச் சாதனம் கண்டுபிடித்துள்ளார்கள். விரைவில் விநியோகத்திற்கு வரும் வாய்ப்புள்ளது. எனினும், ஐம்பது மில்லியன் யூனிட்டுகள் இரத்தத் தேவைக்கு 1.9 மில்லியன் யூனிட்டுகளே கிடைக்கின்ற நிலையில் எப்படி நேர்மையாகச் செயல்படுவார்களென்று டாட்டா மெமோரியல் இரத்த வங்கியின் தலைமை டாக்டர் Z.S. பருச்சா வினா தொடுக்கின்றார்.

## பேருதவிக்குத் தகுதியானவர்கள்

எனவே, சமுதாயத்தில் நல்ல வருமானம் உள்ள புகழ்மிக்க நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், தர்மமாக எண்ணாது எதிர்கால மனிதக்காப்பு உதவியென்று, பண உதவி செய்தாலன்றி நம்மை நாம் காத்துக் கொள்ளாது போகும் நிலை வரும். நோய் வாய்ப்பட்டவரை அனைவரும் தாராளமாகப் பொருள் உதவி செய்து பிறருக்குப் பரவாது தடுக்கும் கடமையாற்ற வேண்டும். டென்னிஸ் வீரர் திரு ஆர்தர் ஆஷே, நடிகை எலிஸபெத் டெய்லர், கூடைப்பந்து வீரர் மேஜிக் ஜான்ஸன் மற்றும் பல புகழ்மிக்கவர்கள் இதற்கெனப் பெரும் பொருள் சேர்த்து உதவி வருகிறார்கள்.

திரு ஆர்தர்ஆஷே அவர்கள் கூறுவது மனதை நெகிழ வைக்கிறது.
"எய்ட்ஸை அழியுங்கள், ஆனால், எய்ட்ஸால் அவதியுறுபவர்களை அழிக்காதீர்கள்".
வேல்ஸ் நாட்டு இளவரசி டயானா அவர்கள் பல்வேறு பாப் இசைப் பாடகர்களை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கோடான கோடி ரூபாய் வசூல் செய்து இந்த நோய்த் தடுப்பிற்கு உதவுகிறார். சிம்பொனி ஆப் ஹோப் என்ற இசை நிகழ்ச்சியைப் பாடகர் திரு டேவிட் போவி (David Bowie) மற்றும் ஜியார்ஜ் மைக்கேல் (George Michale) கே.டி. லெய்ங் (K.D. Laing) போன்றோர் நடத்தினர்.

எனவே, இதுதான் கடமையாற்றும் தருணம் என்று இந்த ஆண்டை நிர்ணயம் செய்துள்ளனர். எனவே, மற்றைய சுகாதாரப்பணி செய்யும் களப்பணியாளர்கள், மன்றங்கள், பல அமைப்புகளின் தலைவர்கள், மற்றும் அங்கத்தினர்களெல்லாம் 'எய்ட்ஸ் தடுப்புச் சங்கம்' என்று ஒன்றாக இணைந்து எங்கெங்கு வேண்டுமோ, அங்கு முதலில் செயல்படுக! இந்தப் பணிதான் வருங்கால இந்தியாவின் கரங்களை வலுப்படுத்தும் பணி இனிமேலாவது மனிதத்தன்மை மேலோங்கி நல்லொழுக்கம் பேணி முறையற்ற எதையும் செய்யாது வாழக் கற்றுக்கொள்வோம்! முனைந்து செயல்பட்டால் முடியாதது இல்லை!

# சிலம்பாட்டம்


ஞா. ஸ்டீபன், எம்.ஃபில்.,
நாட்டார் வழக்காற்றியல் மையம்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை

தமிழகம் முழுவதிலும் பரவலாகக் காணப்படும் தற்காப்புக் கலைகளுள் (Martial Arts) ஒன்று சிலம்பாட்டம் ஆகும். சிலம்பாட்டம், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், குமரி மாவட்டங்களில் பெரு வழக்காக உள்ளது. கையிலுள்ள கம்பை வீசி, ஒலியெழுப்பும் ஒரு வகையான விளையாட்டே சிலம்பாட்டம். இது வீரத்தின் அடிப்படையில் எழுந்த விளையாட்டாகும். கோயில் திருவிழாக்கள், திருமணம், பூப்புச் சடங்கு, வரவேற்பு நிகழ்ச்சிகள், இறப்பு, பஜனை, பட்டாபிஷேகம், சிலம்பாட்டப் போட்டி போன்ற சூழல்களில் சிலம்பாட்டம் நிகழ்த்தப் படுகிறது.

சிலம்பாட்டம் தற்காப்புக் கலையாக இருப்பினும், அது நிகழ்த்தப் படும் சமூகச் சூழல்களில் நிகழ்த்தப் படும் பிற கலைகளைப் போன்று பார்த்து இரசிப்பதற்குரிய கலையாகவும் காட்சியளிக்கிறது. இவ்வடிப் படையில் சிலம்பாட்டம் இருவகைப்படும். ஒன்று அலங்காரக் கலை; மற்றொன்று தற்பாதுகாப்புக்கலை. திருவிழாக்கள், சடங்கு போன்ற சூழல்களில் பார்வையாளர்களை மகிழ்விக்கும் நோக்குடன் நிகழ்த்தப் படுவதால் இக்கலை மெருகூட்டப் பட்டு இசைப்பின்னணியுடன், பல்வேறு ஒப்பனைகளுடன் நிகழ்த்தப்படுகிறது. தற்காப்புச் சூழல்களில் ஒப்பனைகள் இல்லாமல் எதிர்த் தாக்குதலை ஈடுகட்டும் வண்ணம் அமைகிறது. இவ்விருவகைச் சூழல்களிலும் இதன் நிகழ்த்தும் முறை வெவ்வேறானவை.

இக்கலை நிகழ்த்தப்படும் சூழலைப் பொறுத்தே அதன் நிகழ்த்தும் முறை அமையும். இக்கலையை நிகழ்த்துவதில் 'கம்பு' மிக இன்றியமையாதது. நிகழ்த்துதலில் பயன் படுத்தப்படும் கம்பின் அளவை அடிப்படையாகக் கொண்டு இக் கலையை இரண்டாகப் பகுப்பர். ஒன்று நெடுங்கம்பு, மற்றொன்று குறுங்கம்பு ஆகும். ஆளுயர அல்லது 6 அடி நீளமுள்ள கம்பு நிகழ்த்துதலுக்குப் பயன்படுத்தப் படுவதாயின் அது நெடுங்கம்பு என்றும், 4 அடி நீளமுள்ள கம்பு பயன் படுத்தப்படுவதாயின் அது குறுங்கம்பு என்றும் அழைப்பர். கம்பின் நீளம் ஆட்டத்திற்கு மிக இன்றியமையாதது என்பர். கம்பின் நீளம் குறைவாக இருப்பின் தற்பாதுகாப்பிற்கு ஏற்றது என்றும் நீளம் மிகுதியாக இருப்பின் அலங்கார ஆட்டத்திற்கு ஏற்றது என்றும் கூறுவர்.

சிலம்பாட்டம் பெரும்பாலும் செண்டை, மத்தளம் போன்ற வாத்தியங்களின் இசைப்பின்னணியில் நிகழும், ஆட்டக்களம் வட்ட வடிவில் அமைந்திருக்கும். நிகழ்த்துநர்கள் ஆசானின் காலைத்தொட்டுக் கும்பிட்டு ஆட்டத்தைத் தொடங்குவர். இவ்வாட்டத்தில் 12 அடவுகள் உண்டு என்பர். ஆசான் மாணவர்களுக்கு இவ் அடவுகளைக் கற்றுக் கொடுக்கும் போது இது முன்னடவு என்று அழைக்கப்படும். மாணவன் தான்



கற்ற அடவை ஆசானின் முன் நிகழ்த்தும் முறை ஆசானுக்கு ஆசான் வேறுபடும். அடவுகளைக் கற்றபின் ஒவ்வொருவரும் தமது நுட்பங்களையும் அழகியல் உணர்வுகளையும் சேர்த்து நிகழ்த்துவர். எனவே, இக்கலையில் பல்வேறு மரபுவழியான பிரிவினர் உள்ளனர். சான்றாக குமரி மாவட்டத்தில் கூடல்வழி, சாமிவழி, பீமன்வழி, நடுவூர்க்கரைவழி என நான்கு வகைகள் உள்ளன. இதில் நடுவூர்க் கரை ஆசான் வழி புகழ் பெற்றது. இவ்வாசானின் மாணவர்கள் மரபுவழியாக அவ்வாசானின் நிகழ்த்தும் முறையைப் பின்பற்றி வருகின்றனர். இதனைப் போன்றே ஒவ்வொரு பகுதியிலும் புகழ்பெற்ற, தனித்தன்மை வாய்ந்த மரபு வழியான ஆசான்வழி முறைகள் உள்ளன. இவ்வழி முறைகள் குறித்து ஓலைச் சுவடிகளும் கிடைக்கப் பெறுகின்றன.

சிலம்பாட்டம் நிகழ்த்துவதில் 'அடவு' என்ற சொல் மிக இறியமையாததாகக் கருதப்படும். 'அடவு' என்பது குறிப்பிட்ட ஓர் உத்தி முறையில் நிகழ்த்தும் முறையைக் குறிப்பதாகும். ஓர் அடவு என்பது பல்வேறு பிரிவுகளைக் கொண்டது. இப்பிரிவுகள் அனைத்தையும் நிகழ்த்தினால்தான் ஓர் அடவு முழுமை பெறும். பொதுவாகச் சிலம்பாட்டத்தில் ஒத்தைச்சுவடு, பிரிவுச்சுவடு, ரெட்டு வீச்சு, ஆயுத முறை, பூட்டுப் பிரிவு, மடு, கிரமம், எடுத்தெறிதல், நெடுங்கம்படி, குறுதடி போன்ற முறைமைகள் இடம்பெறும். சிலம்பாட்டத்தில் ஆட்டமுறையையும், அடவுகளையும் விளக்குவது கடினமாகும். பெரும்பான்மையான ஆட்ட முறைகளை, அவற்றைச் செய்யும் முறையில் மட்டுமே சுட்டிக்காட்ட இயலும். எனவேதான் இக்கலையைக் கற்றுக்கொடுப்பதிலும் நீண்ட நாள் செய்முறைப் பயிற்சி மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

சிலம்பாட்டத்தில் சாதித் தொடர்பான ஆதிக்க முண்டு./குறிப்பிட்ட சாதியினர் தங்களைப் பிற சாதியினரின் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள இக்கலையில் தேர்ந்த பயிற்சி பெறுகின்றனர். வேற்றுச் சாதியினர்க்கு அவர்கள் இக்கலையைக் கற்றுக் கொடுப்பதில் தயக்கம் காட்டுவர். சான்றாக நாடார் சாதியினரிடம் காணப்படும் 'சைலத்'தைக் குறிப்பிடலாம். இதனைப் போன்றே ஆசான்களும் தங்கள் மாணவர்கள், தங்களை விட உயர்ந்துவிடக் கூடாது அல்லது தங்களையே எதிர்த்துவிடக் கூடாது என்பதற்காக எல்லா அடவுகளையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை. சில அடவுகளை இரகசியமாகப் பாதுகாத்துக் கொள்வர். இதனால் இன்று பல அடவுகள் நிகழ்த்தும் முறை அறியப்படாமல் உள்ளன.

சிலம்பாட்டம் நமது பண்பாட்டில் வளர்ந்த சிறந்த உடற் பயிற்சி மற்றும் தற்பாதுகாப்புக் கலையாகும். சமூகச் சூழல்களில் அது பொழுதுபோக்குக் கலையாகவும், தன்னை வளர்த்துக் கொண்ட பன்முகப்பரிமாணம் கொண்ட கலையாகவும் திகழ்கிறது. இருப்பினும் இக்கலைக்குத் தகுந்த ஊக்குதல்கள் இன்மையால் இக்கலை வழக்கிழந்து வருகிறது. தற்காலச் சூழலில் இந்நிலையைப் பயன்படுத்தும் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. உடற்பயிற்சிக் கல்லூரியினர், பாதுகாப்புத் துறை, நிகழ்த்துதல் சார்ந்த பிறகலைகள் போன்றவற்றில் இக்கலையை நவீனப்படுத்திப் பயன்படுத்தலாம். கராத்தே குங்பு போன்ற மேலைநாட்டுக் கலைகள் தற்காலத்தில் நமது பண்பாட்டில் வேகமாகப் பரவி வருவதால், நமது பண்பாட்டில் மலர்ந்த இக்கலை மேலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. எனவே இக்கலையை நவீனப்படுத்தும் முயற்சியும் வளர்த்தெடுக்கும் முயற்சியும் இக்கலைக்குத் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

– நன்றி: இளைஞர் கலைவிழா மலர்



கலை! மனித மனத்தின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு! உள்ளத்து உணர்வுகளின் பிரதிபலிப்பு! தான் வாழ்வதோடு, தன்னைப் படைத்தவனையும் வாழவைக்கும் வல்லமையுடையது கலை! அது காலத்தால் அழியாதது! கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும், நம் ஆன்மாவோடு உறவாடும் ஆற்றல் பெற்றது.

உலகத்தில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, நம் தாய் மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஏனெனில், தமிழ் மொழி மட்டும்தான் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆயிரக்கணக்கான இயற்றமிழ் விற்பன்னர்கள், இசைத்தமிழ் வேந்தர்கள். நாடகத் தமிழ் வல்லுநர்கள் ஆகியோரின் கூட்டுப்படையாக முத்தமிழ் விளங்குகிறது. இதுவே, நம் அன்னைத் தமிழின் தனிச் சிறப்பாக, தரணி எல்லாம் போற்றப்படுகிறது.

தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான, இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை.

# பழவிற்பனையில் முன்னேற்றம் காண...

**எம்.அருணா சேரலாதன்,
துணைப் பேராசிரியர்
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை3.**

**ப**ழங்கள் மிக அதிக அளவில் உயிர்ச் சத்துக்கள், தாது உப்புகள் மற்றும் நார்ச்சத்து கொண்டவை. ஆதலால் அவை ஒரு உன்னத உயர்ந்த உணவாகக் கருதப் படுகின்றன. நமது உணவில் நல்ல மணம், நிறம் மற்றும் சுவையை அவை அளிக்கின்றன. மேலும் பழங்கள் நாம் உடல் நலத்துடன் விளங்கவும் சத்துப் பற்றாக்குறை நோய்களைத் தவிர்க்கவும் மிகவும் அவசிமயான ஒரு நல் உணவாகும்.

நம் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு அதாவது ICMRன் பரிந்துரைப்படி நாம் அன்றாடம் குறைந்தது 30 கிராம் பழங்களை உண்ண வேண்டும். ஆனால், ஒரு சராசரி இந்தியன் சுமார் 4 கிராம் பழம்தான் உண்ணுகிறான் என உணவியல் ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. இதைச் சீர் செய்ய பழங்கள் குறைந்த விலையில் அதிக அளவில் கிட்டும் நிலை உருவாக வேண்டும்.


பழ உற்பத்தி உலகளவில் நன்கு அதிகரித்துள்ளது. நம் இந்திய நாட்டிலும் ஆண்டுதோறும் சாகுபடி முறையில் நல்ல முன்னேற்றங்கள் மற்றும் நல்ல வகைகள் கண்டு பிடிக்கப்பட்டதால், உற்பத்தி நன்கு அதிகரித்துள்ளது. முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் பழச் சாகுபடிக்கு 11.2 இலட்சம் எக்டேர் பரப்பளவு பயன்படுத்தப்பட்டது. ஆனால், இன்று இது 33 இலட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது. அது போல பழச்சாகுபடி மகசூல் 1950 ஆம் ஆண்டில் 282 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இருப்பினும் இதில் 25 முதல் 30 சதம் வரை அறுவடைக்குப்பின் தேவையான வசதிகள் இல்லாததால் வீணடிக்கப்படுகிறது. இப்பெரும் சேதத்தைத் தவிர்த்தாலே நம் நாட்டில் பழங்களின் விலை குறைந்து, கிட்டும் அளவும் அதிகரித்துப் பயன்பெறலாம்.

பழங்களைப் பறித்தவுடன் அவற்றைப் பேணிப் பாதுகாத்து சிறந்த சேமிப்பு முறை தேர்ந்தெடுத்து விவசாயிகள் தங்கள் உற்பத்தியின் முழுப்பயனைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு பழங்களைப் பாதுகாப்பதனால் பல பயன்கள் உண்டு. பழங்களின் சத்துக்கள் பாதுகாக்கப் படுகிறது. ஆண்டு முழுவதும் பழங்கள் கிடைக்க வழி வகுக்கிறது. வேலை வாய்ப்புத் திறனை எற்படுத்துகிறது. வருமானத்தை அதிகரிக்கிறது. மேலும் நல்ல தரமுள்ள பழங்கள் ஏற்றுமதிக்கு உகந்தவையாகின்றன. ஆக நாட்டின் வருமானத்தை உயர்த்தி வளமான வாழ்விற்கு வழி வகுக்கிறது.

பழங்கள் வீணாவதற்குக் காரணங்கள் பல உண்டு. முக்கியக் காரணம் பழத்தின் வடிவ அமைப்பு, அதிக நீர்ச்சத்து, மற்றும் மென்மையான தன்மையாகும். எனவே, அறுவடைக்குப் பின் பழங்கள் எளிதில் வாடி வதங்கி, அழுகிவிடுகின்றன. அதிக நீர்ச்சத்து உள்ளதால், ஏற்ற தட்பவெட்ப நிலை மற்றும் சுற்றுப்புறச் சூழல் இல்லாவிடில் பழங்கள் வறண்டு, வாடிவிடும். அல்லது அதிகமாகப் பழுத்து மிகவும் குழைந்துவிடும். பூஞ்சாளம் மற்றும் நுண்கிருமிகளால் மிகவும் சேதம் ஏற்படுகிறது. பழங்கள் அழுகுவதற்கு முக்கியக் காரணம் ஆல்டர்னேரியா, பாட்ரைடஸ், பெனிசீலியம் போன்ற பூஞ்சாளம் மற்றும் எர்வீனியா, சுடோமாணஸ் போன்ற பாக்டீரியாக்கள் ஆகும்.

இவ்வாறு சேதம் அடையாமல் பழங்களைப் பாதுகாக்க அறுவடை முதல் விற்பனை வரை பாதுகாக்க வேண்டும். பழங்களைப் பறித்தவுடன் அடிபடாமல் சேகரித்து, நன்றாகப் 'பாக்' செய்து, சிறந்த போக்குவரத்து முறையில் எடுத்துச் சென்று சேமிப்புக் கிடங்கில் பழத்திற்கு ஏற்ற தட்ப்வெட்ப நிலையில் பாதுகாக்க வேண்டும்.

பழங்களைப் பாதுகாக்க கடைப் பிடிக்க வேண்டிய முதல் நட



வடிக்கை அவற்றைத் தக்க தருணத்தில் அறுவடை செய்வ தாகும். ஒவ்வொரு பழத்திற்கு அறுவடை செய்ய வேண்டிய நாளை அதன் அளவு, நிறம், மணம், பூவிலிருந்து பழமாகும் வரை நாட்கணக்கு ஆகியவை கொண்டு நிர்ணயிக்கலாம். சில பழங்கள் காயாகவும் சில மரத்திலேயே பழுத்தும் பறிக்கப்படுகின்றன. அறுவடை எப்போதும் குளுமையான காலை நேரங்களில் செய்ய வேண்டும். வெய்யில் அதிகம் இருக்கும்போது செய்தால் பழங்கள் சூட்டினால் வாடிக் கெட்டுவிடும். விடியற்காலையில் அறுவடை செய்ய வேண்டும். அடிபட்டால் நுண்கிருமிகள் நுழைந்து சேதம் விளைவிக்க ஒரு நுழைவாயில் ஆகிறது. மேலும் பழங்களை அறுவடை செய்தவுடன் அதன் வெப்பத்தைக் குறைக்கச் சிறிது நேரம் ஆறவிடவேண்டும். இவ்வாறு செய்வதால் பழங்களின் நீர்ச்சத்து குறையாமல், நெடுநாட்கள் பசுமையாக இருக்கும். காற்றோட்டமாக நிழலில் பழங்களை வைத்தல், தண்ணீரில் கழுவுதல் அல்லது குளிர்ச் சாதனப் பெட்டியில் வைத்தல் போன்ற முறைகள் மூலம் பழங்களின் வெப்பத்தைக் குறைக் கலாம்.



அடுத்து, பழங்களைத் தரம் பிரித்தல் மிகவும் முக்கியமான ஒரு செயலாகும். அடிபட்ட பழங்கள், அழுகியவை, அளவில் சின்னவை ஆகியவற்றைப் பிரித்தெடுத்து நல்ல தரமுள்ள பழங்களை மட்டுமே விற்பனைக்கு அனுப்ப வேண்டும்.

பழங்கள் எளிதில் கெட்டுவிடும் தன்மை உடையன. பாடுபட்டு உற்பத்தி செய்த கனிகள் உழவர் களுக்கு நல்ல பயன் தர பழத்திற்கு ஏற்ற பாதுகாப்பு முறைகளைத் தேர்ந்தெடுத்து சேதத்தைத் தடுக்க லாம்.

வெப்பம் அதிகமுள்ள தமிழ் நாடு போன்ற மாநிலங்களில் பழங்கள் விரைவில் பழுத்து, வறண்டு, அழுகி அல்லது கெட்டு விடும். 'வாக்ஸ்' அல்லது இமல்ஸன் கோட்டிங் கொடுப்பதால் இதைத் தவிர்க்கலாம். வாக்ஸ் இமல் ஸன்கள் காய்கறிகளில் உள்ள பசைப் பொருட்கள், கரும்பு மற்றும் மெழுகு கொண்டு தயாரிக்கப்பட்டு கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. 'வாக்ஸால் டபிள்யூ' மற்றும் 'வாக்ஸால் ஓ' என பெயருள்ள கலவைகளைப் பழங் களின் மேல் தெளித்து அல்லது பழங்களை இமல்ஸனில் முக்கி எடுப்பது கனிக்குப் பாதுகாப்பு ஈந்து மேல்சட்டைபோல் அமை கின்றன. இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் குளிர்ச்சாதன வசதிகள் குறைவு. இந்நிலையில் இமல்ஸன் கோட்டிங் பழங்களின் ஆயுளை பெருக்கித் தரத்தை உயர்த்துகிறது.

இம்முறை குறைந்த செலவுள்ள ஒரு சிறந்த முறையாகத் திகழ்கிறது. சிம்லாவிலிருந்து ஆப்பிள்கள் இந்தியா முழுவதும் கிடைக்க வாக்ஸ் கோட்டிங்தான் கைகொடுக் கிறது. ஜிபரிலிக் அமிலத்தைப் பழங்களின் மேல் தெளித்தல் அல்லது நனைத்தல் மூலமும் பழங்கள் விரைவில் பழுப்பதைத் தவிர்த்து தாமதித்து கனியக் கைகொடுக்கிறது.

திராட்சை, வாழை, ஆரஞ்சு, போன்ற பழங்களை இரசாயன பாதுகாப்பான் கொண்டு பாது காக்கலாம். குளோரின், சல்பர் டை ஆக்சைட், போராக்ஸ், சோடியம் கார்பனேட் டைகுளோரான், காப் டான், தைரம், தையா பேன்டஜால் போன்றவை பழங்களில் அறு வடைக்குபின் நோய்க்கட்டுப்படுத்த உதவுகின்றன. அண்மையில் தையா பேன்ட்ஜால் எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற பழங்களில் உபபோகித்து பலர் நல்ல பலன் கண்டுள்ளனர்.

சுமார் 55 சென்டிகிரேட் உள்ள சூடு நீரில் பழங்களை 5 நிமிடம்

முகசி எடுப்பதன் மூலம் மாம் பழத்தில் 60 முதல் 70 சதம் சேதத்தைக் குறைக்கலாம். பப்பாளி மற்றும் தக்காளியிலும் இம்முறை நல்ல நிறத்துடன் ஒரே சீராகப் பழங்கள் பழுக்க உதவுகிறது.

அண்மையில் பழங்கள் அதிகம் விளையும் தோப்புகள் மற்றும் தோட்டங்களில் குறைந்த செலவில் பழச் சேமிப்புக் கிடங்குகள் கட்டு வதன் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டு உள்ளது. நான்கு பக்க மும் இரண்டு செங்கல் சுவருடன் கொண்ட தொட்டி போன்ற வடிவமைப்பு கொண்டு சேமிப்புக் கிடங்குகள் அண்மையில் ஆராயப் பட்டன. இரண்டு சுவர்களுக்கு இடையே ஆற்று மணல் நிரப்பி தண்ணீர் அன்றாடம் தெளிக்கப் படுகிறது. தொட்டியில் பழங்களை கொட்டி மேலே ஈரமான சாக்குத் துணியால் மூடப்படுகிறது. தொட்டி யின் நான்கு சுவர்களும் மேலே யுள்ள சணல் துணியும் ஈரப் பசையால் குளுமையாக இருக் கின்றன. எனவே, குளிர்ச் சாதனப் பெட்டி போல் குறைந்த வெப்பத்தில் பழங்கள் வாடாமல் குறைந்த செலவில் மின்செலவு மில்லாமல் பாதுகாக்கலாம். இவை 'இவாப்போ கூலிங் சேம்பர்' என அழைக்கப்படுகின்றன. விவ சாயிகள் தங்களிடம் உள்ள பழத்தின் அளவுக்கு ஏற்றவாறு இத்தொட்டிகளை அமைத்துப் பயனடையலாம்.

பழங்களைக் குறைந்த வெப் பத்தில் குளிர்ச் சாதனப் பெட்டிகள் அல்லது கிடங்குகளில் சேமிப்பது மிகவும் சிறந்த முறையாகும். குறைந்த வெப்ப நிலையில் பழங் களைச் சேமித்து வைப்பதால் அவற்றில் ஏற்படும் இரசாயன மாறுதல்கள் தடைப்பட்டு நீண்ட நாட்கள் அவை கெடாமல் பாது காப்பாக இருக்க ஏதுவாகிறது.

அறுவடைக்குப் பின் பழங்களை நன்முறையில் ஓரிடத்திலிருந்து மற் றொரு இடத்துக்கு அனுப்பி விற் பனை செய்து முழுப் பயனடைய மிகவும் தேவையானவை சிறந்த 'பாக்கிங்' பொருட்கள் பழங்களைக் கெடாமல் அதற்கு ஏற்ற முறையில் பாக் செய்து விற்பனைக்கு அனுப் பினால் பழங்கள் பசுமையாக நல்ல தரத்துடன் நெடு நாட்கள் கெடாதிருக்கும். மரப்பெட்டிகள், அட்டைப் பெட்டிகள், பிளாஸ்டிக் டிரேகள், சாக்குகள் போன்ற வற்றைப் பயன்படுத்தலாம். போக்கு வரத்தின் போது பழங்கள் அடிபடாமல் இருக்க வைக்கோல், காகிதத் துண்டுகள், உலர்ந்த இலைகள் போன்றவற்றைப் பயன் படுத்தலாம்.

பாலிதீன் பைகளில் 'பாக்' செய்து விற்பனை செய்யும் முறை தற்போது முக்கியத்துவம் பெற்று வருகிறது. அரை கிலோ அல்லது ஒரு கிலோ எடை கொள்ளும் பாலிதீன் பைகளில் விற்பனைக்கு முன் பாக் செய்து அனுப்புவது பயணத்தில் விளையும் சேதத்தைத் தவிர்த்து விற்பனையை எளி தாக்குகிறது. பாலிதீன் பைகளில் துளையிட்டுப் பழங்களைப் 'பாக்' செய்து சீல் செய்யும் போது அளவான காற்றோட்டத்தினால் பழங்களின் ஆயுள் கூடுகிறது.


ஆரஞ்சு


பப்பாளி

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



# குறளின் குரல்

– கவிஞர் சாமி பழனியப்பன்

**"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்பொ டுயிரிடை நட்பு"** *338*

என்பது நிலையாமை என்னும் அதிகாரத்தில் உள்ள ஒரு குறட்பா. இதற்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர்–

"முன் றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள்ளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோந் தன்மைத்து உடம்பிற்கும் உயிருக்கும் உளதாய நட்பு" என்றார்.

புள் என்னும் சொல், பொதுவாகப் பறவை என்னும் பொருள் படுவதாயினும் நம் நாட்டில் 'புள்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற ஒருவிதப் பறவை உண்டு என்றும், அது முட்டையைவிட்டு வெளியே வரும்போதே பறந்து செல்லும் இயல்புடையது என்றும் பறவை நூல் வல்லுநர் கூறியுள்ளனர்.

புள்ளும் உட்கரு முட்டையும் ஒரே காலத்தில் தோன்றின. இணைந்தே தோன்றின – புள் வெளியேறும் போது, உடல் தோன்றிய முட்டை உடைந்து தனித்துக் கிடந்து சிதைகிறது. அதுபோல உயிர் வெளியேறியதும் உடம்பு தனித்துக் கிடந்து அழிகிறது – அழிக்கப்படுகிறது. முட்டையினின்றும் வெளியேறிய புள் மீண்டும் அம் முட்டைக்குள் வந்து நுழைவதில்லை. நுழைய முடியாது. அதுபோலவே, மனித உடம்பினின்றும் வெளியேறிய உயிரும் மீண்டும் அந்த உடம்பினுள் வந்து நுழைவதில்லை. "இறந்தவர் பிழைத்த தென்ப தில்லை இல்லை இல்லையே".

'குடம்பை தனித்தொழிய' என்ற குறட்பா வாயிலாக நாம் இவ்வளவு உண்மைகளையும் உணர்கிறோம். எனவே, 'குடம்பை' என்பதற்கு, 'முட்டை' என்று பொருள் கொள்ளுவதே முறையானது – சரியானது – வள்ளுவர் கருத்துக்கு ஒத்ததாகும்.

இனி அடுத்த குறட்பா–

**"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (339)**

என்பது. இந்தக் குறட்பாவிற்கும் பரிமேலழகர் கூறுகிற கருத்துரையும், சிறப்புரையும் பின்வருமாறு:

"ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோ டொக்கும். அதன் பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோ டொக்கும். உறங்குதலும் விழித்தலும் உயிர்களுக்கு இயல்பாய் கடிதின் மாறி மாறி வருகின்றாற்போல் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலை பெற்றவாறறிவித்ததற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

இனி இதே குறட்பாவிற்கு மணக்குடவர் எழுதும் உரையும் நயமும் பின்வருமாறு:

**'உறங்குவதனோடு ஒக்கும் சாக்காடு உறங்கி விழிப்பதனோடு ஒக்கும் பிறப்பு'**

"இது, போன உயிர் மீண்டும் பிறக்கும் என்பதூஉம், இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும் போல மாறிமாறி வருஉம் என்பதூஉம் கூறிற்று"

ஆம். 'குடம்பை தனித் தொழிய' என்ற குறட்பா வாயிலாக மறு பிறப்பு இல்லை என்னும் உண்மையான அருமையான உவமை ஒன்றின் மூலம் வலியுறுத்திச் சொன்ன வள்ளுவர், 'உறங்குவது போலும் சாக்காடு' என்ற அடுத்த குறட்பா வாயிலாக மறு பிறப்பு உண்டு என்று வலியுறுத்துவதாகக் கருத முடியுமா? முதற் குறளுக்கும் அடுத்த குறளுக்கும் இடையே இத்தகைய முரண்பாடா? வள்ளுவத்தில் கொள்கைக் குழப்பமா? இந்தக் கொள்கைக் குழப்பத்திற்குக் காரணம் யார்? இந்தக் கேள்விகள் எழத்தான் செய்யும்.

முதலாவதாக, நாம் மேலே குறிப்பிட்ட இரு குறட்பாக்களுமே 'நிலையாமை' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ்தான் வந்திருக்கின்றன என்ற உண்மையை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

'அஞ்சுவ தஞ்சாமை பேதமை' என்றும், 'அச்சம் கீழ்களது ஆச்சாரம்' என்றும் கூறி, அச்சம் மனித ஆச்சாரமல்ல கீழ்களது விலங்குகளது ஆச்சாரம் என்று விளக்கிய வள்ளுவரைப் போல உலகத்தில் ஒரு பேரறிஞனை நாம் காண முடியாது. இப்படி, மனித சமுதாயத்தினைப் புலை அச்சத்தினின்றும் விடுவித்து, வாழ் நாளில் இயன்றவரை அறத்தினைச் செய்திட வலியுறுத்துவதே வள்ளுவரின் நோக்கம். 'நிலையாமை' என்ற அதிகாரமே அரண் செய்வதேயாம்.

உலகப் புகழ்பெற்ற இலக்கியப் பேரறிஞன் பேகன் என்பார், 'குழந்தைகள் இரவைக் கண்டு அஞ்சுவது போல மனிதர்கள் சாவுக்காக அஞ்சுகிறார்கள்' என்றார்.

'சாவு ஓர் உறக்கம்; மறதி' என்றார் வேர்ட்ஸ் ஓர்த் என்ற பெரும்புலவன். 'நாளும் நாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாததென்னே?' என்றார் வளையாபதி ஆசிரியர். 'அஞ்சுவதியா தொன்று மில்லை; அஞ்ச வருவது மில்லை' என்றார் அப்பரடிகள்.

இவ்வாறெல்லாம் பலவாறாகப் பாடி, மக்களிடத்தே தோன்றிய அச்சப் பேயை விரட்டி அடித்திட முயன்ற அறிஞர் பெருமக்கள் ஏராளம் ஏராளம்.

மரணத்தை எண்ணி மக்கள் அஞ்சக்கூடாது அச்சத்தை அவர்கள் உள்ளத்தினின்றும் விரட்டியடிக்க வேண்டும் என்பதே அந்த மேதைகளின் பொதுவான கருத்து.

பொதுவாக, எண்ணங்களின் எழுச்சியும் கூடப் பிறப்பிறப்பின்பாற் பட்டவையே. இந்தப் பேருண்மையை நாம் உணர்ந்து ஏற்றுக் கொண்டால், நாம் நமது வாழ்வில் எத்தனையோ முறை பிறந்திருக்கிறோம் என்பதை உணரலாம்.

எனவே, மேற்கூறியவற்றையெல்லாம் நன்றாக நினைவில் வைத்துக் கொண்டு, "உறங்குவது போலும் சாக்காடு" என்ற குறட்பாவிற்கு உரை காண முற்பட்டால்,

"உலகில் பிறப்பும் இறப்பும் இயல்பாக நடைபெறுகின்றன. சாவைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை" என்ற தெளிவான முடிவிற்கே வருவோம்.

அவ்வாறின்றி மேலே நாம் எடுத்துக் காட்டிய குறட்பாவின் மூலம், வள்ளுவர் மறுபிறப்பை உணர்த்துகிறார். ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று கொண்டு, முன்னுக்குப் பின் வள்ளுவர் முரண்படுகிறார் என்று கருதுவதும் கூறியதும் சரியன்று. வள்ளுவத்தில் முரண் இல்லை. வள்ளுவத்தைத் தெளிந்து உணராமல் உரை காணுவோர் உள்ளத்தில் தான் முரண்!

---

# தமிழ்ச் சிந்தனையாளர்



'உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல் தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரிகம் தமிழ் நாகரிகம்! அந்தப் பெருமைமிகு தமிழ் இனத்தின் தலையாய நூல் திருக்குறள்! இருபது நூற்றாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது. இந்த நூற்றாண்டுகளுக்கும் உரியதாக விளங்க முடியுமென்றால், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் ஏற்றது என்றால், அந்த ஒப்பிலாச் சிந்தனைச் செறிவை என்னவென்று சொல்வது?

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது சாதாரண மக்களாலும் புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத்தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது நடையிலே எளியது ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர், திருவள்ளுவர்.

தமிழ்நாடு புகழ் கண்டதற்கு, ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வான்புகழ் கொண்டதற்கு ஒரே காரணம், வள்ளுவர்! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். கவிஞர்கள் வார்த்தைகளைச் செதுக்கிச் செதுக்கி எழுதுகிறவர்கள்.

வள்ளுவனைத் தமிழ்நாடு ஊருக்குத் தரவில்லை ஒரு நாட்டுக்குத் தரவில்லை ஓர் இனத்துக்குத் தரவில்லை ஒரு மொழிக்குத் தரவில்லை உலகுக்கே தந்தது என்று உணர்ந்து உணர்த்தினார் பாரதியார்.

'திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவொளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது' என்று தீர்ப்புக் கூறினார் தந்தை பெரியார்.

There hardly exists in the literature of the world a collection of maxims in which, we find so much lofty wisdom.

அதாவது, 'உலக இலக்கியம் எதனினும், இவ்வளவு உயரிய ஞானத்தை உள்ளடக்திய அறவுரைத் தொகுப்பு அமைந்ததில்லை' என்கிறார் ஆல்பிரட் சுவிட்சர்.

மன்னருக்கு நீதி சொன்னவர்கள், சின்னவருக்குச் சொன்னதில்லை. எளியோருக்குச் சட்டமியற்றியவர்கள், வலியோருக்கு அதை வகுத்ததில்லை. இந்த மரபை, 2,000 ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு தமிழ்ச் சிந்தனையாளர் உடைத்திருக்கிறார் என்றால், அது தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். அரசருக்கு, அமைச்சருக்கு, மக்களுக்கு, ஆசிரியருக்கு, மாணவருக்கு, தலைவருக்கு, தொண்டருக்கு, இல்லறத்தாருக்கு, துறவறத்தாருக்கு, பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு, ஆடவருக்கு, பெண்டிருக்கு என்று எல்லோருக்கும் வாழும் வழியையும், நெறியையும் வகுத்துக் கொடுத்தவர், வள்ளுவர். அவர் ஓர் யுகத்துக்குரியவரல்லர் எல்லாக் காலத்துக்கும் ஏற்றவர்.



—'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.



(Rheumatic Fever)

# மூட்டுவீக்கமும் இதயபாதிப்பும்

டாக்டர் எம். தனபால், எம்.டி., டி.எம்.,

எப்போதும் இன்முகத்தோடும் சுறுசுறுப்போடும் துள்ளித்திரிகின்ற இளம் சிறுவர்களின் மூட்டுகளைத் தாக்கி இருதயத்தையும் பாதிக்கச் செய்து, வாழ்வில் ஒரு நிலையான சோகத்தை உருவாக்கக் கூடிய மூட்டுவாத ஜுரத்தைப் பற்றிய முக்கியச் செய்திகளை அவசியம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஐந்து வயது முதல் 12 வயது வரை உள்ள சிறுவர்களைத் தாக்குகின்ற இந்தக் கொடிய வியாதி, ஒருவிதக் கிருமியினாலேயே ஏற்படுவதாகும்.

சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் தொண்டைக் கம்மல் போன்ற நோய்களை சரிவரக் கவனியாமல் விட்டுவிடுவது தொண்டைக் கமறலை உண்டாக்கும். Bhalinolytic Streptococci என்னும் கிருமி, அடிக்கடி தாக்குதல் நடத்தி, இரத்தத்தோடு கலந்துவிடுகிறது. இவ்வாறு கலந்த அக்கிருமியானது குழந்தைகளின் மூட்டுகளுக்கு மேலே இருக்கும் ஒரு மெல்லிய ஜவ்வைத் தாக்குகிறது.


இந்தக் கிருமியின் தாக்குதலும், அதன் வரவால் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்களும் சேர்ந்து, இருதயத்தைப் பாதிக்கிறது.

இதயத்திலும் மூட்டுகளிலும் உள்ள மெல்லிய ஜவ்வு போன்ற Connection tissue என்னும் தசைநார்களின் ஒரே விதத் தன்மையைக் கொண்டிருப்பதால், மூட்டுகள் தாக்கப்படும் போதே இருதயத்தின் வால்வுகளும் தாக்கப் படுகின்றன.

**இருதயம் பாதிப்பது எப்படி?**

இருதயத்தில் மொத்தம் 4 வால்வுகள் இருக்கின்றன. இதில், இடதுபக்கத்தில் உள்ளது Mitral Valve என்னும் ஈரிதழ் வால்வு. நுரையீரலிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தம், இதன் வழியாகத்தான் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் இரத்தத்தை Pump செய்து அனுப்பக்கூடிய மிக முக்கியமான இடதுபக்க இருதய அறைக்கு (Left ventricle) செல்ல வேண்டும்.

இந்த வால்வானது பாதிக்கப்பட்டால், சுத்தம் செய்யப்பட்ட இரத்தம், உடலின் பல்வேறு பாகங்களுக்கும் செல்வதில் தேக்கம் ஏற்பட்டுவிடும். இந்த நிலை உண்டானால் இரத்தம் சரியான ஓட்டமில்லாமல் ஆங்காங்கே தேங்கி நின்று, நுரையீரலும் அதன்பின் வயிறு. கைகால் போன்ற பாகங்களிலும் வீக்கம் உண்டாகி குழந்தைகள் சளித்தொல்லை, மூச்சுத் திணறல், மார்பு வலி போன்ற கொடுமையான துன்பங்களுக்கு ஆளாகிவிடுவார்கள்.



**மூன்று வகையான பாதிப்புகள்**

குழந்தைகளுக்கு இப்படி ஏற்படுகின்ற பாதிப்புகளை மூன்று வகையாக நாம் பிரிக்கலாம்.

1. மூட்டுவாத ஜுரம் (Rheumatic Fever) மூட்டுகளையும், இருதயத்தையும் பாதிக்கின்றபோது, மேலே நாம் குறிப்பிட்ட கிருமியின் ஆதிக்கம் அதிகமாக இருந்தால், மூட்டுகளும் இருதயமும் ஒரு சேரப் பாதிக்கும். இதனால் இருதயத்தின் வால்வுகளும், தசை நார்களும் மிகவும் சீர்கேடு அடைந்துவிடும்.

2. மூட்டுகள் பாதிக்கப்படும் போது, இருதயப் பாதிப்பு உடனடியாக வெளியே தெரியும் என்பதில்லை. ஆனால் அப்படியொரு நிலை உண்டாகி, சில ஆண்டுகள் நீறுபூத்த நெருப்பு போல் இருந்து, அதனால் இருதயத்தின் வால்வுகள் சுருங்கி, நாளடைவில் இரத்த ஓட்டம் தடைப்படும். அப்போதுதான் அதன் மோசமான விளைவுகள் உணரப்படும். இது இரண்டாவது நிலை.

இப்படி உடனே வெளியே தெரியாத நிலைமை இருப்பதால்தான் 'ரொமாட்டிக் பீவர்' என்கிற மூட்டுவாத ஜுரத்திற்கு முழுமையாக ஆளான அவர்களிடம் "உங்களுக்கு இதற்கு முன் மூட்டு வலி வந்ததுண்டா?" என்று கேட்டால், "இல்லை" என்று உடனே பதில் சொல்லிவிடுவார்கள்.

ஏனென்றால், மூட்டுகளைப் பாதித்த சுவடு தெரியாமலே இருதயப் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள்

இந்த வகையினர். இவர்களுக்கு சிறுவயதில் ஏற்படும் மூட்டு வந்த ஜுரத்தை சாதாரணமானதுதான் என்று அவர்கள் அலட்சியப் படுத்தியவர்களாக இருப்பார்கள்.

மூன்றாவது நிலைக்கு ஆளான வர்களை கொஞ்சம் அதிர்ஷ்ட சாலிகள் என்றே கூறலாம். ஏன் தெரியுமா? இந்தக் கிருமியின் ஆதிக்கம் சற்றுக் குறைவாக இருப்பதால், மூட்டுகளை மட்டும் தாக்கி, இருதய பாதிப்பு ஏற்படாமல் நூலிழையில் தப்பியவர்கள் இவர்கள்.

**இருதயத்தின் பாதிப்புகள்**

முன் சொல்லப்பட்டது போல, இருதயத்தில் உள்ள 4 வால்வுகளில் பெரும்பாலும் இடது பக்கம் உள்ள Mitral Valve என்ற ஈரிதழ் வால்வுகளையும், இருதயத்திலிருந்து உடலின் பல்வேறு பாகங்களுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் மகாதமனியில் உள்ள Aotric Valve என்னும் மிக முக்கிய வால்வையும் மிக மோசமாக இந்தக் கிருமி தாக்குகிறது.

உடலின் பல்வேறு பாகங் களிலிருந்து இருதயத்தின் வழியாகச் சுத்தப்படுத்தப்படுவதற்காக நுரையீரலுக்குச் செல்லும் இரத்தம் Tricustid, Pulmonary ஆகிய வால்வுகளின் வழியாகத்தான் செல்ல வேண்டும். இதில் அசுத்த இரத்தத்தைக் கண்காணிக்கும் இந்த Tricustid Valve என்ற மூவிதழ் வால்வும், நுரையீரலுக்கு எடுத்துச் செல்லும் Pulmonary Artery என்கிற இரத்த நாளமும் இதனால் பாதிக் கப்படுகின்றன.

முன்பு நாம் குறிப்பிட்டது போல, ஈரிதழ், மூவிதழ் வால்வு களின் சுருக்கங்கள், மகாதமனியில் உள்ள அயோட்ரிக் வால்வின் முடக்கம் – அதனால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவை மட்டுமல்லா லாமல், அக்கிருமியின் ஆவேச நிலையினால் வால்வுகள் பழுதடைந்து, இரத்த ஓட்டம் பின் னோக்கிச் கசியும் மிக மோசமான நிலைமையும் ஏற்படுவது உண்டு. இதனால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மூச்சுத் திணறல், நெஞ்சு வலி, கை கால் வீக்கமெல்லாம் ஏற்பட்டு படுக்கையாகவே இருக்கவும் நேரிடக்கூடும்.

**இவர்களை எப்படிக் குணப் படுத்துவது?**

'ரொமாட்டிக் பீவர்' தாக்கி னாலே, அடுத்து இதய பாதிப்பு ஏற்படுவது நிச்சயம். ஆகவே, நோய் வருமுன் எச்சரிக்கையாக இருந் தால்தான் இந்தக் கொடுமை களிலிருந்தெல்லாம் தப்பிக்க முடியும்.

ஒருவர் அந்நோய்க்கு ஆட் பட்டால், மருந்துகளைக் கொடுத்து மூச்சுத் திணறல், நெஞ்சுவலி போன்றவைகளைக் குணப்படுத்தி, அவரை ஓரளவுக்குச் சீராக்கிவிட முடியும். ஆனால் ஒன்று, முடங்கிய வால்வையும், சுருக்கமான வால்வு களையும் அறுவைச் சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும்.

கிருமிகளால், வால்வுகள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டு, இரத்தக் கசிவு ஏற்படும் நிலைக்குப் போய் விட்டால் Open Heart Surgery செய்தாக வேண்டும். ஆகவே, வருமுன் காப்பது ஒன்றுதான் இக்கொடுமையிலிருந்து மீளும் வழியாகும்.

**வருமுன் காப்பது எப்படி?**

குழந்தைகளுக்குத் தொண்டைக் கமறலோ, தொண்டைப் புண்ணோ ஏற்பட்டால் அதைச் சாதாரணமாக எண்ணிவிடாமல், உடனடி நிவா ரணத்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

வீடுகள் காற்றோட்டமின்றி நெருக்கடியாக இருப்பதும், சுகா தாரமற்ற சந்தடி மிகுந்த வாழ்க் கையும் இந்த வியாதிக்குப் பெரும் வரவேற்பளிப்பதாகும். ஆகவே சுற்றுப்புறத் தூய்மையைப் பாது காக்க வேண்டும்.

'பட்டகாலிலே படும்' என்றோர் பழமொழி உண்டல்லவா? அதே போல, இந்நோய் கண்டோர், மீண்டும் மீண்டும் இக்கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாக நேரிடலாம்.



ஆகையால் 'ரொமாட்டிக் பீவருக்கு' ஆட்பட்டோர் மேற்கூறிய 3 நிலைமைகளில் எந்த நிலைமை யினர் ஆனாலும் சரி, அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோர் என்றாலும் சரி மூட்டுவலி ஏற்பட்டு, இருதயப் பாதிப்பிற்கு ஆளான அனைவருமே பென்சிலின் தடுப்பு மருந்தை 21 நாட்களுக்கு ஒரு முறை வாழ்நாள் முழுதும் கண்டிப்பாகப் போட்டுக்கொண்டே ஆகவேண்டும்.

3வது நிலையில் சொல்லப் பட்டது போல, இதய பாதிப்பின்றி மூட்டுவலி மட்டுமே உள்ளோர், 40 வயது வரை பென்சிலின் தடுப்பு ஊசியை 21 நாட்களுக்கு ஒரு முறை போட்டுக்கொள்ள வேண்டும்.

**'அலர்ஜி' என்றால் என்ன செய்யலாம்?**

சில பேருக்கு பென்சிலின் அலர்ஜி ஏற்படக்கூடும். அப்படிப் பட்டவர்கள் அஞ்சத் தேவை யில்லை. 'எரித்ரோமைசின் சல்பா டயசின்' போன்ற மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த நோய் வராதிருக்கவும், வந்தபின் நீக்கவுமான மருந்துகள் பற்றி நாடெங்கும் இன்னும் மருத்துவ ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன, வந்த பின் தொல்லைப் படுவதைவிட வருமுன் காப்பதே நல்லது. மூட்டுவீக்கமும் இதய பாதிப்பும் வராதிருக்க விரும்பு வோர் யாரானாலும் சரி, அவர்கள் ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ லில் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டே ஆக வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


M 8676
Licence No.TN/MS(C)/RP-23